Registered as a News Paper

# ஈழநாதம்

Eelanatham வெள்ளிநாதம்

பக்கங்கள்:16 விலை:12.00

நாதம் 13 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 31 16 - 08 - 2002 வெள்ளிக்கிழமை ஓசை 179

லாலா சோப் சன்சயின் சோப்

எமது வன்னி மண்ணில்
எல்லா இடத்திலும்
சகல கடைகளிலும்
விற்பனையாகின்றது.

ஒன்றின் விலை - 13.00

(சி.6999)

லாலா சோப் தொழிலகம்
அச்சுவேலி

இயல்பு நிலை



பக்கம்- 03

இது நான்காம் உலக மகா யுத்தம்



பக்கம்- 05




பக்கம்- 11








# தாய்லாந்து சமாதான பேச்சில் எட்டப்படும் தீர்வை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றில் பலம் உண்டு

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

**தாய்லாந்து பேச்சுவார்த்தைகளில் சிறிலங்காவின் இனப் பிரச்சினைக்கு எந்தவொரு அரசியல் தீர்வு காணப்பட்டாலும் அதனை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்தில் போதிய ஆதரவு இருப்பதாக சிறிலங்கா அரச தரப்பு தெரிவித்துள்ளது.**

அரசியல்யாப்பை திருத்த தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தமக்கு உறுதியாக உள்ளதாக சிறிலங்காவின் அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் கட்சி பேதங்களை மறந்து சமாதான முயற்சிகளில் தான் நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளும்படி ஜீ.எல்.பீரிஸ் அரசியல்வாதிகளைக் கேட்டுக் கொண்டார்.

வரலாற்று சிறப்பு மிக்க வாய்ப்பில் சிறிலங்கா மக்களின் எதிர்காலம் சமாதான நடவடிக்கையில் தான் தங்கியுள்ளது என்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்தோடு நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு சனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அரசியல் யாப்புத் திருத்தம் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சியின்படி நடந்து கொள்வதற்கு வகை செய்யும் ஏற்பாடுகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த திருத்தங்களை அங்கீகரிப்பதற்கு தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலம் அரசிற்கு கிடைப்பது உறுதியென்றும் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக நடந்த பேச்சுவார்த்தைகளின் போது ஒத்துழைப்பு வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை அடைவதற்கு அரசியல் இஸ்திரத்தன்மை இருக்க வேண்டும். அதற்கு நாடாளுமன்றில் ஸ்திரத்தன்மை இருப்பது தலையாய தேவையாகும். நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு ஏற்படக் கூடிய எந்தவித அச்சுறுத்தலும் சமாதான நடவடிக்கைகளுக்கு தடையாக இருக்குமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



ஒஸ்லோ பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அவரது பாரியாரும்.



நோர்வே தரப்பினருடன் அரசதரப்பு பிரதிநிதிகள் பேச்சில் ஈடுபட்டுள்ளதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

## விடுதலைப்புலிகள் மீதான தடை முதலாம் திகதியளவில் நீக்கப்படும்

விடுதலைப்புலிகள் மீதான தடை தாய்லாந்து பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு பத்து நாட்களுக்கு முன்னர் நீக்கப்படுமென சிறிலங்கா அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படும் பட்சத்தில் மட்டுமே விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள முடியுமென விடுதலைப்புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான முன்னெடு ப்புக்கள் நடந்துவரும் இவ்வேளையில் விடுதலைப் புலிகள் மீதான தடை அவசிய மில்லை என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## சனாதிபதிக்கு எதிரான நடவடிக்கைகளை தடுக்க பொ.ஐ.முன்னணி விசேடகுழு அமைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சியை தடுத்து அதற்கான மாற்று வழி குறித்து ஆராய்வதற்காக பொதுசன ஐக்கிய முன்னணி விசேட குழு ஒன்றை அமைத்துள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் இது குறித்து கொழும்பில் விரிவாக ஆராயவென இந்த குழுவை அமைத்துள்ளனர்.

சனாதிபதி மாளிகையில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அமைக்கப்பட்ட இக்குழு இருவார காலத்திற்குள் தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக ஐக்கிய தேசிய முன்னணியினர் சனாதிபதி சந்திரிக்காவிற்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது

ஈழநாதம்
EELANATHAM வெள்ளிநாதம்
யாழ் சாலை. கிளிநொச்சி 16-08-2002

## மீண்டும் உயிர்க்கும் நம்பிக்கைகள்

கடந்த மூன்றுமாத காலமாக ஒரு தேக்கநிலையில், எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் தளர்வுறும் வகையில் இருந்த, அமைதிப் பேச்சுவார்த்தை தொடர்பான முன்னெடுப்பு நகர்வுகள் கடந்த இரண்டு வாரங்களாக மீண்டும் சற்று சுறுசுறுப்படைய ஆரம்பித்துள்ளது.

கடந்த மாத இறுதியில் லண்டனில் உள்ள நோர்வே தூதரகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரும் பிரதமர் ரணிலின் நெருங்கிய சகாவுமான மிலிந்த மொறகொடவும் முதன்முதலாகச் சந்தித்து தாய்லாந்தில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ள சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான முன்னோடி நடவடிக்கைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பேசியதையடுத்து இந்தச் சுறுசுறுப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அந்த சந்திப்பையடுத்து கொழும்பு திரும்பிய மொறகொட பிரதமர் ரணிலோடு, அச்சந்திப்பு தொடர்பான விடயங்களை விபரித்ததையடுத்து நேற்று முன்தினம் மீண்டும் அமைச்சர் மொறகொடவும், ஆலோசகர் பாலசிங்கமும் நோர்வேயில் சந்தித்து பேசியுமுள்ளார்கள். பேச்சுவார்த்தைகளின் முழுமையான விபரங்கள் பல்வேறு காரணங்களுக்காக உடனடியாக வெளிப்படுத்த இயலாது என்பது தவிர்க்க முடியாத உண்மையேயாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்புவதற்கும், காலதாமதப்படுத்துவதற்கும், ஏன் அத்தகைய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் முன்னரே ரணில் தலைமையிலான அரசைக் கலைப்பதற்கும் கூட சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான பொ.ஐ.முன்னணி ஜே.வி.பியுடனும் ஏனைய சிங்கள பேரினவாத அமைப்புகளுடனும் சேர்ந்து கடுமையான எதிர்பிரசார நடவடிக்கைகளையும் 'சதி' முயற்சி உட்பட பல்வேறு தந்திரோபாயங்களையும் கையாண்டு வருகின்றது.

நோர்வே அனுசரணையுடன் இப்போதைய சமாதான நடவடிக்கை ஒரு வளர்ச்சிக் கட்டத்தை நோக்கி மெதுவாகவேணும் சென்று கொண்டிருக்கையில், முன்னாள் சிறிலங்கா வெளியுறவு அமைச்சரும் சனாதிபதி சந்திரிகாவின் வெளியுறவு ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் மறந்து போய்விட்ட 'லியாம் பொக்ஸ்' உடன்படிக்கையை மீளக் கிளறி எடுத்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென அறிக்கையொன்றினை வெளியிட்டு தனது 'சபைகுழப்பித் தனத்தை' பகிரங்கப்படுத்தியிருக்கிறார்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சி பலமானதாக இருந்த காலத்தில் 'லியாம் பொக்ஸ்' உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்தி அந்த உடன்படிக்கையின் பிரகாரம் சமாதான முயற்சியை முன்னெடுக்க அதிகபட்ச வாய்ப்பிருந்தும், அப்போதைய போர்க்கள வெற்றிகளின் திமிரில் இருந்த சந்திரிகா அரசு, ஐ.தே கட்சி தம்முடன் ஒன்றிணைந்து செயற்படவில்லை என நொண்டிச்சாட்டுக் கூறிக்கொண்டு அந்த உடன்படிக்கையை கிடப்பில் போட்டது கதிர்காமர் அமைச்சராக அங்கம் வகித்த சந்திரிகா அரசாங்கமேதான்.

அப்போது பேச்சுவார்த்தையின் மூலம் சமாதானத் தீர்வொன்றைக் கொண்டுவருவதை விட போர்மூலம் விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் ஒடுக்குவதே சிறந்தது என்ற முடிவே சந்திரிகாவினதும் கதிர்காமரினதும் தேர்வாகவும் இருந்தது. லியாம் பொக்ஸ் உடன்பாடு மறக்கப்பட்ட•ஒன்றாயிற்று.

பொதுத்தேர்தலின் பின்னர் ஆட்சி மாறியதும் நோர்வேயின் அனுசரணையை சமாதான முயற்சிகளுக்காக நாடிய ரணிலின் அரசு, விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான புறச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்தமையும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற சமாதான நகர்வுகளும் அனைவரும் அறிந்த விடயங்களே...

இப்போது முன்னெடுக்கப்படும் சமாதான நகர்வுகள் வெற்றி பெறுமேயானால் சந்திரிகாவும் அவரது பொ.ஐமுன்னணியினரும் விலாசமற்றுப் போய்விடுவார்கள் என்ற அச்சமே இன்று அவர்களை விழிபிதுங்க வைக்கும் விடயமாகும். இதுவே அவர்கள் சமாதான முயற்சிகளை குழப்பமுனைவதற்கான காரணமுமாகும்.

ஏற்கனவே மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து போய்க் கொண்டிருக்கும் சந்திரிகாவும் அவரின் சகபாடிகள் மற்றும் பரிவாரங்களும் இத்தகைய சமாதான விரோத முனைப்புகள் மூலம் மேலும் முகவரியை மட்டுமல்ல முகத்தையும் இழந்தவர்களாகப் போகின்றனர் என்பதே உண்மையாகும்.

ஆனால் அனைத்திற்கும் சமாதானம் பற்றியும், தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஒரு நீதியான, நியாயமான, கௌரவமான தீர்வினை வழங்குவது குறித்தும் சிறிலங்காவின் பிரதமர் ரணிலுக்கு துணிச்சலும், விருப்பமும் அதற்காக முனைந்து செயற்படும் ஆர்வமும் இருக்க வேண்டும். அதுவே மிக முக்கியமாகும்.

இதைவிடுத்து பேரினவாதிகளின் அச்சுறுத்தலுக்குக் கட்டுப்பட்டு எதிர்க்கட்சிகளின் கூச்சல்களுக்கு அஞ்சி சமாதான நகர்வுகளின் ஆத்மார்த்தமான ஈடுபாடின்றி அவர் செயற்படுவாரேயானால் அது எதிர்க்கட்சிகளுக்கு சாதகமான சூழலையே உருவாக்கும் என்பதையே அறிவுறுத்த விரும்புகிறோம்.

எனவே இப்போது ஏற்பட்டுள்ள சுறுசுறுப்பு 'சமாதானத்தை' எத்தகைய இடர்களையும் தகர்த்து முன்னெடுக்கும் ஒன்றாகத் தொடர வேண்டும் என்பதே பேரினவாதிகளல்லாத அனைத்து மக்களதும் விருப்பமும் நம்பிக்கையுமாகும்.

# வான்படை சரக்கு விமானம் களுத்துறையில் வீழ்ந்து நொருங்கியது

(கொழும்பு)

சிறிலங்காவின் களுத்துறைப் பகுதியில் நேற்று நண்பகல் சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான வானூர்தி விபத்துக்குள்ளாகி எரிந்து அழிந்துள்ளது.

வடபகுதி சிறிலங்கா படையினருக்கான பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு பயன்படுத்தி வந்த சரக்கு வானூர்தியே நேற்று அழிந்துள்ளது.

நேற்று பரீட்சார்த்த பயணத்தை மேற்கொண்ட பத்து நிமிடத்தில் விபத்து நிகழ்ந்துள்ளதாக சிறிலங்கா வான்படைத் தளபதி எயார் மார்சல் டொனால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இயந்திரத்தில் தீப்பற்றியதாகவும் ரத்மலான் விமான நிலையத்திற்கு திரும்பி வர இருப்பதாக விமான ஓட்டி கூறியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் விமான ஓட்டிகள் இரண்டு பேரும் தொழில் நுட்பவியலாளர் மூன்று பேருமாக ஐந்து பேர் இவ் விபத்தில் அழிந்துள்ளனர்.

இவ் வானூர்தி இழக்கப்பட்டமை சிறிலங்கா வான்படைக்கு இழப்பு எனத் தெரிவித்த வான்படைத் தளபதி இதனை விட பெரும் இழப்பு அனுபவமிக்க அதிகாரிகளை சிறிலங்கா வான்படை இந்த விபத்தில் இழந்திருப்பது எனவும் தெரிவித்துள்ளார்.

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் பாலசிங்கம் ஒஸ்லோவில்சந்திப்பு

(ஒஸ்லோ)

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் அன்று மாலை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களும் அவரது பாரியாரும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றசனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

நல்லெண்ண அடிப்படையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் நோர்வே தரப்பு அனைத்து பிரதிநிதிகளும் கலந்துகொண்டுள்ளனர். இப் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு அன்ரன்பாலசிங்கம் அவர்களும் அவரது பாரியாரும் லண்டன் திரும்பியுள்ளனர்.

## தேர்வு நிலைய இடமாற்றம்

அக்கராயன் ம.வி.யில் நடைபெற இருந்த வட இலங்கை சங்கீத சபையின் பரதம், நாடகமும், அரங்கியலும், மிருதங்கம், சங்கீதம் ஆகிய செயன்முறைத் தேர்வுகள் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது அத்துடன் 17ம், 18ம் திகதிகளில் நடைபெற இருந்த நாடகமும் அரங்கியலும், மிருதங்கம் ஆகிய தேர்வுகள் முறையே 20ம், 21ம் திகதிகளில் நடைபெறும். பரீச்சார்த்திகளின் கவனத்திற்கு நடனம், நாடகமும் அரங்கியலும் பரீச்சாத்திகள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும், சங்கீதம், மிருதங்கம் பரீச்சாத்திகள் கிளி.மத்திய கல்லூரியிலும் தேர்வுக்கு தோற்றுமாறு கிளி வலய கல்விப் பணிப்பாளர் திரு.ப.அரியரத்தினம் அவர்கள் அறியத்தருகின்றார்.

## இலவசக் கண்ணாடி பெறுவோர் கவனத்தில் கொள்க

(அலுவலக நிருபர்)

கிளி.மாவட்டசமூக சுகாதார அபிவிருத்திச் சபையில் இலவசக் கண்ணாடி பெறுவதற்கு விண்ணப்பித்த கீழ்கண்ட பெயர்களையுடையவர்கள் எதிர்வரும் 18ம் திகதிக்கு முன்னதாக சமூகசுகாதார அபிவிருத்திச் சபையுடன் தொடர்பு கொள்ளும்வண்ணம் கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி ச.விக்கினேஸ்வரன் வேண்டுகை விடுத்துள்ளார். 1. பே.செபமாலை(222 ஈசன்கடைஒழுங்கை ஜெயபுரம்), 2. மா.இரத்தினம் (வசந்தநகர்,திருமுருகண்டி),3. பூ.யோகம்மா(114 ஸ்கந்தபுரம்),4. ந.சின்னையா(4ம்துண்டு,கோணாவில்) 5. தி.சிவயோகம்(உபதபாலகம், உருத்திரபுரம்), 6. க.தணிகாசலம்(சாமிப்புலம்,பூநகரி), 7. இ.புஸ்பராணி(56 ஸ்கந்தபுரம்), 8. இ.விஜயராணி (கெங்காதரன் குடியிருப்பு அக்கராயன்) 9.செ.யசிந்தாமேரி(155ம்கட்டை, குழந்தையேசு ஆலயம் முன்பாக) 10. பெ.சந்திரசேகரம்(விடந்தைகோட்டைகட்டியகுளம்), 11.ப.லலிதா (1020திருநகர்,கிளிநொச்சி), 12.க.செல்லத்துரை(விவேகானந்தநகர், கிளிநொச்சி)

(சோ)

# வடக்கு கிழக்கு புனரமைப்பிற்கு பாரிய நிதி உதவி வழங்க திட்டம்

-ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவிப்பு

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பாரிய உதவிகள் வழங்க திட்டமிட்டிருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இன்றைய நிலையில் சிறிலங்காவின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மேலதிக நிதி உதவிகளை வழங்குவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

கடந்த காலத்தில் வழங்கப்பட்ட உதவிகளுடன் மேலும் அறுபது கோடி அமெரிக்க டொலர் கடனுதவி வழங்க திட்டமிட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2003ம் ஆண்டிலிருந்து 2005ம் ஆண்டு வரையான மூன்று வருட காலத்தில் இந்த உதவியை வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதுடன் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து தாம் அவதானித்து வருவதாகவும் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.



# பிரமுக அறிமுகம்



## சிறிலங்காவின் புதிய விமானப்படைத் தளபதி ஏயர் வைஷ் மார்ஷல் டொனால்ட் பெரேரா

தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாய் பரிமாணம் கொள்ளத் தொடங்கிய 1983 ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கமே வடக்கு கிழக்கு வாழ் தமிழ்மக்கள் மீதான வான்வழித் தாக்குதல் நடவடிக்கைகள் பெரும்பாலானவற்றில் இவர் பங்காளியாக இருந்தவர்.

சிங்கள அரசுகளின் கட்டளைகளை சிரமேற் கொண்டு அப்பாவித் தமிழர்கள் மீது கண்மூடித்தனமாகவும் காட்டு மிராண்டித்தனமாகவும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்திய ஆயிரக்கணக்கிலான தமிழ்மக்களை பெண்கள், குழந்தைகள், வயோதிபர், மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் எனப்பல தரப்பினரையும் கொன்றழித்த சிறிலங்கா விமானப்படையில் சிங்கள பாதுகாப்பு நடவடிக்கைகளில் இவருக்கும் கணிசமான பங்கு இருக்கவே செய்கிறது.

அதனால் தான் இவருக்கு -

விஷிஸ்ட சேவா விபூவியை (V.S.V) விருது

உத்தம சேவா பதக்கம்

சிறிலங்கா குடியரசின் ஆயுத படையினருக்கான பதக்கம்

நீண்டகால சேவைக்கான பதக்கம்

ஜனாதிபதியின் கௌரவப் பதக்கம்

சுதந்திரதினப் பொன்விழாப் பதக்கம்

வடக்கு கிழக்கு விமானப்படை நடவடிக்கைகளுக்கான பதக்கம்

பூரண பூமிப் பதக்கம்

வடமராட்சி நடவடிக்கைப் பதக்கம்

சூரியக்கதிர் நடவடிக்கை சேவைப்பதக்கம்

என அவர் வாங்கிக் குவித்துள்ள முடிவுறாப் பதக்கவரிசை

அவரின் அந்த பக்குவமான தமிழின எதிர்ப்பு நடவடிக்கைப் பங்களிப்புக்காகவே கிடைத்தன எனலாம்.

தமிழரின் இரத்தத்தில் ஊறவைத்து வழங்கப்பட்ட பதக்கங்களே இவை என்பதில் சந்தேகமேயில்லை.

30-10-1950 இல் பிறந்த இவர் கல்கிசை சென்தோமஸ் கல்லூரியின் பழைய மாணவராவார்.

12-01-1972 இல் விமானப்படையில் இணைந்த இவர் 19-10-1973 இல் 'விமானி' அதிகாரியானார்.

விமானப்படையில் பல்வேறு பொறுப்பான பதவிகளையும் வகித்த டொனால்ட் பெரேரா 1998 விமானப்படைத்தலைமை அதிகாரியானார்.

1990 இல் அமெரிக்காவின் 'அலபாமா' வில் அமைந்துள்ள விமானக் கட்டளைப் பீட அதிகாரிகளுக்கான கல்லூரியிலும், விமானப்படையினருக்கான பல்கலைக்கழகத்திலும் கற்று பட்டதாரியான பெரேரா 1998 இல் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கல்லூரியிலும் பயிற்சி நெறிகளை மேற் கொண்டவராவார்.

சிறிலங்கா விமானப்படையின் பதினோராவது தளபதியாக பொறுப்பேற்றுள்ள டொனால்ட் பெரேரா. விமானப்படையை இன்றைய உலகின் நவீன தொழில்நுட்ப வசதிகளையெல்லாம் உள்ளடக்கியதாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து பதவியேற்பு தினத்தன்று விமானப்படையினர் முன்னிலையில் உரையாற்றும் போது குறிப்பிட்டுள்ளார்.

இப்போது விமானப்படையினருக்கு வழங்கப்படும் பயிற்சிநெறிகள் போதாதென்றும் புதிய புதிய விமானங்களையும், கருவிகளையும், சாதனங்களையும் கையாள அவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். எந்த நிலையையும் எந்த நேரத்திலும் எதிர்கொள்ளும் திறனாற்றல் கொண்டவர்களாக விமானப்படையினர் இருப்பதற்கு அவர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

போர் நிறுத்தமிருந்தாலும் போர்ப்பயிற்சித் திட்டங்கள் தொடரவேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளார்...

அவரின் இந்த வார்த்தைகள் எதையோ சொல்லாமல் சொல்கின்றதை கூரிய எச்சரிக்கை உணர்வுடையோர் புரிந்து கொள்வர்.

இவரது மனைவியான ரஞ்சனியும் ஒரு விமானப்படை அதிகாரியே... விங்க் கொமாண்டரான (Wing Commander) இவர் ஒரு பற்சிகிச்சை நிபுணராக (Dental Surgeon) சிறிலங்கா விமானப்படையில் கடமையாற்றி வருகிறார்.

தளபதியாகும் தகுதியை வடக்கு கிழக்கில் அவர் பங்குபற்றிய வான்படைத் தாக்குதல்களின் 'சாதனை'களுக்காக பெற்றுள்ள இவர் தளபதியான பின் என்ன செய்யப்போகின்றார்?

காலம் தான் பதில் சொல்லவேண்டும்...

◆

# நிலாந்தன் — இயல்பு நிலை



அண்மையில் கிழக்கிலிருந்து வந்த ஒரு பத்திரிகையாளர் சொன்னார்- அம்பாறையில் திருக்கோவிலில் சுமார் ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக ஒரு அதிரடிப்படை முகாம் இருந்து வருகிறது. இம் முகாமிலிருக்கும் அதிரடிப்படையினர் அங்குள்ள தமிழர்களை கொத்தடிமைகள் போலவே நடத்துவதுண்டாம். அவர்கள் அழைத்த போதெல்லாம் போகவேண்டும். சொன்னவேலை செய்யவேண்டும். யாரையும் எப்பொழுதும் எங்கு வைத்தும் கைது செய்யலாம்.

இப்படி சுமார் ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக தமது சொந்தக் கிராமத்திலேயே அடிமைகள் போல வாழ்ந்து வந்த அந்த மக்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையோடு திடீரென்று துணிச்சல் பெற்றவர்களாகி விட்டார்களாம். அண்மையில் ஒரு சம்பவத்தில் வழமைபோல நாட்டாண்மை காட்ட முற்பட்ட ஒரு அதிரடிப்படையாளை ஒரு தமிழர் திருப்பித்தாக்கி விட்டார். அதிரடிப்படை இதை சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவர்களால் இப்படியொரு சம்பவத்தை கற்பனை செய்யவும் முடியவில்லை. ஜீரணிக்கவும் முடியவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை வந்து தங்களை இப்படிப் பலவீனப்படுத்திவிட்டதாக அவர்கள் நம்புகிறார்களாம்.

திருக்கோவில் அதிரடிப்படை மட்டும் அல்ல இன்று தமிழர் நிலத்தில் நிலை கொண்டுள்ள எல்லாப் படையாட்களும் அப்படித்தான் நம்புகிறார்கள். அதாவ்து புரிந்துணர்வு உடன்படிக்கை வந்து தமது வேட்டைப் பற்களைப் பிடுங்கி விட்டது என்று.

என்பதால்தான் யாழ்ப்பாணத்தில் பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொண்ட சனங்களைப் பார்த்து படையினர் "எமது கைகள் தான் கட்டப்பட்டுள்ளன. கண்கள் அல்ல" என்று மிரட்டினார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் பொதுவாக ராணுவத்தின் பிடியில் உள்ள எல்லா இடங்களிலும் படையினர் மேற்கண்டவாறு கூறிமிரட்டியிருக்கிறார்கள். அங்கெல்லாம் தமிழர்கள் தமது இதுவரை காலமும் அடக்கிவைக்கப்பட்டிருந்த ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள எத்தனிப்பதும் அப்பொழுதெல்லாம் படையினர் என்றைக்கோ ஒருநாள் வெடிக்கப்போகும் யுத்தத்தைக் கூறி மிரட்டுவதுமான செய்திகள் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன.

**2**

புலிகள் யுத்தநிறுத்தம்செய்து இன்றுவரையிலும் சுமார் எட்டு மாதங்கள் ஆகின்றன. இக்காலப் பகுதியில் ஒரேயொரு சிப்பாய் மட்டும்-அதுவும் மனங்குழம்பியவர் என்று கூறப்படுகிறது-முகமாலையில் வைத்துக் கொல்லப்பட்டிருக்கிறார்.

ஈழப்போர் தீவிரமடைந்த பின் வந்தகாலங்களில் இப்படி உயிரழிவுகள் இல்லாத மிக நீண்ட காலம் எனப்படுவது இந்த எட்டுமாத காலமாகத்தான் இருக்கமுடியும்.

இப்படிப்பார்த்தால் யுத்த நிறுத்தமும் புரிந்துணர்வு உடன்படிக்கையும் படையினரைப் பொறுத்தவரை உயிரைத்தக்க வைத்துக்கொள்ள உதவியிருக்கின்றன. இல்லையென்றால் மூடிச் சீல்வைக்கப்பட்ட சவப் பெட்டிகள்தான் பெற்றோருக்கு கிடைத்திருக்கும். சில சமயம் அதுவும் கிடைப்பதில்லை. சம்பளம் மட்டும் தான் கிடைக்கும். பெற்றோர்களோவெனில் விகாரைகளிலும் தேவாலயங்களிலும் அழுதுகொண்டு காத்திருக்க வேண்டியதுதான்.

இது இப்பொழுது தமது உறவினர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து மகிழ்ச்சியைக் கொண்டாடும் படையாட்களுக்குத் தெரியாமல் இல்லை. ஆனாலும் அவர்கள் தமது கைகள் கட்டப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். ஏன்?

**3**

காரணம் இதுதான்.

யுத்தம் அவர்களை எஜமானர்களாக்கிவிட்டது.

வெல்லப்பட்ட நிலத்தில் உயிர்களையும் சொத்துக்களையும் சில சமயங்களில் இளம்பெண்களையும் நினைத்தபடி கையாளும் சுதந்திரத்தை அது அவர்களுக்கு வழங்கியது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் அவர்களை வரையறையின்றிப் பாதுகாத்தது.

இப்படி வெல்லப்பட்ட தமிழர் நிலத்தில் கடந்த சுமார் 19 ஆண்டுகளாக தமிழர்களைப் பூச்சிகள் போலநடத்திப் பழகிய அவர்களுக்கு இப்பொழுது யுத்தநிறுத்த காலத்தில் தமிழர்களை மனிதர்களாக மதித்து நடத்தவேண்டிய நிலமை வரும்போது பிரச்சினையாக இருக்கிறது.

கடந்த 19 ஆண்டுகாலப் பகுதியில் ராணுவம் விபரிதமாக வீங்கிப்போயுள்ளது.

1983ல் ஈழபோர் தீவிரமடைந்தபோது இராணுவத்தின் தொகை 12500 ஆனாலிப்பொழுது அதன் தொகை ஒரு லட்சத்து ஐம்பதினாயிரத்துக்குக் கிட்டவரும் என்று கூறப்படு கிறது. ஈழப்போரின் வளர்ச்சிப் போக்கில் ராணுவம் படுவேகமாக வீங்கிவந்தது. குறிப்பாக இரண்டாவது ஈழப்போரோடு ராணுவம் இலங்கை அரசியலில் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக மாறியது. இப்பொழுது அது பேச்சுவார்த்தைகளின் போது தவிர்க்கப்படவியலாத ஒரு மூன்றாந்தரப்பாக மாறிவிட்டது என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் செல்லப்பிள்ளைகளாயிருந்த ஜெனரல்கள் பலர் இப்பொழுது சிறிலங்காவின் வெளிநாட்டுத் தூதுவர்களாய் இருக்கிறார்கள். ஜெனரல்களை தூதுவர்களாக நியமிக்குமளவுக்கு சிங்களவரின் அரசியல் ராணுவமயப்பட்டு விட்டது.

இத்தகைய ராணுவமயப்பட்ட ஒரு அரசியலில் தன்னை எஜமான் ஆகப்பாவிக்கும் எந்த ஒரு சிப்பாயும் சமாதானத்தை உடனடியாக ஏற்றுக்கொள்வான் என்பதற்கில்லை.

**4**

கடந்த 19 ஆண்டுகால் ஈழப் போரில் முழு இலங்கைத்தீவுமே ராணுவ மயப்பட்டுவிட்டது.

வி்:தங்கள் வேறுபடலாம் ஆனால் தமிழர் சிங்களவர் முஸ்லிம்கள் என்று எல்லாச் சமூகங்களுமே ர்ாணுவமயப்ப்ட்டு விட்டன.

பொதுவாக யுத்தம் என்றாலே இப்படித்தான். ஆயுதம் ஏந்திய சக்திகளே சமூக முகாமைத்துவத்தின் மையநிலைக்கு வந்து விடுகிறார்கள். இது படிப்படியாக சிவில் சமூகத்தை இல்லாதொழித்து விடுகிறது. பிறகெலாம் இயல்பின்மையே இயல்பாகி விடுகிறது.

கடந்த 19 ஆண்டுகாலமாக தமிழர்களின் நிலை இதுதான். கணிசமான அளவு சிங்களவர் முஸ்லிம்களின் நிலையும் இதுதான்.

இந்நிலையில் யுத்தமில்லாத ஒரு தீர்வைப்பற்றி சிந்திப்பது என்பது முதலில் அரசியலை ராணுவமய நீக்கம் - demilitarize - செய்வதிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இயல்பு நிலையை மீளக் கொணர்வது என்பதுவும் வாழ்வின் எல்லா அம்சங்களையும் எல்லா விதத்திலும் ராணுவ மய நீக்கம் செய்வதுதான்.

உண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கை அதற்கான ஒரு தொடக்கம்தான்.

எவ்வளவுக்கெவ்வளவு ராணுவ மயநீக்கம் நிகழுமோ அவ்வளவுக் கவ்வளவு ஒரு சிவில் சமூகத்தைக் கட்டியெழுப்புவதும் சாத்தியமாகும்.

ஒரு சிவில் சமூகத்திலேயே மெய்யான அர்த்தத்தில் இயல்பு நிலை சாத்தியப்படும்.

தமிழர்களின் சிவில் உரிமைகள் மறுக்கப்பட்டதாலேயே தமிழர்கள்

**5**

ஆயுதம் ஏந்தினர். இதை நசுக்க அரசுகள் படைப்பலத்தை பிரயோகிக்க முயன்றதன் விளைவாக முழுத்தீவுமே ராணுவமயப்பட்டு விட்டது.

எனவே ராணுவமயநீக்கம் எனப்படுவது தமிழர்களின் சிவில் உரிமைகளைப் பாதுகாப்பதிலிருந்தே தொடங்கப்பட வேண்டும்.

இதன்படி தமிழர்களின் உரிமைகளை மதிக்கின்ற பாதுகாக்கின்ற ஒரு தீர்வினால் மட்டும்த்தான் இலங்கைத்தீவை பூரணமாக ராணுவமய நீக்கம் செய்ய முடியும்.

ஆனால் இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் தீர்வைக் கண்டு பிடித்த பிறகு ராணுவமய நீக்கம் செய்வதா அல்லது ராணுவமய நீக்கம் செய்வதிலிருந்து தீர்வைத் தொடங்குவதா அல்லது ராணுவ மய நீக்கத்தையும் பேச்சுவார்த்தைகளையும் சமாந்தரமாகக் கொண்டு போவதா என்பதே.

முன்பு பிரேமதாஸவின் காலத்திலும் சந்திரிகாவின் கரலத்திலும் இந்தக் கேள்வி எழுந்தது. யுத்தத்தையும் செய்து கொண்டே பேசுவதா அல்லது யுத்தத்தை நிறுத்தி விட்டுப் பேசுவதா என்பது.

அப்பொழுதெல்லாம் புலிகள் ஒரு விசயத்தில் நிதானமாகவும் விட்டுக்கொடுப்பின்றியுமிருந்தார்கள். அதாவது யுத்தம் நிறுத்தப்பட்டு நல்லெண்ணச்சூழல் உருவாக்கப்பட வேண்டும். அத்தகைய நல்லெண்ணச் சூழலில்தான் பேச்சுக்களை நடத்த முடியும் என்று.

ஆனால் அதற்கு அப்போதிருந்த அரசுகள் சம்மதிக்கவில்லை. வீங்கிப்பெருத்து வந்த ராணுவமும் அது பற்றிச் சிந்திக்கவிடவில்லை.

ஆனாலிப்பொழுது நிலமை ஒப்பீட்டளவில் வித்தியாசமாயுள்ளது. ரணிலின் அரசாங்கம் இது விசயத்தில் ஒப்பீட்டளவில் நடைமுறைச் சாத்தியமான ஒரு

(15ம் பக்கம் பார்க்க)

# நறுக்கென......

## ஜே.வி.பியும் சிகல உறுமயவும்



வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து புலிக்கொடியின் முன்னால் இருந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி விட்டு வந்துள்ள தென்னிலங்கை அரசியல்வாதிகள், அமைச்சர்கள் பதவிவிலக்கப்படவேண்டும். இதற்கு ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரவலுவைப் பயன்படுத்த வேண்டும்:- இது ஜே.வி.பியினரின் தரப்பில் இப்போது முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கையாகும்.

சிகலஉறுமய இன்னொருபடி மேலே போய், விடுதலைப் புலிகளுடன் சந்திப்புகளை மேற்கொள்ளும் சிங்கள அரசியல்வாதிகளை விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்து வோரை சிங்கள பௌத்த சமூகத்திலிருந்தே ஒதுக்கி விட வேண்டும் என்றிருக்கிறார்கள்.

தங்கள் கட்சியின் உருவாக்ககாலத் தலைவர் ஒருவரையே- அதாவது S.L.குணசேகராவையே- கட்சிப் பொறுப்பிலிருந்து அவர் கிறிஸ்தவ சிங்களவரென்று கூறி அகற்றியவர்களல்லவா அவர்கள்...

இப்போது யார் அதிகப்படியான அளவுக்கு பௌத்த சிங்கள பேரினவாதத் தேசியவாதம் குறித்து பேசுவது என்பதில் ஒரு போட்டாபோட்டி உருவாகியிருக்கிறது போல் தோன்றுகிறது.

இவர்கள் அனைவருக்கும் அரசியல் தான் இலக்கேயன்றி வேறேது இலட்சியமும் கிடையாது.

கொள்கைகள் கோட்பாடுகள் என இவர்கள் கோசமிடுவது எல்லாம் அரசியல் மேடைகளுக்காக இவர்கள் பூசும் அரிதாரங்களே ஆகும். அண்மையில் ஜே.வி.பி குறித்து அதன் முன்னாள் உறுப்பினர்களில் ஒருவரும் 1971 கிளர்ச்சியின் போது கைதாகி சிறைவாசம் அனுபவித்தவருமான வாசுதேவ நாணயக்கார கூறுகையில் 'தேசவிரோத சக்திகள்' என வர்ணித்துள்ளார்.

ஜே.வி.பியை தேசவிரோதிகள் என்றால் சிகலஉறுமயவை எப்படி வர்ணிப்பதாம்...?

ஸஜ

## ஜே.வி.பியின் புதிய கிளர்ச்சித் திட்டம்



தாயகத்தின் காவலர்கள், இது ஜே.வி.பியினர் தமது மாணவர்கள் அமைப்புக்கு வைத்துள்ள பெயராகும்.

இந்த அமைப்பை வைத்துக் கொண்டு இப்போது பெரும் பௌத்த சிங்கள இனவாத ஜனநாயகவாதிகளாக தம்மை இனங்காட்ட முயன்று வரும் முன்னாள் செஞ்சட்டை புரட்சியாளர்கள் மீண்டும் ஒரு இனக்கலவரத்தை தூண்டி சமாதான முயற்சிகளைச் சிதைத்து ரணில் ஆட்சியை அகற்றுவதற்கான திட்டங்களில் தீவிரமாக ஆனால் ரகசியமாக ஈடுபட்டு வருகிறார்களாம்.

இந்தச் செய்தியை ஒரு எச்சரிக்கையாகவே வெளியிட்டு மக்களை விழிப்பாக இருக்கவும் அரசை அவதானமாக இருக்கவும் அறிவுறுத்தியுள்ளவர் ஐ.தே. முன்னணி அரசின் மீன்வளத்துறை அமைச்சரான மகிந்த விஜயசேகர தான்.

இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் இவரும் ஒரு முன்னாள் ஜே.வி.பி. முக்கிய பிரமுகரே!

பாம்பின் காலை பாம்பு அறிந்துள்ளது ஆச்சரியமில்லைத் தான். 1971 ஏப்ரலில் நடைபெற்ற முதல் ஜே.வி.பி கிளர்ச்சியில் முக்கிய பங்காற்றி ஆறாண்டு சிறையிலும் இருந்தவர் இந்த மகிந்த விஜேசேகரா...

இப்போது இவரும் ஜனநாயக நீரோட்டத்தில் மிதந்து அமைச்சராகியும் விட்டார். அவர் தனது அரசியல் ஞான குருபீட மான ஜே.வி.பியை இப்போது கடுமையாக விமர்சிக்கும் நபராகிவிட்டார்.

ஜே.வி.பியின் புதிய திட்டம் குறித்து அவர் கூறியுள்ளதை அலட்சியம் செய்து விடமுடியாது.

ஏற்கெனவே 'புரட்சி' என்று கூறிக்கொண்ட தங்களின் கிளர்ச்சி நடவடிக்கைகள் மூலம் தங்களின் ஆயுதப் போராட்டத்தில் படுதோல்வியை அடைந்தவர்கள் தவறான தலைமைத்துவ வழிகாட்டல் மூலம் பல்லாயிரம் இளைஞர்கள் உயிர்களைப் பலி கொடுத்தவர்கள்.

இப்போது மற்றொரு திட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள் போல் தெரிகிறது. சந்திரிகா தனது புதிய சகாக்களால் மேலும் பல சிக்கல்களை சந்திக்கப் போகின்றார்.

ஜே.வி.பியை சந்திரிகா தனக்கு 'எடுபிடி'களாக வைத்திருக்க முயல்கிறார். ஆனால் ஜே.வி.பியோ சந்திரிகாவை கைப் பொம்மை யாக வைத்து இயக்கப் பார்க்கிறார்கள்... சரியான போட்டி.

## தமிழ்கைதிகளும் சிங்கள அரசுகளும்



தமிழ்க் கைதிகளுக்கு இப்போது பொதுமன்னிப்பு வழங்க முடியாது என்று சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதால் நிரந்தர சமாதானம் வந்த பின்னரே அதுகுறித்து ஆராயலாம' என்றும் அவர் கூறியுள்ளார்.

கைதிகள் கேட்பது பொதுமன்னிப்பையல்ல... தங்கள் மீதான வழக்குகள் உடனடியாக விசாரணை செய்யப்பட வேண்டும் இல்லையில் பிணையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதையே...

பாதுகாப்பு படையில் இணைந்து சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டு நாட்டுப் பணிக்கென தம்மை அர்ப்பணித்ததாகக் கூறிய பல்லாயிரக் கணக்கிலான படையினர் படையணிகளை விட்டு சொல்லாமல் கொள்ளாமல் தப்பியோடிப்பின் பாதாள உலகக் குழுக்களுடன் இணைந்தும் தனியாகவும் எத்தனையோ தேசவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இவர்கள் செய்யும் குற்றச் செயல்கள், சிறிலங்காவில் கட்டுப்படுத்த முடியாமல் போய்க் கொண்டிருக்கிறது.

ஆனால் அவர்களின் செயல்கள் சிங்கள அரசுகளுக்கு பயங்கர வாதச் செயல்களாகத் தெரிவதில்லை. கறுப்புச் சட்டங்கள் எவையும் அவர்களை எட்டிக் கூடப் பார்ப்பதுமில்லை.

அப்படி எவராவது கைது செய்யப்பட்டாலும் கூட உயர்பதவி களில் உள்ளோரின் மிக மிக முக்கிய பிரமுகர்களின் ஆசீர்வாதத்துடன் அவர்கள் வெளியே வந்தும் விடுகிறார்கள்.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் உள்ளவர்களே பாதாளஉலகக் கும்பலின் தலைவர்களாக இருக்கும் அசிங்கும் சிறிலங்காவில் தான் நடந்துள்ளது அத்தகையோரெல்லாம் பிணையில் விடுதலையாகி மீண்டும் கம்பீர மான தமது நடவடிக்கைகளை தொடர அனுமதிக்கும் சிறிலங்காவின் நீதியும்- சட்டங்களும் தமிழ் கைதிகள் விவகாரத்தில் மட்டும் அலட்சியம் காட்டுவது. அவர்கள் தமிழர்களாக இருக்கிறார்கள் என்பதற்காகவே தவிர வேறொன்றும் கிடையாது.

சந்திரிகா போய் ரணில் வந்தாலென்ன ரணில் போய் சந்திரிகா வந்தாலென்ன தமிழ்கைதிகளின் 'விடுதலை' என்பது வெறும் வாக்குறுதி வடிவத்தில்தான் இருக்கும்...

## ஆலோசகரின் அறிக்கையும் போ.ஐ முன்னணியின் குழப்பமும்



அமெரிக்காவை அதுவும் ஜோர்ஜ் புஸ்ஷை நேரடியாகவே கிண்டல் செய்து சாதனை படைக்க முயன்று சோதனைக்குள்ளாகி இருக்கும் 'அநுரா'வின் அசட்டுத்தனமான செயற்பாடுகளால் பொது சன ஐக்கிய முன்னணிக்குள் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஒரு குழப்பநிலை மையங்கொண்டு இப்போது அது அதிதீவிரமடைந்து வருவதாக செய்திகள் கூறுகின்றன.

அதுவும் சும்மா இருக்க முடியாமல் உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன் என்ற முதுமொழிக்கேற்ப சந்திரிகா அநுராவை தனது ஆலோசகராக நியமித்த பின்னர் தன்னை ஒரு ஜனாதிபதியை இயக்கும் 'மாபெரும' சக்தியாகவே நினைத்துக் கொண்டு தானே அடுத்த ஜனாதிபதியாகும் தகுதியைக் கொண்ட 'பெருமகன' என்பதை நிரூபிக்க முயன்று கோமாளித்தனங்கள் புரிந்து வருகிறார்.

அதன் ஒரு உதாரணம்தான் அமெரிக்க ஜனாதிபதி மீதான கிண்டலாகும். ஏற்கனவே ரணில் அமெரிக்காவை தனது கைக்குள் போட்டுக்கொள்ளும் வகையில்... அப்படிச் சொல்லக்கூடாது(!?) அமெரிக்காவின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதில் சந்திரிகாவை புறந்தள்ளி விட்டுள்ள நிலையில் அநுராவின் அறிக்கை சந்திரிகாவின் கருத்தாகவே அமெரிக்காவால் பார்க்கப்படும் நிலையானது சந்திரிகா குறித்த அமெரிக்க மதிப்பீட்டை மேலும் குறைக்கவே வழிவகுக்கும்.

இதுவே பொ.ஐ.முன்னணினருக்கு ஏற்பட்டுள்ள சந்திரிகா மீதான கோபத்திற்கு காரணமாகும்.

அநுராவை ஆலோசகராகப் போட்ட நேரம் ரணிலோடு சமாதானமாகப் போயிருக்கலாம். அது சந்திரிகாவையும் காப்பாற்றி சுதந்திரக்கட்சியையும் காப்பாற்றி நாட்டையும் கொஞ்சம் காப்பாற்றியிருக்கும் என்கிறார் ஒரு அரசியல் அவதானி.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.

ஸஜ

## மதவடி மயிலர்



செய்தி:- அரசு மீது பழி சுமத்துவதிலேயே சந்திரிகா அதிக கவனம் செலுத்தினார்.

மயிலர்:- ஆளுக்காள் குற்றம் சொல்வதையும் பழி சுமத்துவதையும் விட அரசியல்வாதிகளுக்கு வேறென்ன வேலை... அதுவும் சந்திரிகா அம்மையாருக்கு இப்போதைய வேலையே... அதுதான்... பழிசுமத்தி பழிசுமத்தியே பழிவாங்க நினைக்கிற... நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த ஏதாவது காரணங்களை அடுக்கத்தானே வேணும். அதுக்குத்தான் அம்மணி தொலைக்காட்சி உரையைப் பயன்படுத்தியிருக்கிறா பாருங்கோ... பாவம் சிங்களச் சனம்... அம்மாவை நம்புறதா? ஐயாவை நம்புறதா...? அல்லது இடையிலை நிற்கும் 'அலுகோசு'களை நம்புறதா?

செய்தி:- பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்குமிடையே ஒப்பந்தம் கைச்சாத்தாகும்....

மயிலர்:- எல்லாரும் ஒப்பந்தங்கள் செய்யேக்கை அவை மட்டும் சும்மா இருந்தால் எப்படி...? ஏற்கனவே போன தேர்தலுக்கு முன்பு உடன்படிக்கை செய்து கொண்டவை தானே... அதுசரி இந்த புதுச் 'சிவப்பு'களின்ரை சிநேகிதம் ஏற்கனவே கனகாலமா அம்மணியோடை ஒட்டிக் கொண்டிருக்கிற பழஞ்சிவப்புகளான கம்யூனிஸ்ட் - சமசமாஜக்கட்சிக்காரர்களுக்கு ஒரு மாதிரி இருக்காதோ எண்டு கேட்கிறியளே... அவை கொள்கை கோட்பாடு சூடு சொரணை இழந்து கனகாலமாச்சுப் பாருங்கோ...

செய்தி:- இளைஞர் படை என்ற போர்வையில் இன்னொரு கொலைப்படை தேவையில்லை...

மயிலர்:- தினேஸ் குணவர்த்தனாவின் சந்தேகம்... இல்லை... இல்லை... அச்சம் சரியானது தான்... ஒவ்வொரு அரசும் அவை அவையின்ரை ஆட்சிக்காலத்திலை இப்படி ஒவ்வொரு படையை உருவாக்கி தங்கடை ஆட்சிக்கு நெருக்கடி வரும்போது குழப்பம் ஏற்படுத்திறது வழக்கந்தான் பாருங்கோ...

இளைஞர் படையை கொலைப்படை என்று சொன்னார் பாருங்கோ இப்பதான் தினேஸ் மாத்தையா ஒரு உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார் பாருங்கோ... ஆனால் அந்தக் கொலைப்படை தமிழருக்கு எதிராகத்தான் என்று சொல்லியிருந்தா... கைதட்டி பாராட்டியிருப்பார் பாருங்கோ...

செய்தி:- சில சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் எனக்கு எதிராக விஷமப்பிரச்சாரம்... மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு...

மயிலர்: இது விஷமப் பிரச்சாரமல்ல விஷப் பிரச்சாரம் பாருங்கோ... ஆளை அரசியலில் இருந்து வெளியேற வைக்கிறதுக்கான திட்டம் தான்... எதிர்க்கட்சித் தலைவரை அவரது கட்சியினரே எதிரிக்கட்சியாளராகப் பார்க்கத் தொடங்கிட்டினம் பாருங்கோ... சிறிலங்கா சுதந்திரக்கட்சி... இப்ப வெறும் சுதந்திரக்கட்சியாக மாறிக் கொண்டு போகுது பாருங்கோ... ஆளுக்காள் அடுத்தவரை கவிழ்க்க எத்தனை தந்திரோபாயம் இருக்கோ அத்தனையையும் பயன்படுத்தி வருகினம் பாருங்கோ... அதுசரி... 'சிலர்' என்று ஏன் பொடி வைத்துச் சொல்ல வேண்டும்... 'அநுரா அண்ட் கொம்பனி' எண்டு வெளிப்படையாகச் சொல்ல வேண்டியது தானே...

செய்தி:- சமாதானத் தீர்வு தொடர்பாக பொது இணக்கப்பாடு அவசியம் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ தெரிவிப்பு..

மயிலர்:- இப்படித்தான் முந்தி சந்திரிகா அம்மணி ஆட்சியிலை கதிர்காமர் ஐயாவும் சொன்னவர் பாருங்கோ.. அப்ப இவை இணக்கப்பாட்டுக்கு போகேல்லை... இப்ப இணக்கப்பாடு பற்றி பேசுகினம்... நல்லாவே தெரியும் எதிர்க்கட்சிகள் ஆளுங்கட்சியுடன் இணக்கப்பாட்டுக்கு வராதென்று... சும்மா அறிக்கை விடுறதையெல்லாம் நம்புறதே...

இவை இணக்கப்பாட்டுக்கு வரக்கூடியவையெண்டா இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இவ்வளவு சுணக்கம் ஏன் ஏற்படப் போகிறதாம்...?

சந்தேகம் உண்மை நட்பை அழிக்கும் நச்சு. — புனிதர் அகஸ்ட்டின்

# இது நான்காம் உலகமகாயுத்தம்

மு.திருநாவுக்கரசு







இப்போது நான்காம் உலகமகா யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. 1989ஆம் ஆண்டு சோவியத் சாம்பராச்சியத்தை அமெரிக்கா தோற்கடித்ததோடு மூன்றாம் உலகமகாயுத்தம் முடிவுக்கு வந்தது.

முதலாம், இரண்டாம் உலகமகா யுத்தங்கள் இரண்டும் பெரிதும் ஐரோப்பாவில் நிகழ்ந்தன. ஆனால் மூன்றாம் உலகமகா யுத்தம் மிகப்பெருமளவு ஆசிய-ஆபிரிக்க-லத்தீன் அமெரிக்க மண்ணில் நிகழ்ந்தன. நான்காம் உலகமகா யுத்தம் முற்றிலும் ஆசியக் களத்தை மையமாகக் கொண்டது. அதன் சுவாலை செப்ரெம்பர்11 தாக்குதல் போல வெளியே நீண்டு வெடித்தாலும் அதன் களமையம் ஆசியாதான்.

ஆப்கானிலிருந்து சோவியத் படை விலகுவதான முடிவோடு மூன்றாம் உலகமகா யுத்தத்தின் முடிவு ஆசிய மண்ணிலேயே ஆரம்பமானது. அத்தோடு நான்காம் உலகமகா யுத்தத்தின் தொடக்கம் அதன் தலைவனாகிய அமெரிக்காவின் "வளைகுடா யுத்தத்தோடு" ஆரம்பமாகியது. வளைகுடாச்சமர் (Battle), ஆப்கான்சமர், செஷ்னியாச் சமர், கார்கில் சமர் என்பன எல்லாம் நான்காம் உலகமகா யுத்தத்தின் தனித்தனி சமர்களே. இதில் செஷ்னியாச் சமர் கார்கில் சமர் என்பன உபசமர்களாகும். இந்தச் சமர்கள் எல்லாமே இஸ்லாமிய நாடுகளுக்கெதிரான சமர்கள்தான்.

இப்போது புஷ் நிர்வாகம் ஈராக்கிற்கு எதிராக வளைகுடாச் சமர் இரண்டிற்கான யுத்த பேரிகை முழங்கத் தொடங்கியுள்ளது. நான்காம் உலக யுத்தத்தின் முன்னனுபவங்கள் சதாமை சரணடையுமாறு கோருகின்றன. சதாமோ சரணடைந்து எல்லா ஆயுதக்களஞ்சியங்களையும் ஆயுத உற்பத்திச்சாலைகளையும் திறந்து காட்டுவதாக ஒப்புக்கொள்கிறார். ஆனால் அமெரிக்காவோ விட்டபாடில்லை. ஆனால் அமெரிக்காவிற்கோ யுத்தத்திற்கான ஒரு காரணம்தான் தேவை; அவ்வளவு தான்.

ஈராக்கிற்கு எதிரான யுத்த பேரிகையைக் கண்டு ஈராக்கின் பரம எதிரியாகிய ஈரான் அதிர்ச்சியடைந்தது. அது இந்த யுத்த பேரிகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. ஏனெனில் ஈராக்கில் அமெரிக்க கொடி பறந்தால் அது அடுத்து ஈரானை நோக்கி விரிந்து பறக்கும். அப்படியாயின் எமக்கு ஒன்று தொரிகின்றது இலக்கு சதாமல்ல; அதைவிடவும் பொியதும் நீண்டதும் என்பது.

அவ்வாறாயின் இந்த யுத்தத்திற்கான காரணம் தான் என்ன? இது யாருடைய யுத்தம்? எங்கு தொடங்கியது? எங்கு முடியப் போகின்றது? அடுத்து எங்கு, யாரிற் தாவப் போகின்றது? இக்கேள்விகளும் இவற்றிற்கான பதில்களும் உலக மக்கள் அனைவருக்குமே பிரதானமானவை. பின்லாடனின் செப்ரெம்பர் தாக்குதலையடுத்து புஷ் "நாகரிகங்களுக்கு இடையேயான மோதல்" "சிலுவை யுத்தம்" என அறை கூவினார். அதைக் கண்டு இஸ்லாமிய அரசுகள் ஆத்திரமடைந்த போது "உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்" எனப் பெயரை மாற்றிக் கொண்டார். இப்போது ஈராக், ஈரான், வடகொறியா என மூன்றையும் சேர்த்து "தீய சக்திகளின் சுழர்ச்சிக்கான அச்சு" எனப் புதிய நாமகரணம் ஒன்றை கொண்டு வருகிறார். இதில் வடகொறியா சாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. உண்மையில் வடகொறியாவுடன் அமெரிக்கா பகைமைத் தணிப்பில் ஈடுபட்டு வருகின்றது. இப்போது இஸ்லாமிய நாடுகளே யுத்தத்தின் உண்மையான இலக்கு. அதன்படி உண்மையாகப் பார்த்தால் புஷ் கூறும் "உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்" என்பது அவர்கருதும் "சிலுவை யுத்தம்", அல்லது "நாகரிகங்களுக்கிடையிலேயான மோதல் தான்."

புஷ் என்ன கருதுகிறார் என்பதல்ல எமது பிரச்சினை. உண்மையில் இது என்னவாக இருக்கின்றது என்பதுதான் எமது பிரச்சினை.

**அமெரிக்கா தலைமையிலான உலகமயப்படுத்தப்பட்ட அமெரிக்க சார்பு உலகவர்த்தகப் பொருளாதாரப் பிரச்சினைகளின் வெளிப்பாடே இப்போதைய நான்காம் உலகமகா யுத்தமாகும்.**

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மதஅடிப்படை வாதங்கள் தெளிவாக வடிவம் பெற்றன. ஆங்காங்கே பழமைவாதப் பெருமைகளும் மினுங்கத் தொடங்கின. இப்போது இஸ்லாமிய, இந்து அடிப்படைவாதங்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றிற்கான கோட்பாட்டு ரீதியான அரசியற் பொருளாதார விளக்கத்தை நோக்குவோம்.

அமெரிக்கா தலைமையிலான உலகமயப்படுத்தப்பட்ட அமெரிக்க சார்பு உலகவர்த்தகப் பொருளாதாரப் பிரச்சினைகளின் வெளிப்பாடே இப்போதைய நான்காம் உலகமாக யுத்தமாகும்.

இந்த அமெரிக்க சார்பு உலக வர்த்தக பொருளாதாரம் உலகை கசக்கிப் பிழிந்து தான்சாறு குடித்தபோது உலகில் ஆசிய ஆபிரிக்க மக்கள் பெரிதும்பாதிப்புக்குள்ளாகினர். இந்தப் பாதிப்புக்குள்ளான மக்களிடம்சுபீட்சம்பற்றியதும் நல்வாழ்வு பற்றியதுமான கேள்விகள் எழுந்தன. ஆசிய,ஆபிரிக்க ஆட்சியாளர்கள் பகுதியாகவோ அன்றிமுழுமையாகவோ ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச்சேர்ந்தும் உள்ளனர். தமது நிஜவாழ்வு துயரமானதாய் இருக்கும் போது தமது கண்காணப் பழய வாழ்வு சுபீட்சமானதுபோல் மக்களுக்குத் தோன்றும். அதேவேளை தாம் அனுபவிக்கும் துன்பத்திற்குக் காரணமான தற்போதைய, நவீன எதிரி இல்லாத காலமாக பழய காலம் இருப்பதனாலும் புதிய எதிரியை எதிர்கொள்ள பழமைக்குத் திரும்புதல் எனும் கோட்பாடு துணைபுரியக் கூடியதாகவும் தோன்றும். இந்நிலையில் நவீன அரசியல் பொருளாதாரத்தால் பாதிப்புற்றுத் துயருறும் மக்கள் பழயதை சுபீட்சமாக கருதியவர், அத்துடன் நவீன எதிரியை எதிர்க்க பழமையைக் குறியீடாகவும் கொள்வர். பாதிக்கப்படும் மக்களை ஐக்கியப்படுத்தி எதிரிக்கு எதிராகத் திரட்ட பழமை ஒரு கருவியும்கூட. இதிலிருந்துதான் அடிப்படை வாதமோ, அல்லது பழமைவாதமோ எழுகின்றது.

இஸ்லாமிய அடிப்படைவாதம், இந்து அடிப்படைவாதம், சங்ககாலப் பெருமை வாதம், உலகின் பல பிரிவினரதும் பழமைப்பெருமைவாதங்கள் எனப்பல இவற்றுள் அடங்கும்.

பிரச்சினைகள், அதிருப்திகள் என்பன எப்பொழுதும் சமூகத்தில் காணப்படுகின்ற பலம்வாய்ந்த நிறுவனங்கள்,அமைப்புகள் என்பவற்றிற்கூடாகவே வடிவம்பெற முடியும். இந்தவகையில் இஸ்லாமும், இந்துமதமும் தான் பலம்பொருந்திய நிறுவனங்களாக உள்ளன. அதிலும் இஸ்லாம் உலகளாவிய அர்த்தத்திற் பலம்பொருந்தியது. ஆதலால் இஸ்லாமியர்தான் இதற்கு உலகளாவிய அர்த்தத்தில் முதலில் முகம்கொடுக்கும் சக்தியாகினர். ஏகாதிபத்தியம் தோற்றுவித்த அரசியல் பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பது, அதற்கெதிராகப் போராடுவது ஆகிய இரண்டும் வரலாற்றில் தவிர்க்கவியலாப் பகுதிகள் இத்தகைய போராட்டத்தில் ஓர் இரு நிலையுண்டு. ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டம் முற்போக்கானது: ஆனால் அதேவேளை அது தன்னை பழமைக்குள்ளும், அடிப்படை வாதங்களுக்குள்ளும் சிறையிடுவது பிற்போக்கானது. அத்துடன் கூடவே கதிரையைப் பிடிப்போர் அதனைப் பாதுகாப்பதற்காகத் தமது சொந்த மக்களை ஒடுக்குவது, அவர்களின் உரிமைகளை மீறுவது என்பன ஏகாதிபத்தியம் உயிர்வாழவும், தலையிடவும் ஏற்ற வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கும் விடயங்களாகும்.

உதாரணமாக சதாம் தனது சொந்த மக்களை ஒடுக்கியமையும், குர்டிஷ் இன மக்களை ஒடுக்கியமையும் எதேச்சதிகாரமும் புரிகின்றமையும், குவைத்தை ஆக்கிரமித்தமையும் தான் அமெரிக்கா, "வளைகுடா யுத்தத்தை" தொடக்க வழிவகுத்துவிட்டன. இவ்வாறே பின்லாடனும், ஓமர் முல்லாவும் தம்மக்கள் மீது புரிந்த எதேச்சதிகாரங்களின் மூலமே அமெரிக்கா தலையிடுவதற்கான கதவுகளைத் திறந்துவிட்டனர். ஆட்சியாளர்களின் தவறுகள் இவ்வாறு உள்ளனதான். அதற்காக உண்மைகளை நாம் மறுக்கக்கூடாது. நான்காம் உலகயுத்தத்தில் இஸ்லாமியர்களே யுத்தமுனையில் நிற்கிறார்கள். நான்காம் உலக யுத்தம் முதலில் இஸ்லாமியரைப் பலியெடுக்கின்றது.

உலக வர்த்தக பொருளாதாரம் தனது இரும்புக்கரம்கொண்டு மூன்றாம் உலக நாடுகளை அது முழுஅளவில் உறுஞ்சுகின்றது. மேற்குலகால்"மத்திய கிழக்கு" என அழைக்கப்படும் இஸ்லாமிய தொடர் நிலப்பரப்பே கிழக்குக்கான வாசலாக உள்ளது. எனவே கிழக்கின் மீதான வர்த்தக ஆதிக்கமானது இஸ்லாமியரை, முற்றிலும் தோற்கடிப்பதிலேயே தளமிடப்படவேண்டியுள்ளது. வரலாற்று ரீதியான வர்த்தக பாரம்பரியம்மிக்க இஸ்லாமிய வர்த்தக சமூகத்தினர் இதற்கு முதலில் பலியாகித் தமது வர்த்தக ஆதிக்கம் உலகளவில் அற்றுப்போனதை, அற்றுப் போவதை ஒருபுறம் அதனுடன் கூடவே இஸ்லாமிய மக்கள் பாதிப்புறுவதையும் காணலாம். இத்தகைய கடந்தகால வரலாற்று, நிகழ்கால வரலாற்றுப் பின்புலத்திற்தான் இஸ்லாமியர் முதலில் எழுச்சி பெறுவதும் இஸ்லாமிய எதிர்ப்பு யுத்தம் வெடிப்பதையும் காணலாம். இந்த மொத்த யுத்தத்தில் ஆசிய-ஆபிரிக்க உள்ளூர்சக்திகள் மதங்களின் பெயராலோ அன்றி இஸ்லாமிய உள்ளூர் சக்திகள் கட்சிகள் அல்லது குழுக்களின் பெயராலோ ஏகாதிபத்தியத்திற்குத் துணை புரியும் வகையில் நான்காம் உலக யுத்தத்திற் பங்கெடுக்கின்றன.

மொத்தத்தில் இவற்றை கோட்பாட்டு ரீதியாகப் பார்ப்பதென்றால் அடிப்படை வாதங்களாயினும் சரி, பழமைப் பெருமை வாதங்களாயினும் சரி, உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமெனக் கூறப்படும் நான்காம் உலக மகா யுத்தமாயினும் சரி, இவை அனைத்தும் அமெரிக்கா வினது உலக வர்த்தக பொருளாதார ஒடுக்கு முறையின் வெளிப்பாடுகளே. ♦♦♦

## தலிபான் ஆகிய அமெரிக்கர்



அமெரிக்கரான தலிபான் இயக்க உறுப்பினர் ஜோன் வோக்கர் லிண்ட்ரின் குடும்பம் உறுப்பினர்களான தாயார், மரிலின் வோக்கர், சகோதரர் கொன்னலர் சகோதரி நயோமி, தந்தை பிராங்க்லிண்ட். ஆகியோர் மேலே உள்ள படத்தில் காணப்படுகின்றனர்.

ஜோன் வோக்கர் லிண்ட் ஆப்கான் யுத்தத்தின் போது அமெரிக்க படையினரால் கைது செய்யப்பட்டதுடன் தலிபான் அடிப்படைவாத இஸ்லாமிய இயக்கத்திற்கு உதவினார் என்ற அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு 15-07-2002 அன்று 20 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

தலிபான் மற்றும் அல்குவைதா அமைப்பின் கைதிகளிடையே "லிண்ட் இனங்காணப்பட்டதையடுத்து வடக்கு கூட்டணிப்படையினன் ஒருவன் அவரை பிடித்துச் செல்வதை கிழே உள்ள படத்திலும் காணலாம்.



# புளியங்குளத்திலிருந்து புதுக்குடியிருப்பு வரை
## ஒரு பயண அனுபவக் குறிப்பு...

புளியங்குளம் பஸ்நிலையத்துக்கு நான் சரியாக பத்துமணிக்கு வந்தேன். மாமா புதுக்குடியிருப்பில் செத்துப் போனார். வவுனியாவில் எனக்குத் தகவல் கிடைத்ததும் நான் உடனடியாக வந்தேன். சடலம் நாலுமணிக்குத் தகனம் செய்யிறதாம். நான் அதற்கு முதல் செல்லவேணும்.

பஸ்நிலையத்தில் ஐந்தாறு பஸ்கள் அடுக்கி நின்றன. ஒரு பெரிய வெள்ளை பஸ் 'புதுக்குடியிருப்பு' போட்டுடன் நின்றது.

"அண்ணை புதுக்குடியிருப்பே... ஒரு சீற்தான் இருக்குது.'' என்றபடி 'டிக்கற'றைப்போட்டார் பஸ் நடத்துநர். நான் நூறு ரூபா காசை எடுத்து நீட்டினேன்.

"இன்னும் ஐம்பது ரூபா'' என்றார்.

"ஏன்?"

இது "புக்கிங் பஸ'' என்றார்.

ஏன் ஐம்பது ரூபா கூடக் கொடுக்க வேணும். இன்றைய நாளில் ஐம்பது ரூபாவின் பெறுமதி எனக்குத்தானே தெரியும்.

"வேண்டாம் தம்பி. நான் மற்ற வசுவில போறன்."

''இப்ப வசு இல்லையண்ணை. இதிலையெண்டால் நீங்கள் இருந்து போவியள். வேளைக்கும் போய்ச் சேந்திடலாம்'' டிக்கற்றை நீட்டியபடி பின்னால் வந்தார் நடத்துநர். நான் ஒன்றும் பேசாமல் வந்தேன்.

''இனி புதுக்குடியிருப்புக்குப் பஸ் இல்லை. ரண்டு மணிக்குத்தான்- நிண்டு காயுங்கோ" சீற்றத்துடன் கூறினார்.

இவர் ஏன் என்னைக் கோபிக்க வேண்டும்? பஸ்சில் ஏறவில்லை என்றால் பேசாமல் நிற்க வேண்டியது தானே...

(2)

இரண்டு மணிக்குப் பஸ் என்றால் நாலு மணிக்கு முதல் புதுக்குடியிருப்புக்குப் போய் விடலாம் என்ற நம்பிக்கையில் அந்தப் பஸ்தரிப்பு நிலையத்தில் இருக்கச் சென்றேன்.

''அண்ணை... புதுக்குடியிருப்பே ஏறுங்கோ..."

இது மற்றுமொரு மினிபஸ் நடத்துநர். எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. முதல் பஸ்காரர் சொன்னார் இனி இரண்டு மணிக்குத்தான் பஸ் என்று- இவர் ஏறு என்கிறார். வடிவாகப் போட்டைப் பார்த்தேன் புதுக்குடியிருப்புத்தான்!

''தம்பி... எத்தினை மணிக்கு வெளிக்கிடும்?"

''ஆக்கள் சேந்தவுடனைதான் வெளிக்கிடும்." என்றார்- அவர் சொன்னார் இனி இரண்டு மணிக்குத்தான் பஸ் என்று- சனங்களை தங்கள் பஸ்களில் ஏற்ற எவ்வளவு தந்திரங்கள் என நினைத்தபடி டிக்கற்றை எடுத்து ஏறினேன்.

ஒரு மூலையில் சீற்றிருந்தது. இருந்து கொண்டு கால்களை நீட்டத்தான் ரயர் இருந்தது. என்ன கொடுமையிது... காலும் நீட்டமுடியாது என நொந்தபடி கால்களை வளைத்து நெளித்து ஒரு மாதிரி கால்களை நீட்டி இருந்தேன்.

ஐந்தாறு சனங்கள் வந்து கொண்டிருந்தார்கள். வேளைக்கு சனங்கள் சேந்துதுகள் என்றால் நாலுமணிக்கு முதல் புதுக்குடியிருப்புக்குப் போய்விடலாம் என நினைத்தபடி இருந்தேன்.

"தம்பி... இது புதுக்குடியிருப்புக்கு எதால போகுது?"

"ஒட்டுசுட்டானாலை போகுது."

"கற்சிலைமடுவுக்கு மூன்று டிக்கற் தம்பி"

"புதுக்குடியிருப்புக்குப் போறாக்களைத் தான் ஏத்துறம்." என்றார் நடத்துநர்.

''ஏன் தம்பி... அப்ப நாங்கள் கற்சிலைமடுவுக்கு எந்த வசுவில போறது.?" விடையை எதிர்பார்த்தவாறு நின்றார் ஐயா.

"இப்ப நாப்பது டிக்கற் போடலாம். நாப்பதும் புதுக்குடியிருப்பு டிக்கற் எண்டால்தான் எங்களுக்கு கட்டும்." சொல்லி முடித்து விட்டு- அந்த நடத்துநர் பேனை மூடியை கழற்றி காதுக்குள் விட்டபடி நின்றார்.

அப்ப இடையில இறங்கிறாக்கள் எந்த வசுவில போறது?

(3)

பஸ் கொஞ்சம் கொஞ்சமாய் நிறைந்து கொண்டு வருகிறது. குழந்தைகள் அவிந்து குழறுகின்றார்கள்- நாலுமணிக்கு முன்பு புதுக்குடியிருப்புக்குப் போகவேணும் என்ற அவசரத்தில் நான்.

"தம்பி வசு எப்ப வெளிக்கிடும்?"

''இன்னும் கொஞ்சச் சனங்கள் ஏறோணும்." என்றார். நான் நேரத்தைப் பார்த்தன்- பன்னிரெண்டு மணி.

ஒரு அழகி- குட்டி பாக்(bag)குடன் வந்தாள். நவ நாகரீக உடையில் அவள் காணப்பட்டாள். வயது இருபது இருக்கும் அழகி போட்டிருக்கும் ஸ்கேட் அன் ப்ளவ்ஸ் எனது மூன்று வயது மகளுக்கு அளவாயிருக்கும்.

"அண்ணை- ஒட்டுசுட்டான" என்றாள்- அந்தக்குரல் கணீர் என மின்னலாய் அந்தப் பஸ்சை வெட்டியது. அவர் டிக்கற்றைப் போட்டு விட்டு அழகியுடன் கொஞ்ச நேரம் கதைத்தார்.

அந்த மூன்று பேரும் கற்சிலைமடு என்றதும் டிக்கற் போடாதவர் இந்த அழகிக்கு மட்டுமேன் ஒட்டுசுட்டானுக்குப் போட்டார்.

(4)

"தம்பி புதுக்குடியிருப்புக்கு மூன்று டிக்கற் போடுங்கோ'' கற்சிலைமடுவுக்குப் போக வேண்டிய அந்தக் குடும்பம் புதுக்குடியிருப்பு டிக்கற்றைப் போட்டு பஸ்சில் ஏறினார்கள். அவர்கள் கற்சிலைமடுவில் இறங்க நடத்துநர் புதுக்குடியிருப்பில் தான் இறங்க வேணும் என நிற்பாரோ...? என்ற கேள்வி என்னில் எழுந்தது.

''அண்ணை பாக்குக்கும் டிக்கற் போடுங்கோ...''என்றார். அவர்கள் பாக்குக்கும் டிக்கற்றைப் போட்டார்கள். பதினைந்து கிலோவுக்கு மேல் என்றால்தானே டிக்கற்? மூன்றும் சின்னச்சின்ன பாக். பாவம்... விபரம் தெரியாததுகள்.

(5)

"தம்பி- பஸ் எப்ப வெளிக்கிடும்?"

''அண்ணை- நாப்பது டிக்கற் வந்தால்தான் பஸ் வெளிக்கிடும"

''இதுக்கிளை நாப்பது வராதே...?'' கொஞ்சம் எரிச்சலாய் கேட்டேன். அவர் பேசாமல் நின்றார்.

"தம்பி- முள்ளியவளை போகுதே...?"

"இல்லையம்மா- இது புதுக்குடியிருப்பு. முள்ளியவளை வசு வர நேரம் செல்லும்." என்றார். அந்தம்மா தலையைச் சொறிந்து கொண்டு நின்றார்.

''இதிலை ஏறுங்கோவனம்மா... புதுக்குடியிருப்பு போய் அங்கையிருந்து முள்ளியவளைக்குப் போகலாம்." என்றார்.

"உப்பிடிச் சுத்திப்போறது எவ்வளவு தூரம் தம்பி"- இது அம்மா.

"தூரத்தைப் பாத்து நில்லுங்கோ- இனி அஞ்சு மணிக்குத்தான் முள்ளியவளை வசு''

"என்ன அஞ்சுமணிக்கோ...அப்ப இரவு பத்துமணியாகும் முள்ளியவளை போய்ச் சேர" சலிப்போடு சொன்னாள்.

"இதிலை ஏறுங்கோம்மா- வேளைக்கு முள்ளியவளை போகலாம்." அந்தம்மா அவரின் பேச்சைக் கேட்டு ஏறினாள்.

அந்த அம்மா ஏறி அரைமணிக்குள் முள்ளியவளை பஸ் வந்தது. நான் அம்மாவுக்குச் சொன்னேன். உதுதான் முள்ளியவளை பஸ் என்று. அம்மா தலையில் கையை வைத்தாள்.

"அம்மா... நீங்கள் டிக்கற்றை குடுத்திட்டு அந்த பஸ்சிலை ஏறுங்கோ- அந்த டிக்கற்றை வேறை ஆருக்கும் குடுக்கட்டும்."

''ஓம் தம்பி-'' என அம்மா எழும்பி நடத்துநரிடம் சென்றாள்.

"டிக்கற் போட்டாச்சு- நான் ஒண்டும் செய்யேலாது." என்றார் நடத்துநர்.

(6)

''தம்பி- எத்தினை மணிக்கு பஸ் வெளிக்கிடும் நான் செத்த வீட்டுக்குப் போகோணும'' என அழாக்குறையாக கேட்டேன்.

"அண்ணை- இப்ப நாப்பது டிக்கற் போட்டால் பஸ் எடுக்கோணும். அந்த நாப்பது டிக்கற்றும் புதுக்குடியிருப் பெண்டால் தான் எங்களுக்குக் கட்டும்" என்றார் நடத்துநர்.

" ஏன்தம்பி கட்டாது. இப்ப எண்ணை பெற்றோல் எல்லாம் விலை குறைஞ்சிட்டுத்தானே... புளியங்குளத்திலை இருந்து புதுக்குடியிருப்புக்கு நூறு ரூபா எடுக்கிறியள்- கட்டாதே?" என்றேன்.

அவர் என்பேச்சை காதில விழுத்தாமல் ''சரி சரி இனி மற்றாக்கள் எல்லாம் ஏறுங்கோ" என்றார். மாங்குளம் கரிப்பட்ட முறிப்பு என இடையிலுள்ளவர்கள் எல்லாம் ஏறினார்கள். ஒரு ஐயா வந்து கேட்டார்.

"தம்பி- கனகராயன் குளம் போகோணும். ஏற்றுவியளே..?"

(7)

பஸ் சரியாக இரண்டு மணிக்கு மாங்குளத்துக்கு வந்தது. மாங்குளத்துக்கு வந்தால் பஸ் கொஞ்ச நேரம் நிக்கும். ட்ரைவர் பஸ்சை திருப்பி தனக்கு சினேகிதமான கடைவாசலில் நிறுத்தினார். எல்லோரும்சாப்பிட இறங்கினார்கள். நானும் இறங்கி ரீ குடித்துவிட்டு வந்தேன்.

பஸ்சில் எல்லோரும் ஏறினார்கள். ரைவரும் நடத்துநரும் வரவில்லை. நான்.நேரத்தைப் பார்த்து பார்த்து துடித்துக்கொண்டிருந்தேன்.

வியர்வையில் குழந்தைகள்அழுதார்கள்.

''நேரம்போகுது. ரைவரைக் காணேல்லை'' ஒருதன் சினந்தான். நடத்துநர் வெற்றிலை சப்பி வெளியில்துப்பிவிட்டு உள்ளே போனார்.

''தம்பி முள்ளியவளை வசு போகப் போகுது" அந்த அம்மா பெரிய சத்தமாய்ச் சொன்னாள்.

''அவைக்கென்ன பிறிச் சாப்பாடு. நாங்கள் இஞ்ச பசியில கிடக்கிறம்.'' ஒரு வயோதிப ஐயா கொட்டாவி விட்டபடி சொன்னார்.

ரைவர் சரியாக அரை மணித்தியாலத்துக்குப் பிறகுதான் பஸ்சில் ஏறினார். எனக்கு பஸ்காரரைப் பேசவேணும்போல இருந்தது. அவசரம்என்று பேசினால் பஸ்சை ஆறுதலாய் ஓட்டுவார்கள் என்பதனால் நான் பேசவில்லை.

மிதிபட்ட அட்டை மாதிரி பஸ் மெல்ல மெல்ல வளைந்து நெளிந்து கரிப்பட்ட முறிப்பில் நின்றது. இராணுவக்கட்டுப் பாட்டுக்குள் இருந்து வந்தவர்கள் எல்லாம் இறங்கிப் பதிந்தார்கள்.

நான் நேரத்தைப் பாத்தன் மூன்றுமணி மாமாவின் சடலம் எடுக்க முன்னம் போகும் எண்ணம் மெல்ல மெல்ல கரையத் தொடங்கியது. ''அஞ்சாறு பேர்தானே போனதுகள் எவ்வளவு நேரம் என்ன செய்யுதுகள்?"

பிரயாணக்களையில் ஒரு முதியவர் எரிந்தார்.

பதினைந்து நிமிடத்தைத் தொலைத்துவிட்டு பஸ் வெளிக்கிட்டது.

''தம்பி- முள்ளியவளை வசு வெளிக்கிடுறதுக்கிடையில எங்களைக் கொண்டுபோய் விடுவியே..." நடத்துநர் சிரித்தார்.

நேரம் நான்கு மணிக்கு மேலிருக்கும். பஸ் ஒட்டுசுட்டானில் மறிக்கப்பட்டது.

"இதில ஏன்நிக்குது?"

"இதிலையும் பதியோணும"

"அப்ப நாங்கள் எத்தினை மணிக்கு வீட்டுக்குப் போறது..?" ஒரு நாள் முழுதும் வசுக்குள் இருப்பின் இந்த சரீரம் இந்த வயதில தாங்குமே..? பதிவது ஏன் என்பதொன்றும் விளங்காத ஒரு வயோதிப எரிவு இது.

"பதிய எண்டு றங்கினவை இவளவு நேரமும் என்ன செய்யினம்?"

''சுறுக்காப் பதியிற ஆக்களே உங்கைஇருக்கினம். ஆன ஆக்களை உதுக்கு விட்டால் என்ன?"

பஸ்சே சினந்துகொண்டது.

நான்மாமாவை நினைத்து அழுதேன்.

அந்தஅம்மா முள்ளியவளை பஸ் போயிருக்கும் எங்கே இரவு தங்குவது என்பதை நினைத்து வெம்பினாள். எங்கள் குமுறல்கள்... வேதனைகள் ... எரிவுகள்.. பஸ்சில்பெருக பஸ் வெளிக்கிட்டது.

"இனியும் பதியிற இடம் இருக்கே...?" அந்த அழகி கேட்டாள்.

கெரடமடுவில இருக்கு.,, நடத்துநர் சொன்னார்.

''கொழும்புபோற தூரமே தம்பி புளியங்குளத்தில இருந்து புதுக்குடியிருப்பு...?"

ஒருதரும் சிரிக்கவில்லை ♦

**-எரிசரன் -**



# உள்ளத்தை உருக்குபவை

கொஞ்சும் மொழிபேசி தத்தித் தவழ்ந்து மெல்ல விழுந்து எழும்பும் உங்கள் பிள்ளைச் செல்வங்களை கட்டியணைத்து முத்தமிடும் அம்மாவும் அப்பாவும் தருவது என்ன பாசம் தானே.

எட்டி நட நடந்து நாப்பிறழ்ந்து மொழி பேசும் போது அப்பா எம்மை எங்கு அழைத்துச் செல்வார் பள்ளிதானே.

நாதமணி ஒலிக்க நாங்களெல்லாம் துயிலெழும்ப மறுத்தாலும் தாவி அணைத்து எம்மையெழுப்பி கையெடுத்து திசைகாட்டும் அம்மாவின் திசையில் இருப்பது ஆலயம் தானே?

இவையெல்லாம் எதற்கு எமக்கு அம்மாவும் அப்பாவும் காட்டுவார்கள் நாமெல்லாம் நாட்டிற்கும் வீட்டிற்கும் நற்பிரசைகளாக வர வேண்டும் என்றுதானே.

ஆனால் அதே அப்பா எம்மை பள்ளிக்கும் கோவிலுக்கும் அழைத்துச் சென்று நல்ல சூழலையும் புது அனுபவங்களையும் தர வேண்டியவர்கள் ஏன் நாம் தீய பழக்கங்களை பழகக் கூடிய சூழலை தோற்றுவிக்கின்றார்கள்?

அன்று அப்பா கடைத் தெருவிற்கு புறப்பட்டபோது அம்மா "இஞ்சாருங்கோ... உவன் சின்னவனைக் கூட்டிக்கொண்டு போய் கோவிலடியில இறக்கி விடுங்கோ என்று கூற" அப்பா என்னை அழைத்துச் சென்று கோவிலடியில் விட முதல் எட்ட இருந்த மதுக்கடை வாசலில என்னை இறக்கி காக்க வைத்து விட்டு உள்ளே போய் மது அருந்தி விட்டு வந்தார்.!

நான் நீண்ட நேரம் அப்பாவின் வருகைக்காக காத்திருந்தேன். அத்தோடு எனக்குள்ளேயும் ஒரு தவிப்பு அங்கு என்னதான் நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள....வரும் தானே.

அம்மா ஏசினா நீ ஏன் அங்க போனாய்யெண்டு. நானா போனேன் அப்பாதானே என்னைக் கூட்டிக் கொண்டு போனவர்.

-வேழினி-

## டொக்டர் ருத்ரன்




சொன்ற வாரத் தொடர்ச்சி....

தைரியம்,வீரம் ஆகியவை காதல்தானாய் உருவாக்கும் உணர்வுகள், எந்தத் தடையையும் எதிர்கொள்ளும் துணிவு காதலின் இயல்பு. ஆனால் பலருக்கு ஈர்ப்பு சற்று நெருக்கமானபின் அச்சம் வரும். காதல் மட்டுமே வாழப்போதுமா என்ற லேசான சந்தேகம் வரும். அது நம்பிக்கையின் மையின் அடையாளம். நம்பிக்கை இல்லாமல் காதல் கிடையாது. "எங்கம்மா விஷம் குடிப்பேன் என்று மிரட்டறாங்க..." "என்னால என் தங்கச்சி கல்யாணத்துக்கு பிரச்சினை வரக் கூடாதில்லே..." என்றெல்லாம் உறவுக்கு முற்றுப்புள்ளி வைக்க முகவுரை எழுதுபவர்கள் பொய்தான் கூறுகிறார்கள். "உன்னோடு தொடர்ந்துவாழ, நீ மட்டுமே போதுமா என்ற சந்தேகம் வந்துவிட்டது'' என்ற அடுத்தவரிடமோ தன்னிடமோ கூறும் தைரியம் இல்லாத போதுதான் இந்த வார்த்தைகள் சாக்குகள், சமாதானங்கள் தோன்றும்.

அப்படியென்றால் காதலுக்காக இதுவரை வாழ்ந்த குடும்பத்தை ஒழிக்க வேண்டுமா என்று பலர் கேட்பார்கள். குடும்பத்தின் அனுமதியோடு காதலிக்க ஆரம்பிக்காத போது, காதலைத் தொடரவும் நிரந்தரமாக ஆக்கிக்கொள்ளவும் ஏன் அனுமதி பெறவேண்டும்? இரண்டில் ஒன்று தேர்வு செய்யவேண்டும் என்ற நிலைமையே காதலில் கிடையாது. காதலுக்குப் பதிலாக, மாற்றாக இன்னொன்று கிடையாது.

சரி,இத்தனை நாள் வளர்த்த குடும்பத்திற்கு இப்படியா பதில் செலுத்துவது. இதைவிடக் காதலைவிட்டுக் கொடுக்கலாம் என்று சிலர் கூறுவார்கள். குடும்பம் நம்மை வளர்த்ததற்குக் காரணம் பாசம். பாசத்துக்குக் கணக்குப்போட்டு இத்தனை லட்சம் தருகிறேன் எல்லாக் கணக்கும் சரியாகிவிட்டது என்று கூறமுடியுமா? அப்படி எதிர்பார்ப்பதும் பாசமாகுமா? பாசம் என்பது அடுத்தவர் நலனில்,மகிழ்வில் குடும்பம் காட்டும் அக்கறை. காதலரோடு மகிழ்ச்சியாக நாம் இருந்தால் நம் குடும்பமும் மகிழ்ச்சியடைய வேண்டும். கௌரவம், சமூகம், பாரம்பரியம், பெருமை, பணம், ஜாதி ஆகிய காரணங்களுக்காகக் குடும்பம் நம் காதலை மறுத்தால் -அது நம் மகிழ்ச்சியைவிட தன் பெருமையை அதிகமாக எடைபோடுவதாகத்தான் பொருள். இந்தக் கோணத்தில் பார்த்தால் நாம் மகிழ்வதைவிட,தாம் பெருமையாய் இருப்பதையே குடும்பம் விரும்புகிறது என்று தெரியும். நம் மகிழ்ச்சி போலியான காரணங்களுக்காகப் பிறருக்குப் பிடிக்கவில்லை என்றால், நம் மகிழ்ச்சியான காதல் உண்மையானது என்றால் நம் மகிழ்வைத் தடுக்கும் உரிமை யாருக்கும் இல்லை என்றுதான் தீர்மானிக்க வேண்டும். இப்படி முடிவெடுக்குமுன் நிறைய சிந்திக்கவேண்டும்.

காதலிப்பவர்களைவிடக் காதலிப்பதாக நினைத்துக் கொண்டிருப்பவர்களே அதிகம். அந்த உணர்வின் வேகத்தில் நம் உறவு காதல்தான் என்று நாம் சத்தியம் செய்ய முடியும். பல நேரங்களில் காதலையும் காதலரையும் நாம் முழுமையாக அறிந்து கொள்ளாததால், எல்லோரையும் விலக்கி, எதிர்த்து காதலரோடு வாழ்வதே போதுமான சுகம் என்று தீர்மானிக்குமுன் சற்று சிந்திக்க வேண்டும். எவருக்குமே தன் காதலைப் பரிசீலிக்கப் பிடிக்காது. சில கவர்ச்சிகள் காதலளவுக்கு மனதை ஆக்கிரமிப்பதால்தான் எச்சரிக்கை தேவை.

காதல் உன்னதமான, உற்சாகமான, உயர்வான, உயரும் வழிக்கான உறவு என்றாலும் அது அடிப்படையில் ஓர் ஒப்பந்தம். ''நாம் ஒன்றாக வாழ்வை எதிர்நோக்கப் போகிறோம். நமக்கு எதிரே வரும் தடைகளைக் கைகோர்த்துத் தாண்டப் போகிறோம்: நமக்குக் கிடைக்கும் மகிழ்வுகளைப் பகிர்ந்து அனுபவிக்கப் போகிறோம் - இது தற்காலிக உறவல்ல, உயிருள்ளவரை இப்படித்தான் வாழப் போகிறோம் என்பதே இந்த ஒப்பந்தம்'' இப்படிப்பட்ட ஒப்பந்தம் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்படுவது தான் திருமணம். காதலிக்க ஆரம்பித்த போதே வாழ்வைச் சமமாய் அனுபவிக்க முடிவெடுப்பதால் உள்ளுக்குள் காதலின் போதும் திருமணம் போலவே இப்படியோர் ஒப்பந்தம் ஏற்படுகிறது. திருமணம் பகிரங்கம். காதல் அந்தரங்கம். இவ்வளவு பொறுப்பு நிறைந்த ஒப்பந்தத்திற்கு உடன்படு முன் பரிசீலிப்பதே முதிர்ச்சி. முதிர்ச்சிதான் முழுமையான காதலுக்கு அஸ்திவாரம்.

''சந்தித்த நேரத்தில் சிந்திக்கவேயில்லை,தந்துவிட்டேன் என்னை" என்பது சுகமான பாடல். சிந்திக்காமல் தந்துவிட்டால் சந்திக்க வேண்டியவை கண்களுக்குத் தெரியாமல் போய்விடும். 'காதலிக்கிறேன் இவரோடுதான் வாழப்போகிறேன் என்ற தீர்மானம் போதாது. நலமாக வாழப்போகிறேன் என்ற தன்னம்பிக்கையும் அவசியம். இப்போது சில பிரச்சினைகள் இருக்கின்றன, பின்னால் சரியாகிவிடும் என்பது நம்பிக்கையல்ல, நப்பாசை. பிரச்சினை என்று தெரிந்த பிறகு அது வளரக் கூடாது. பிரச்சினையைத் தீர்க்கவோ தீர்த்துக்கொள்ளவோ முகூர்த்தம் தேடிக் காத்திருக்கக் கூடாது. காதலில் பலர் இந்தத் தவற்றினை செய்கிறார்கள்.

வாழ்க்கை முழுதும் இணைந்திருக்கப் போகிறோம் என்று முடிவெடுக்கும் கட்டத்தில்தான்- இருவரும் முடிவெடுக்கும் கட்டத்தில்தான் காதல் ஆரம்பம். அதற்கு முன் எவ்வளவு நெருக்கமும் அன்பும் அக்கறையும் இருந்தாலும் அது ஈர்ப்புத்தான்,கவர்ச்சிதான். இந்த முடிவெடுக்க காதலிக்கத் துவங்கும் கட்டத்தில் தான் சிந்திக்க வேண்டும். சிந்திப்பதற்கு மற்றவரை எடைபோடுவது மட்டுமல்ல, தன்னையே தெரிந்து கொள்வதுமாகும்.

ஏன் இவரைக் காதலிக்கின்றோம் என்ற சாதாரண கேள்விபோதும். கேள்வியின் எளிமையே விடையை எளிதாக்கிவிடும். கேள்விகள் இல்லாத நிலையே காதல் என்பது உண்மைதான், கேள்விகளின் விடையாய் அமையும் காதலே அதன் பிறகு கேள்விகள் இல்லாத சுகமாகும்.

''அடிக்கடி பார்க்கிறோம், பேசுகிறோம்,ஒன்றாக ஐஸ்கிரீம் சாப்பிடுகிறோம், சினிமா போகிறோம்,கடற்கரையில் கொஞ்சுகிறோம், கட்டிலில் கூட இணைந்திருக்கிறோம் - ஆகவே காதலிக்கிறோம்'' என்று சொல்பவர்கள் ஏமாறுகிறார்கள். இவை அனைத்தும் ஒன்றாய்க் காலத்தைக் கழிக்க விரும்பும் கவர்ச்சியின், ஈர்ப்பின் விளைவுகள் காதலின் காரணமல்ல இவை. காதலின் காரியங்களாக இருக்கலாம் அவ்வளவுதான். ஏன் காதலிக்கிறோம் என்பதற்கு விடையாக இப்படி நம்முள் தோன்றக் கூடாது. அவரது அழகு, அறிவு, ஆற்றல், பண்பு என்று ஏதாவது ஒரு முக்கிய காரணம் இருக்கும். ஆனால் கேள்விகள் இங்கேயே நின்றுவிடக் கூடாது.

நேற்றுப் பிடித்த உணவு, அன்று விரும்பிய உடை இவை மாறுவது போலத்தான் சக மனிதரிடம் உள்ள ஈர்ப்பும் மேலோட்டமாய் இருத்தல் மாறும். நெருங்கிப் பழகும்போது தான் அவரது உண்மையான மனதை ஓரளவாவது புரிந்து கொள்ள முடியும். பழகப் பழகத்தான் அடுத்தவரது குறைகளும் தெரியும். அதையும் மீறி ஈர்ப்பு இருந்தால் அதையும் ஏன் என்று கேட்டுக்கொள்ள வேண்டும்.

பாவம், பரிதாபம், கருணை என்றெல்லாம் பதில் மனதில் தோன்றினால் அது காதலல்ல. ஒருவர் மீது இரக்கப்படுவது உயர்ந்த எண்ணம் தான். இரக்கத்தோடு உறவை ஆரம்பித்தால்; உள்ளே தியாகம் செய்ததாக ஓர் ஆணவம் பிறக்கும். அப்போது அது தியாகமுமல்ல. காதலுமல்ல என்பதில் தெளிவு வேண்டும்.

இந்தக் காதலால் நாங்கள் இருவருமே வளர்கிறோம். புதிய அனுபவங்களைப் பெறுகிறோம். வாழ்க்கையைக் கற்றுக் கொள்கிறோம். எனவே இனி என்றும் ஒன்றாய் இருக்க விரும்புகிறோம் என்ற பதில் வந்தால் தான் அந்த உறவு முதிர்ந்த காதலாகும்.

காதல் பிரத்யோகமானது. பகிர்ந்து கொள்ளவோ பங்கு போட்டுக்கொள்ளவோ முடியாதது. அதற்காகக் காதலரை இறுக்கிப் பிடித்து எங்கும் விடாமல் தக்க வைத்துக்கொள்ளும் மனநிலை இருந்தாலும் அது காதலைச் சிதைக்கும். கலீல் ஜிப்ரானின் இந்த வரிகளைச் சிந்தியுங்கள்.

தனதென்று நம்புபவர்கள் அதைத் தக்க வைத்துக் கொள்ள முயல்வதில்லை தக்க வைத்துக் கொள்ள முயன்றால்
அது என்றும் தனதாகிவிடப் போவதில்லை.

என் காதலியை எனக்குத் தெரியாதவன் வண்டியில் அழைத்து வந்து விட்டால் - அவன் யார் என்ற கேள்வி அறிமுகப்படுத்திக் கொள்ளத்தான் என்றால் - அது முதிர்ச்சி. சந்தேகத்தோடு கேட்டால் அங்கே காதலின் முடிவு தோன்றும். இது பெண்கள் - ஆண்கள் இருவருக்குமே பொருந்தும். அன்பும் அக்கறையும் இருப்பதால் அடுத்தவர் விலகமாட்டார் என்ற நம்பிக்கை தான் காதல். விலகுவதை விலங்கு போட்டும் தடுக்க முடியாது என்று புரிந்து கொண்டால் தான் வாழ்க்கை தெளிவாகும். காதல் என்ற ஒப்பந்தம் பொழுது போக்க அல்ல. இனிவரும் பொழுதுகள் அனைத்தையும் இன்பமாக்க - இது நினைவில் இருக்க வேண்டும்.

எல்லா கேள்விகளுக்கும் தெளிவான பதில் கிடைத்தால், பதில்கள் இருவரையும் சரியாகப் புரிந்து கொள்ள உதவினால், அந்தப் புரிதல் வருங்காலத்தை நலமாக்கும் என்ற தீர்மானமான முடிவு தெரிந்தால் - காதலுக்காக, காதலோடு, காதலராக வாழ்வதற்காக எதற்கும் துணியும் வீரமும் விவேகமும் தானாய் வரும்.

காதலைப் பற்றி இன்னொரு அழகான திரைப்பாடல் வரி உண்டு. இதை ஆழமாகச் சிந்தித்துப் புரிந்து கொண்டால் காதல் இன்னும் அழகாகத் தெரியும்.

"அழகென்னும் விருந்தொன்று பரிமாறினேன் - அதைப் பரிமாறும் நேரத்தில் பசியாறினேன்"

பரிமாறும் போது பசியாறினால் அது காதல். பசிக்கின்றதே என்று பரிமாறினால் அது பாசம். இரண்டையும் குழப்பிக் கொள்ளாதவர்களுக்கு காதலை விட வேறெந்த உறவும் முக்கியமும் கிடையாது. அவசியமாகவும் தோன்றாது. ◆

## அறிந்து கொள்ளும் திறமை



– மெர்வின்

ஒருவன் ஒரு துறையில் எந்தளவு வெற்றி பெறுகிறான் என்பது அவனை அத்துறையில் ஈபடுமாறு ஊக்குவிக்கும் உண்மைகளைப் பொறுத்துத்தான் உள்ளது என்கிறார் டேவிட் மெக்லெல்லண்ட்.

சிறுசிறு சோதனைகளைப் பயன்படுத்துவதன் மூலம் எந்தவொரு தனிமனிதனின் செயல் திறனையும்கண்டுபிடித்து விடமுடியும்.

வெற்றியடைய மிகவும் இன்றியமையாத ஊக்கிகளை ஊக்குவிக்கும் உண்மையை அதிகரிக்கவும் செய்ய இயலும். அதன் மூலம் செயல் திறத்தையும் அதிகரித்து வெற்றிமேல் வெற்றியாக குவிக்க இயலும்.

ஒருவன் தன்னைப் பற்றி என்ன செய்கிறான்என்ன நினைக்கிறான் என்பதையும்அனது சுற்றுப் புறத்தையும் மாற்றி அதன்மூலம் அவனை ஊக்குவிக்கும் உண்மைகளை அதிகப் படுத்து வதிலேயே வெற்றிஅடங்கியுள்ளது என்பது இவருடைய ஆழ்ந்த நம்பிக்கை!

ஒருவன் தன்னைப் பற்றி தனது திறமையைப் பற்றி வழக்கமாக எவ்வாறு எண்ணுகிறான் என்பதை முற்றிலுமாக மாற்றியமைப்பதன் மூலம் உண்மையான செயல் திறத்தை மாற்றியமைத்துவிட முடியும்.

நாம் வெற்றிபெற ஊக்குவிக்கும் ஊக்கிகள் மேல் மனதிற்கும் உள்மனதிற்கும் இடையில் இரண்டையும் பிரிக் கின்ற எல்லைக்கோட்டுப் பகு தியில் அமைந்துள்ளன. இதுவே பகற்கனவுக்கு காரணமாக உள்ளன.

நமக்கு நாமே நம்மையும் அறியாமலேயே உறவாடிக் கொள்வதும் பேசிக் கொள்வதும் கூடப் பகற் கனவுதான். பகற் கனவுகளை மாற்றிக்கொள்வதன் மூலம் வெற்றிக்கான ஆர்வத்தை கொழுந்துவிட்டு எரியச் செய்ய முடியும்.

இந்த ஆர்வ நெருப்பு சோர்ந்து உட்காரவிடாமல் வெற்றியை நோக்கிப் பிடரியைப் பிடித்துத் தள்ளிக்கொண்டே செல்லும். வெற்றியைச் சுலபமாக அடைய இங்கு கூறப்பட்ட வழி தெளி வானது.

பெரும் சாதனை ஒன்றைச் சாதிக்க விரும்பும் நாம் அச்சாதனையின் ஒவ்வொரு பகுதியும் வெற்றியாய் முடியும் போது நமக்கு நாமே விரும்பும் ஒன்றைப் பரிசளித்துக்கொள்ள வேண்டும்.

பரிசால் உண்டாகும் உற்சாகம் சாதனையில் வெற்றிக்கான ஆர்வத்தை வலுப்படுத்திக் கொண்டே இருக்கும்.

இதனால் சாதனை எவ்வளவு பெரிதாயினும் வெற்றி பெறும் நமக்குச் சோர்வோ களைப்போ விரக்தியோ நம் பக்கம் வராது. வெற்றியை நோக்கி நம்முடைய வேகம் அதிகரித்துக்கொண்டே செல்லும்.

நாம் பணிசெய்யும் துறையில் ஏற்கனவே வெற்றி பெற்ற வர்களின் உருவங்களை நம் மனதில் ஆழப்பதித்து வைத்துக் கொள்வதின் மூலம் நாம் அவர்க ளாகவே நினைத்துக் கொள்வதின் மூலம் நம்மை அறியாமலேயே வெற்றியை விரைவில் அடைய முடியும்.

'நான்அடைந்துள்ள இப்பெரும் புகழ் எனக்கு உரியதன்று. புத்தகங்களில் கண்டெடுத்து என்மனதில் உருவகித்து வைத்திருந்த அந்தப்பெரிய மனிதர்களையே சாரும்!' என்றார் ஹாரிட்ரூமன் எளிய குடும் பத்தில் பிறந்து அமெரிக் காவின் ஜனாதி பதியானபோது!

நிறைய சாதிக்க விரும்பினால் அதிக சவால்களையும் பொறுப்புக்களையும் விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவற்றில் வெற்றி மேல் வெற்றி பெறும்போது மேலும் சவால்களையும் பொறுப்புக் களையும் விரும்பி ஏற்றுக் கொள்வதன் மூலம் வெற்றி பெறுவது எளிதாகிவிடும்.

தேவைகள் நிறைந்த ஒருவராக நாம் நமது உருவத்தை நமது மனதிலேயே பதிய வைத்துக் கொள்வதின்மூலம் இத்தகைய சவால்களையும் பொறுப்புகளையும் நாமே உண்டாக்கிக்கொள்ள முடியம்.

நாம் அவசியம் செய்ய வேண்டியது-

'அவசியம் வெற்றிபெற்றே தீரவேண்டிய ஒருவராக நம்மை உருவகித்துக்கொள்ள வேண்டும்.'

நினைவு நிலைக்கு சற்று அப்பாற்பட்ட நிலையில் நமக்கு நாமே பேசிக்கொள்ளமுடியம். நம்மை நாமே திடப் படுத்திக் கொள்ளும்படி பேசிக்கொள்ள வேண்டும். நம்முடைய பேச்சே புது உற்சாகத்தைத் தரும். □

பண்பட்டு மேம்பட்ட மனிதர்களே, சமத்துவத்தின் உண்மையான உபதேசியர்கள். – மேத்யூஆனால்ட்




# கழுகொன்று குருதியில் நனைகிறது

அனுபாயன்

1942ம் ஆண்டென்று நினைக்கிறன். ஸ்ரலின்கிராட் சமர்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீங்களா? கட்டாயம் கேள்விப்பட்டிருப்பீங்கள். ஏனெண்டா வரலாற்றிலேயே மிகவும் உக்கிரமான நகர்ப்புறச்சமர். எங்கட ஊரான லெனின் கிராட்டிலதான் நடந்தது. ஜெர்மானியர்கள் ஐரோப்பாவில் பெற்ற வெற்றிகளின் உச்சக் கட்டமா லெனின்கிராட்தான் இருந்தது. தங்கட நாட்டில இருந்து ஆயிரக்கணக்கான மைல் முன்னேறி வந்து எங்கட லெனின்கிராட்டை முற்றுகையிட்டினம்.

ஸ்னைப்பர் அணியில இருந்த எங்களுக்கு நல்ல வேட்டை. என்ரபேர் நிக்கோலாய் குலிக்கோவ். சாஜன்ட் வஸ்லி ஸைற்ஸெவ்வும் நானும் ஒரு ஸ்னைப்பர் அணியாகச் செயற்பட்டோம். உங்களுக்கு சாஜன்ட் வஸிலி ஸைற்ஸெவ் பற்றி கொஞ்சம் சொல்லவேணும். லெனின் கிராட்டில அப்ப நிண்ட ஸ்னைப்பர்களில் தலை சிறந்தவரா அவர் இருந்தார். அகன்ற முகம் கட்டுமஸ்தான தேகம். யூரல் மலையில முந்தி மந்தை மேய்க்கிறதோட வேட்டையாடின அனுபவம் தனக்கு இருக்கெண்டு எனக்கு ஒருக்காச் சொன்னவர். வேட்டையாடிய அனுபவம் இருக்கிற ஆக்கள் ஸ்னைப்பர் வேலைக்கு நல்ல பொருத்தமானவை எண்ட அபிப்பிராயம் எல்லா ராணுவங்களிலயும் இருக்கு எண்டும் அவர் எனக்குச் சொன்னவர். அது உண்மையாகத்தான் இருக்கும். ஏனெண்டா நாங்கள் லெனின் கிராட்டுக்கு வந்தபிறகு முதல் பத்து நாட்களில் மட்டும் 40 ஜெர்மன்காரங்களை அவர் சுட்டுப்போட்டார். பிறகு அவர் 100 பேரைச் சுட்ட உடன் மொஸ்கோவில இருந்து பெரிய அதிகாரி ஒருவர் வந்து வஸிலிக்கு ''ஓடர் ஒப் லெனின்'' என்ற பதக்கத்தை சூட்டிப்போட்டுப் போனார். அவர் எங்களுக்குத் தந்த பேப்பரில வஸிலியைப்பற்றி நிறைய எழுதியிருந்தது. ஜெர்மன்காரருக்கு எதிரா எங்கடநாடு காட்டின எதிர்ப்பின்ர ஒட்டு மொத்த வடிவம் எண்டு அவரை அதில சொல்லியிருந்தீனம்.

2

என்ர பேர் வொன் அல்ட்றிச். ஜெர்மன் ஸ்னைப்பர் அணியொண்டில நான் ஸ்பொட்டரர் அதாவது இலக்குத் தேடுறவரா இருந்தன். நானும் ச்மானும் ஒரு அணியில இருந்தம். எங்கட ராணுவம் லெனின் கிராட்ட முற்றிகையிட்ட கையோட அங்க போகச்சொல்லி எங்களுக்குச் சொல்லப்பட்டுது. 1942ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் நாங்க அங்கபோன போது லெனின் கிராட்டில பத்தில ஒன்பது பகுதிகள்ள எங்கட வீரர் புடிச்சுப்போட்டினம். ஆட்லறி விமானத்தாக்குதல்களால் அந்த நகரம் சின்னாபின்னப்பட்டுப்போய் கிடந்தது. ஒரு காலத்தில பெரிய பெரிய தொழிற்சாலைகள் இருந்த இடங்களில வெறுங் கற்குவியல்களாகத்தான் கிடந்தது. அதுக்குள்ள தான் சுரங்கப்பாதைகளை வெட்டி எங்கட நிலைகளை அமைச்சுக் கொண்டு கட்டடங்களின்ர சிதைவுகளையே எங்களுக்குக் காப்பாக்கிக் கொண்டு சண்டை செய்தம். பெரிய மோதல்கள் தணிந்து போனதால எங்களுக்குத்தான் வேலை. ஆனா திடீரெண்டு எங்கட ஆக்கள் படார் படாரெண்டு ஸ்னைப்பர் சூடுபட்டுச் சாகத் தொடங்கிச்சினம். பத்து நாள்ல ஒரு இடத்தில மட்டும் 40 பேர் குளோஸ். பிறகு வந்த நாட்களில இந்தத்தொகை 200க்கு மேல அதிகரித்துப் போக எங்கட ஆக்களுக்கு பேதி கலக்கத் தொடங்கியிட்டுது. என்ன செய்யிறதெண்டே எங்கட கமாண்டர்மாருக்குத் தெரியேல்ல. நிலைமையைச் சொல்லி பேர்லினுக்கு அறிக்கையளை அனுப்பிப் போட்டு காத்திருந்தினம். ஒருநாள் பேர்லினில இருந்து இரகசியச்செய்தியொண்டு வந்தது. பிரச்சினைக்கு தீர்வுகாண ஒராள அனுப்பிறதாயும் அவருக்கு சகல ஒத்தாசைகளையும் கொடுக்கச் சொல்லியும் அந்தச் செய்தி சொல்லிச்சு. எங்களுக்க ஆர் வரப்போறார் எண்டு ஆளுக்காள் ஊகிக்கத் தொடங்கிற்றினம். குறிச்ச நாளில வந்து இறங்கின ஆளைக் கண்ட உடன பெரிய வியப்பு எங்கட வீரருக்கு ஏற்பட்டுது. ஸோஸென் நகரில இருக்கிற ஸ்னைப்பர் பாடசாலையின்ரகமாண்டர் சண்டைக்களத்துக்கு வருகிறதெண்டது ஒண்டும் லேசுப்பட்ட விசயமில்ல. மேஜர் கோணி எண்டா எங்கட ராணுவத்தில பெரும் பேர் பெற்ற மனுஷன்



அவர்தான் வந்து இறங்கியிருந்தார். எல்லாரும் அவற்ற தோள்பட்டையைப் பாத்தம். ''கழுகுச்சின்னம் தரம் ஒண்டு'' பட்டி அங்க இருந்துது. எங்கட ஸ்னைப்பர் அணிகளின்ர முக்கியத்தை உணர்ந்த எங்கட இராணுவம் எங்களுக்கு மூண்டு விருதுகளை உருவாக்கியிருந்தது. இருபது எதிரி வீரரைச் சுட்டா தரம் மூண்டு 40 பேரைப் போட்டா தரம் இரண்டு அறுபது பேருக்கு மேல சுட்டா தரம் ஒண்டு எண்டு விருதுகள் இருந்துது. எங்களுக்குள் நம்பிக்கை வளரத் தொடங்கிச்சு. எனக்கும் நல்ல காலந்தான். மேஜர் கோணிங்குக்கு ஸ்பொட்டரா உதவிசெய்யச் சொல்லி எனக்கு எங்கட கமாண்டர் உத்தரவு போட்டார். வந்த உடனேயே அவர் லைனுக்கு போவோமெண்டு சொல்லிப் போட்டார். அவரையும் கூட்டிக் கொண்டு அங்க போனன். அவற்ர எல்லா செயல்பாட்டிலையும் ஒரு அமைதி தெரிஞ்சுது. மிக அவதானமா மறைவிடம் ஒண்டத் தெரிவு செய்தார். இருட்டு வந்தப் பிறகு அத உருமறைப்புச் செய்தம். எதிரிய ஏமாத்தவெண்டு போலியாகவும் இரண்டு மூண்டு மறைவிடத்த உருவாக்கிவிட்டம். பிறகு நீண்ட காத்திருப்பு ஒண்டு தொடங்கிச்சுது. வஸிலி லைற் எண்ட முக்கிய பதுங்கிச்சுடுற ஆள்தான் தனக்கு இலக்கு எண்டு எனக்கு ரகசியமாகச் சொன்னார். எனக்கும் நல்ல சந்தோசம். எங்கட ஆக்களப் போட்டுத்தள்ளின அவனக் கட்டாயம் போடோணும் எண்டு எனக்கும் விருப்பமா இருந்தது. நானும் பெருத்த ஆவலோடு அவரோட வேலை செய்யத் தொடங்கினன். அவர் குறிப்பாக சில விடயங்கள கவனிச்சுப் பார்க்கும்படி சொன்னார். முழுமேலங்கி போட்டவர்கள் உருமறைப்புச் செய்தவர்கள் தனியா நகருற ஆக்கள் நல்ல தொலைக் காட்டிகளை வைச்சிருக்கிறவை எண்டு தேடிப்பார்க்கச் சொன்னார். துப்பாக்கியால சுடயிக்க வாற டிப்டும் சத்தங்களுக்கு இடையில வாற நேர இடைவெளியை வைச்சு சுட்ட துப்பாக்கி எவளவு தூரத்தில இருக்குது எண்டு எப்பிடிக்கணக்குப் பாக்கிறது எண்டெல்லாம் சொல்லித்தந்தார். 400 யாருக்கு அங்கால இருந்து சூடு வருகிறதா எண்டு பார்க்கச் சொன்ன அவர் ஸ்னைப்பர் எண்டா 400 யாருக்கு அங்கால இருந்துதான் சுடுவான் எண்டு அதற்கு விளக்கமும் தந்தார். எனக்கு அதுவரை தெரியாம இருந்த கன நுணுக்கங்கள அவர் எனக்குச் சொல்லித்தந்தவர். வஸிலியின் பாடு அதோ கதிதான் எண்டு எனக்குள்ளயே நான் எண்ணிக்கொண்டன். ஆளும் வலு கெட்டிக்காரன்தான். ஒருநாள் இரண்டு ரஷய ஸ்னைப்பர்காரங்கள பட்பட்டென்று போட்டுத் தள்ளி விட்டார்.

3

நாங்க ஒருநாள் ஒரு ஜெர்மன் சிப்பாயை பிடிச்சம். நாங்க ஸ்னைப்பர் அணிக்காரர் எண்டு தெரிஞ்சஉடன அவன் எங்கட்ட ஆப்பிட்டதையும் மறந்திட்டு உங்கட வஸிலி கெதியாத் துலையப்போறார் எண்டு வாயடிக்கத் துவங்கியிட்டான். கொஞ்சம் அப்பிடியிப்பிடி எண்டு ஆளுக்கு ரெண்டு போட்டுக் கேட்டதில தங்கட ரொப்பான ஸ்னைப்பர் ஒராள் வந்திருக்கெண்டும் வஸிலியின் கதையை கெதியா அவர் முடிச்சுப்போடுவாரெண்டும் அலம்பிக்கொண்டேயிருந்தான். எப்பிடியோ தனக்குச் சரியான போட்டியாள் வந்ததில வஸிலிக்கு சரியான சந்தோசம்.. தன்ர திறமையை இனித்தான் வடிவாக் காட்டலாமெண்டுதான்....... கொஞ்ச நாள் சிக்கல் ஒண்டும் இல்லாமப் போய்ச்சுது. இருந்தாப்போல ஒரு நாள் எங்கட ஸ்னைப்பர்மார் இரண்டுபேர் பட்பட்டெண்டு போடுப்பட்டினம். அவங்கள சுட்டவன் துவக்கில பெரிய தொலைக்காட்டி இருந்த எங்கட ஸ்பொட்டர்மார் கண்ட எண்டு சொல்லிச்சினம். வஸிலிக்கு உற்சாகம் கரைபுரண்டு ஓடிச்சுது. ''குலிக்கோவ் நான் தேடுற ஆள் இவன்தான். எங்கட ஆக்கள் அவனட்டத்தான் வாங்கி கட்டியிருக்கினம்,, எண்டார். வஸிலி.

அவங்கள் இரண்டு பேரும் சுடுபட்ட இடத்துக்கு கிட்டவா எங்கட மறைவிடத்த மாத்தின நாங்க அங்கயிருந்து அவதானித்துக் கொண்டிருக்கையுக்க ஜெர்மன்காரங்களட லைன் பக்கமா இருந்த நகருற அகழியொன்றுக்க ஒரு ஜெர்மனியத் தலைக்கவசம் எம்பி எம்பி நகர்ந்து போய்க் கொண்டிருந்தது. நான் ஆவலோட வஸிலியைப் பாத்தன். அவர் வேண்டாம் என்கிற மாதிரி தலையாட்டி விட்டு எனக்குக் கிட்ட வந்து, ''அது தந்திரம் குலிக்கோவ்... அந்தக் கவசம் ஒழுங்கா நகரயில்ல பாத்தியோ... நாம அவதானமா இருக்க வேணும'' எண்டு சொல்லிவிட்டு திரும்பவும் அவதானிக்கத் தொடங்கி விட்டார். அண்டைக்கு ஒண்டும் நடக்கயில்ல.

அடுத்த நாள் காலம வெள்ளென மூண்டு மணிக்கே அந்த இடத்துக்கு வந்திட்டம். இண்டைக்கி ஏதோ நடக்கப் போகுதெண்டு மணந்து பிடித்து விட்ட எங்கட பிரிவு அரசியல் அதிகாரி தானும் அதப் பாக்கவேணுமெண்டு சொல்லி அடம்பிடித்து எங்களோட ஒட்டிக் கொண்டான். பெரிய தலையிடிதான்... என்ன செய்யிறது. இருந்தாப்போல அந்த ஆள் ''அந்தா ஒரு ஜெர்மன்காரன் நிக்கிறான்'' எண்டு சொல்லிக் கொண்டு தன்ர தலைய கொஞ்சம் மேல தூக்கினான். சடார் எண்டு ஒரு சத்தம் கேட்டுது. அரசியல்காரன் கீழ விழுந்து துடிச்சுக் கொண்டிருந்தான்... காயந்தான்... ஆள் தப்பியிற்று.

வஸிலி அவன திரும்பிப் பாக்கக்கூட இல்லை ''ஒரு செக்கன் தான் தலை காட்டினவன'' எண்டு சொல்லிக் கொண்டே தன்ர காரியத்தில கண்ணா இருந்தார். ஏனெண்டு எனக்கு நல்லாத் தெரிஞ்சுது அரசியல்காரன இழுத்தெடுக்க ஒரு மெடிக்ஸ்காரன் முயற்சி செய்து கொண்டிருந்தான். அவன்தான் அடுத்த இலக்கா இருக்கும். அவன் சுடுபட்டா சூடு எங்கயிருந்து வருகுது எண்டு கவனிக்கலாம் எண்டுதான் தொலைக்காட்டிய விட்டு கண்ண அரக்காம இருந்தார். ''ஒரு செக்கன் தல காட்டின ஆளச் சுடுகிறதெண்டால் இது அவனாத்தான" இருக்க வேணும் எண்டு சொல்லினார். "ஒரு வேல செய்வம்... என்று சொல்லிப் போட்டு ஒரு கிளவுச தடியில கொழுவி அகழிக்கு மேல கொஞ்சம் உயர்த்தச் சொன்னார்." கண்ணத் தொலைக்காட்டியிலிருந்து அசைக்கவேயில்ல. நான் கிளவுஸ் கொழுவின தடிய மெள்ளத் தூக்கினன். 'டொள' எண்டு ஒரு சத்தந்தான் கேட்டுது. தடியப்பதிச்சுப் பாக்கயிக்க நட்டநடுவில கிளீனா ஒரு ஓட்டை விழுந்திருந்தது. ஆள் விண்ணன் போல இருக்கு எண்டு என்ர மனதுக்க நினைச்சுக் கொண்டன். பிறகு கொஞ்ச நேரத்தால இருண்டு போச்சுது. நாங்க எங்கட பேசுக்குத் திரும்ப போயிற்றம்.

அடுத்த நாளும் விடியக்கு முன்னமே அந்த இடத்துக்கு வந்திட்டம் கொஞ்ச நேரத்தில சூரியனும் மெல்ல எழும்பி வந்துது. சூரிய வெளிச்சம் எங்கட முகத்தில விழுந்துது. ''பேசாமப் படுத்துக்கிட'' எண்டு வஸிலி எனக்குச் சைகை காட்டினார். நானும் பேசாமப் படுத்துக் கிடந்தன். மெல்ல எனக்குக் கிட்ட வந்த அவர் சூரியன் எங்களுக்கு பின்னால் வருமட்டும் அசைய வேண்டாம் எண்டு சொல்லிவிட்டு அவர் தன்ர இடத்தில படுத்துக் கொண்டார். சூரியன் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. அங்க பேசாமபடுத்துக் கொண்டிருக்கிறது எனக்குப் பெரிய சித்திரவதையாகத்தான் இருந்தது. ஆனா வஸிலி வழமை மாதிரி அமைதியாகவே இருந்தார்... பல மணித்தியாலங்கள் கழிஞ்சுது. சூரியன் மெல்ல மெல்ல எங்களுக்கப் பின்னால நகர்ந்து கொண்டுது. இப்ப ஜெர்மனிய படை வரிசைமீது சூரிய வெளிச்சம் விழுந்து கொண்டிருந்தது. ''இப்ப அவங்கட தொலைக்காட்டிக் கண்ணாடிகளில சூரிய வெளிச்சம் பட்டுத் தெறிக்கும் கவனிச்சுப்பார்'' எண்டு வஸிலி எனக்குச் சொன்னார்.

இருந்தாப்போல வஸிலி எனக்குச் சைகை காட்டினார். இலக்குத்தேடும் தொலைக் காட்டிய கண்ணில பொருத்திக் கொண்டன். எங்கட அவதானிப்புப் பகுதியின்ர ஒரு முனையில இருந்து இன்னொரு முனைக்கு நகர்த்திக் கொண்டே வந்தபோது அங்கே ஒரு கொதிகலனுக்குக் கீழே லேசான மினுக்கம் தெரிஞ்சுது. நான் வஸிலிய அந்த இடத்துக்கு

வழிநடத்தினன். "அல்பா 2 இல இருந்து இரண்டு மணித்திசை... 20யார்" எண்டு சொன்னன். "ஓம் அதுவாகத்தான் இருக்கவேணும்'' என்றவர் எங்களட்ட இருந்த பொய்தலையைச் சுட்டிக்காட்ட அததடியில மாட்டி உயர்த்தும்படி சைகை காட்டினார். நான் தலைய தடியில மாட்டி மெல்ல உயர்த்தினன். "டொப்" எண்டு ஒரு சத்தம் கேட்டுது. போலித் தலையின்ர பிஞ்சு சிதறின துண்டுகள் எனக்கு மேல விழுந்துது. அந்தச் செக்கனிலயே வஸிலியின்ர துவக்கும் ரவையைக் கக்கிற சத்தம் கேட்டுது. மீண்டும் தொலை நோக்கிய கண்ணில பொருத்திக் கொண்டு பாத்தன் எதிரிகள் பக்கத்தில ஒரே பதட்டமாத் தெரிஞ்சுது. சூடு முக்கியமான ஆருக்கோதான் பட்டிருக்க வேணுமெண்டு எனக்குத் தெரிஞ்சுது.

கொணிங் சுட்ட அதே நேரம் ரஷ்யர்களட பக்கமிருந்தும் ஒரு சூடு கேட்டுது. கொணிங் இருந்த பக்கமா ஏதோ கீழே விழுகிறமாதிரி சத்தம் கேட்டுது. என்றாலும் நான் எதிரிகள் பக்கத்த தொடர்ந்து அவதானிச்சுக் கொண்டே இருந்தன். சிறிது நேரம் அப்பிடியே இருந்து போட்டு கொணிங் இருந்த பக்கம் எட்டிப் பாத்தன். ஐயோ!..... மேஜர் கொணிங் நிலத்தில பிணமாகக் கிடந்தார். அவரட நடு நெற்றியில குண்டொன்று துளச்சுக்கொண்டு போயிருந்தது. அந்தக் காயத்தில இருந்து வழிஞ்ச இரத்தம் தோளால வழிஞ்சு அந்த கழுகுச் சின்னத்துக்கு மேலாக ஊறிப்போய்க் கிடந்தது. என்ர நெஞ்சுக்க ஆரோ பெரிய கல்லொண்ட ஏத்திவிட்ட மாதிரி பாரமா இருந்துது. கண்ணில நிரம்பின கண்ணீரத் தடுக்க முடியல்ல... அவற்ர இழப்ப கட்டளை மையத்துக்கு அறிவிக்க எழும்பி நடந்தன்... கால்கள் தள்ளாடிக் கொண்டிருந்தன......

வழக்கம் போலவே நாங்க இன்னொரு நிலைக்கு இடம் மாறி அங்கயிருந்து அவதானிப்ப தொடர்ந்து செய்தம். கொஞ்ச நேரத்தில எங்கட ஒட்டுக்கேக்கிற நிலயத்தில வேல செய்யிற இவானோவ் பரபரப்போட எங்கள நோக்கி ஓடிவந்தான். எங்களுக்கு கிட்ட வந்து சேரயிக்க அவனால கதைக்க முடியேல்ல மூச்சிழைத்துக் கொண்டிருந்தது. அதுக்கு நடுவிலயும் அவன் சந்தோசமாக ஏதோ சொல்ல முயன்றான். ''கொணிங்... கொணிங்...'' என்று ஏதோ தடுமாறியவன் தன்னக் கொஞ்சம் நோமலுக்கு கொண்டு வந்து "சாஜன்ட் வஸிலி... நீங்கள் சுட்டது மேஜர் கொணிங் தானாம்...'' என்று சொல்லிப் போட்டு சந்தோசமாக ஒரு சலூட்டும் அடிச்சான். எங்கட மனம் நிறைஞ்சிருந்துது. கனகாலமா நாங்க ஒதுக்கி தள்ளியிருந்த ஓய்வை எடுக்கிறதுக்கெண்டு எங்கட மொஸின் - நாகண்ற் துப்பாக்கியையும் மற்றப் பொருட்களயும் தூக்கிக்கொண்டு எழுந்து நடந்தம். உருக்குலைந்து போய் கிடந்த அந்தப் பெரிய நகரத்தின் சிதைவுகளும் எங்களுக்கு வாழ்த்துச் சொல்வது போல் தோன்றிச்சுது.

▲

## இரு குறுங்கதைகள்



## அத்துமீறல்

அந்த மாடுகள் வேலியைப் பிய்த்துப் போட்டு உள்ளே வந்து பயிர்களை மேய்ந்து விட்டுப் போவதும் சிலவேளை அங்கேயே தங்கிவிடுவதுமாக இருந்தன.

இதைக்கண்ட தோட்டக் காரனுக்கு வயிறு பற்றி எரிந்தது. அவனது எரிச்சலில் நியாயம் இருந்தது.

அவன் சிந்திய ஒவ்வொரு துளி வியர்வையும் வீணாவது கண்டு; மாடுகளின் சொந்தக் காரனிடம் முறையிட்டும், பயன் ஏதும் கிடைக்கவில்லை.

அவன் பொறுமையை இழந்துவிட்டான்.

பலதடைவைகள் மாடுகளை கற்களால் எறிந்து கலைக்க முயன்றான்: பொல்லுகளால் தாக்கினான். அவை கலைந்துபோகவில்லை. அவன் ஒரு முடிவிற்கு வந்தான்.

மாடுகள் உள்நுழையும் வழிகளைக் குறிவைத்து, ஆழமான அகழிகளை அமைத்து, உருமறைப்புச் செய்தான். வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தான்.

மாடுகள் வந்தன, அகழிகளில் மாட்டிக்கொண்டன. மேலே செல்ல முடியாமல் தடுமாறின.

அலறின அசந்துபோயின.

சில நாட்கள்அகழியிலேயே கிடந்து தவித்தன. மாடுகளைத் தேடிச் சொந்தக்காரன் வந்தான். இருவருக்குமிடையில் ஒரு உடன்படிக்கை எழுதப்பட்டது.

" இனி மாடுகள் எல்லைதாண்டி வராதாம்

மாடுகள் மீட்கப்பட்டன.

தோட்டக்காரன் நிம்மதி மூச்சுவிட்டான்.

ஆனாலும் அவனுக்கு உடன்படிக்கையில் சந்தேகம்தான் மிஞ்சியிருந்தது. ●

## உரிமைக்காரர்

முருகுபாரிமகன்



நிலத்தில் பல பண்ணைகளையும், தொழிற் சாலைகளையும் அமைத்துக் கொண்டான் ஒருவன்.

கடலில் பல கப்பல்களையும் கட்டிவைத்திருந்தான் இன் னொருவன்.

ஒரு நாள் கப்பல்காரன் கப்பலில் இருந்து இறங்கிவந்து நிலத்தில் உலாவினான்.

கடற்கரை மணலும் காற்றும் அவனுக்கு இதமாக இருந்தன. சற்றுநேரம் காலாற மணலில் உட்கார்ந்திருந்தான்.

எரிச்சலடைந்த பண்ணைக் காரன் அவனை நோக்கி வந்தான்.

" நீ ஏன் இங்கு வந்தாய்?"

கப்பலுக்குச் சொந்தக்காரன் பலமாகச் சிரித்தான்.

" ஏன்? நிலத்தில் எனக்கும் உரிமை உண்டுதானே? என்று கேட்டான்.

"அது எப்படி வரும் அதோ பார். எனது பண்ணைகள் வானைத்தொடும் தொழிற் சாலைகள், கட்டடங்கள் இவற்றுடன் இந்தக் கடலும் எனது உரிமைச் சொத்துக்கள். என் நிலத்தில்தானே இத்தனையும் இருக்கின்றன''என்றான்.

"அதோபார்! கடலில் நிற்கும் கப்பல்களை: அதெல்லாம் எனக்கு உரிமையானவை. என்றான் கப்பல் உரிமைக்காரன்.

கடலில் எனது அனுமதியில்லாமல் கப்பல்களை நிறுத்த உனக்கு அனுமதித்தது யார்?

தகராறு முற்றி கைகலப்பு வரும் போலத் தென்பட்டது.

நீரும் நிலமும் காற்றும் எல்லாருக்கும் சொந்தமானது.

உழைப்பவனுக்கே எல்லாம் சொந்தம்.

இருவரும் குரல்வந்த திக்கை நோக்கினர்.

கப்பலிலும், பண்ணையிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்வோர் அனைத்துப் பக்கங்களிலும் திரண்டு நின்றனர்.அவர்கள் சத்தம் போட்டுச் சொன்னார்கள்.

உழைப்பவனை உறிஞ்சி உயர்ந்தவர்கள் நீங்கள். எங்களுக்கே உலகம் உரிமை யானது. அவர்களின் கரங்கள் ஓங்கி உயர்ந்தன. இருவரும் ஒருவரை, ஒருவர் பார்த்து விழித்தனர். ◆

## "புரிந்துணர்வு இல்லையேல்"



-ஓவியம் பயஸ்

மானிடர்களின் மனங்கள்
மதங்களின் காலடியில்,
மண்டியிட்டுக் கிடக்கின்றது.
சுவாசத்தின் அகோரம்
அதுபடும் அவஸ்தைகள்,
''சோகம்''
சாதிவெறி அகவர்களின்
விழிகளை சாத்தி விட்டது.
குருடாய்ப் போனது
அவர்களின்
கண்கள் மட்டுமல்ல.
கருத்துக்களும் தான்.
வேதங்களின் சேதங்களினால்,
வரண்டு போனது இப்பிரஞ்சம்.
சிநேகிதங்கள் உலவ வேண்டிய
நெஞ்சங்களில் ஏனோ...?
இத்தனை வஞ்சம்.
தேனாய் வழிந்தென்ன,
மழையாய் பொழிந்தென்ன,
இதயத்தில் பேதம் இருக்கும் வரையில்.....
''சோலைவனமாய்''
பூத்துக் குலுங்க வேண்டிய
''நம் தேசம்''
என்றென்றும் பாலைவனம் தான்.

● புலோப்பளையூர்
பே.பாஸ்கரன்

## "மரத்தின் மகிழ்ச்சி"

வாள் கொண்டு
என் மேனியை
மானிடர் அறுத்திடும்போதில்
வருத்தத்தால் துடிதுடித்தேன்.

எத்தனை சோகம் என்னுள்
மரமாய் பிறப்பது
மகாபாவம் என
மனதுள் எண்ணிக்கொண்டேன்.
அழுதேன்.
அந்தக் கண்ணீரை
யார்தான் அறிந்தார்கள்.

இப்போது எத்தனை மாற்றங்கள்
மரமாய் பிறந்ததற்கு
மகாதவம் செய்து விட்டேனோ.
மாவீரன் அவனுக்கு
பேழை உருவாக்கும்போது
எந்தனுக்குத்தானே
இப்போது முதலிடம்.
அவனைத் தாங்கிடும்
அந்தப் பாக்கியம்
எந்தனுக்கு கிடைத்தது.
மரமாய் பிறந்தது
மகிழ்ச்சிக்குரியதென
இப்போது எனக்குள்
எண்ணிக் கொள்கிறேன்.

-யோ.புரட்சி-



சந்திப்பின் இன்பத்தில், வேதனை கலவாமல் இல்லை. ● -ஹென்றி லாங்ஃபெல்லோ

கி.செ.துரை - டென்மார்க்

# புதிய விமர்சனத்தின் தேவை பற்றி...

ஈழத்தமிழினத்தின் குடித்தொகையில் மிகப்பெரிய வெடிப்பை உண்டு பண்ணியது 1983ஆம் ஆண்டாகும். அப்போது உண்டான யூலைக் கலவரங்களானது குடித்தொகையில் மட்டுமல்ல தமிழர் வாழ்வின் சகல படிமானங்களிலுமே வெடிப்பை ஏற்படுத்தி விட்ட நிகழ்வாகும். இந்த வெடிப்பினால் இலக்கிய வானில் தோன்றிய புதிய நட்சத்திரம் அல்லது எரிகோள் புலம்பெயர் இலக்கியமெனலாம். புலம்பெயர் இலக்கியத்தின் பௌதீக உட்கூறுகளை அவதானிப்போர் அது ஈழத்தமிழ் இலக்கியத்தின் தொடர்ச்சியே என்று வாதிடுவர். உலகம் முழுவதும் ஒன்பது கோடி தமிழரிருந்தும் மேலைத்தேய அரங்கில் தமிழரென்றால் அவர்கள் ஈழத்தில் வாழும் மக்களா என்றே கேட்கிறார்களென, தமிழகப் படைப்பாளிகளே ஆதங்கப் படுமளவிற்கு ஓர் குறுகிய காலத்தில் பெரும் அதிர்வை உண்டு பண்ணிய மக்கள் குழுவினரே புலம்பெயர் ஈழத்தமிழ் மக்களாகும். 1983 வரை தமிழரும் தமிழ் இலக்கிய உலகும் சர்வதேச மயப்படுத்தத் தவறிய ஒன்றை நிகழ்த்திய மக்களென அவர் தனியாக நோக்கப்படுவதானது அவர்களின் படைப்புக்களும் தனியாகவே நோக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும்.

தமிழ் இலக்கிய வரலாற்றைக் கற்றுக்கொள்வோர் அதில் எந்த நவீனத்துவமான மாற்றத்தை வாசிக்கத் தொடங்கினாலும், ''மேலைத் தேயத்தவரின் வருகையால் தமிழில் ஏற்பட்ட மாற்றங்கள்'' என்ற வசனப் பிரயோகத்தை 16ஆம் நூற்றாண்டிலிருந்து 20ஆம் நூற்றாண்டு வரை மிக அதிகமான இடங்களில் வாசிக்க வேண்டியது தவிர்க்க முடியாத உண்மையாகும். அத்தகைய மேலைத்தேயத் தாக்கங்களை ஏந்திக் கொள்ளும் ஒன்றாகவன்றி, தம் வாழ்வையும் வரலாற்றையும் அத்தோடு மேலைத்தேய நிகழ்வுகளையும் அதே மேலைத்தேயத்திலேயே நின்று பார்ப்பன புலம்பெயர் படைப்புக்கள். அரசியலுக்காகவும், இலக்கியத்திற்காகவும் மேலைத்தேயங்களில் பெறப்பட்ட குறுங்காலப் பயிற்சிகள் நெறிப்படுத்தி வைத்திருக்கும் இலக்கிய அளவு கோல்களை அவ் அளவு கோல்கள் தயாரான பட்டறைகளிலேயே நின்று, அவற்றையும், அவற்றின் மூலம் வடிவமைக்கப்பட்ட தமது மொழிக்குரிய படைப்புக்களையும் சீர்தூக்கும்பான்மை கொண்டவையாக உள்ளன புலம்பெயர் இலக்கியங்கள். இதுவரை இல்லாத சிருஷ்டிச் சூழலில் நிற்கும் புலம்பெயர் இலக்கியம் தனித்தன்மை யானதுதான் என்று வரையறை செய்யும் போது, அதற்குரிய விமர்சனத்தை மட்டும் தனியானதல்ல என்று வாதிட்டு, ஈழத்தின் விமர்சன வரலாற்றை இங்கும் நீட்சிமைப்படுத்துவது பொருத்தமானதா?

## புலம்பெயர்ந்தோரின் முதற்கட்ட விமர்சனம்

புலம்பெயர்ந்த முதலாவது தலைமுறையினரிடையே பாவனைப்படுத்தப்பட்ட விமர்சன மனோவியல் இரண்டாவது தலைமுறை எழுத்தாளரிடையேயும் பாவனைப்படுத்த ஏற்றதென வாதிடுவது சிரமமானது. முதலாவது தலைமுறையினரிடையே நிலவிய விமர்சனமானது ஏற்கெனவே ஈழத்தின் விமர்சனப் பரப்பில் நிகழ்ந்து விட்ட சமூக, பண்பாட்டு, இலக்கிய ரீதியான கருத்து மோதல்களும் அவற்றின் எதிர்வினைகளுமாகவே இருந்தன. இதன் தாக்கங்கள் ஆரம்பத்தில் புற்றீசல்கள்போல வெளியான சிறு சஞ்சிகைகளிலெல்லாம் முகிழ்த்திருந்தன. புலம்பெயர் இலக்கியத்தின் உடலிலிருந்து வெளிப்பட்டிருந்த இவ்வித வெப்பக் கொப்புளங்களை அதன் இரண்டாவது தசாப்தத்திற்குள்ளும் கொண்டு நகர முடியாமல் போனமையை சிற்றிதழ்களின் எண்ணிக்கையிலேற்பட்ட சரிவிலிருந்தும் இனம் காண முடியும். எனவே புலம்பெயர் இலக்கியத்தின் தேவையையும் அதன் காத்திரத் தன்மையையும் விளக்க முற்படுவோர் தமிழிலக்கியத் திறனாய்வின் செல்நெறிபோல புலம்பெயர் இலக்கியத்திற்கும் பொதுவான செல்நெறி கண்டு விமர்சிக்க முற்படுவது பொருத்தப்பாடுடையதா என்பது ஆய்விற்குரியது. ஏனெனில் ஒவ்வொரு நாட்டிலும் அரசியல், பொருளியல், சமூகவாழ்வு, அனுபவச்சூழல் யாவுமே ஒன்றுக்கொன்று முற்றிலும் வித்தியாசமாகத் தென்படுகின்றன. இந்நிலையில் பெயர் சுட்டி ஏற்றுவது, அதேபோல நிந்திப்பது, அல்லது கண்டு கொள்ளாமல் நிராகரிப்பது ஆகிய மூன்று படிகளை மட்டுமே கண்டுகொண்டோமென்றளவில் நின்று பழைய விமர்சனப் பலகையை ஏதாவது ஒரு புலம்பெயர் நாட்டிலிருந்தபடியே சகல புலம்பெயர் நாட்டு ஆக்கங்களுக்கும் பொதுவான அளவுகோலாகக் காண்பது பொருத்தமானதுதானா • என்பது முக்கிய கேள்வியாகும்.

## தமிழிலக்கியத் திறனாய்வின் சில பொதுத்தன்மைகள்

தமிழிலக்கியத்தின் திறனாய்வுப் போக்கை பருமட்டாக சில பிரிவுகளாகப் பிரித்துப் பார்ப்பார் க.கைலாசபதி. இவர் பார்வையில் சங்ககால இலக்கியத்தில் அவயவிக் கொள்கைக்காலம் அல்லது உறுப்பாக்கவியற் காலமெனப்பட்டது. முழுமையான உடம்பிற்கு என்னனென்ன உறுப்புக்கள் அவசியமோ அதுபோல படைப்பிற்கும் அவசியமான உடல் உறுப்புக்களாக முதல், கரு, உரி,யாப்பு, எதுகை போன்ற பல்வகைக்கூறுகள் அவசியமென வலியுறுத்தப்பட்டது. சங்க மருவிய காலத்தில் இலக்கியத்தின் தகுதி, நீதியைப் போதிப்பதாகக் கருதப்பட்டது. அடுத்து வந்த மூன்று நூற்றாண்டுகளில் உணர்ச்சிக் கொள்கையாக பக்தி இலக்கியங்கள் தோன்றுகின்றன. சோழர் காலத்தில் அழகியல் கொள்கையைக் கைக் கொண்டனர். அடுத்து கவி வரட்சிக்குப் பின் சமூகவியற்காலம், இருபதாம் நூற்றாண்டென வரிசைப் படுத்துவார்.

இருந்தபோதும் இப்போது கைக்குக்கிடைக்கும் பழைய நூல்களும், அவற்றினூடாக வரையறை செய்யப்பட்ட மேற்கண்ட தமிழ் இலக்கிய திறனாய்வுப் பார்வையும் உண்மையாகவே தமிழ்ச் சமூகத்தின் நேர்மையான படைப்பியல் பிரதிபலிப்புக்களா என்பதற்குச் சில கேள்விகள் உள்ளன. "எல்லாச் சங்க நூல்களுமே • அதிகாரத்திலிருந்தவர்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சி மூலம் பிரக்ஞைபூர்வமாக பேணிக்கொள்ளப்பட்டவையே. தமிழ் இலக்கியத்தின் வரலாற்றையும், இலக்கிய வரலாற்றையும் எழுத முயலும் போது தமிழில் கிடைக்கக்கூடிய எழுத்துக்கள் எல்லாவற்றையும் ஒருங்கு திரட்டிக்கொண்டு விட்டோமா?" என்பது பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கேள்வியாக உள்ளது. ஏற்கனவே ஒரு திட்டமிட்ட வரையறையைச் செய்துகொண்டதால் பொது மக்களுக்குரிய இலக்கியங்கள் பல தமிழிலக்கிய வரலாற்று வரிசையில் இடம்பெறாது போயிருக்கின்றன என்னும் வாதம் இதுவரை முடியவில்லை. இதிலிருந்து தமிழ்த்திறனாய்வின் செல்நெறி தன்மீதும் ஒரு விமர்சனத்தை எதிர்நோக்கியிருக்கிறதைக் காணலாம். 14ஆம் நூற்றாண்டிலிருந்து 16ஆம் நூற்றாண்டு வரை ஈழத்தமிழ் இலக்கியம் தமிழக இலக்கியங்களின் போக்கையே சார்ந்து நிற்கிறது. இக்காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட பிரபந்தங்களின் தாக்கம் ஈழத்து இலக்கியங்களில் அப்படியே விளங்குகிறது. சோதிட, வைத்திய நூல்கள் மட்டுமே வேறுபட்டு நிற்கின்றன என்று கூறி ஈழத்து இலக்கிய வரலாற்றையும் தமிழகத்துடன் இணைவுபடுத்துவார் கலாநிதி நடராஜா.

> எவ்வளவு வேகமாக பெயர் சுட்டி ஓர் விமர்சகர் தனது அணியைத் தூக்கி நியாயப்படுத்துகிறாரோ அதுபோல தூற்றலும் தோன்றும் என்பதை அன்றுமுதல் இன்றுவரை இலக்கியத்திலும் அவதானிக்க முடிகிறது.

## ஈழத்தில் மார்க்சிய விமர்சனத்தின் தோற்றம்

ஈழத்து இலக்கிய விமரிசனப் போக்கில் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோருடைய பெயர்கள் பிரபலமாகப் பேசப்படும் போக்கு இன்றுவரை வழக்கொழிந்துவிடவில்லை. "1954இல் கம்யூனிச இயக்கம் ஒரு புதிய எழுத்தாளர் பரம்பரையை அறிமுகம்செய்து வைக்கின்ற முயற்சியில் ஈடுபட்டபோது ,அந்த எழுத்தாளர்களுக்கு நாங்கள் விமர்சகர்களாக இருந்தோம். எங்களுக்கு அந்தக் காலகட்டத்தில் இருந்த தேவை என்னவென்றால் எங்களுடைய குழாத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் அங்கீகரிக்கப்படாத நிலையில் அந்த அங்கீகாரத்தைப் பெற்றுத்தருவது ஒன்றே எங்கள் கடமையாக இருந்தது'' (ஆதாரம்:கா.சிவத்தம்பி,சுபமங்களா நேர்காணல்,மே 1994)

"முற்போக்கு இலக்கியம் உள்ளடக்கத்திற்கு அழுத்தம் கொடுத்தளவிற்கு வடிவங்களிலோ அதனுடைய வெளிப்பாடுகளிலோ அதிக கவனம் செலுத்தாது போனபடியால் ஒருவகை வரட்டுத்தனமான போக்கு பிற்காலத்தில் காணப்பட ஆரம்பித்துவிட்டது." (ஆதாரம் சி.மௌனகுரு சுபமங்களா நேர்காணல்,ஜுன் 1994)

மார்க்சிய விமர்சனகாரரின் எழுச்சிக்காலமென முற்போக்கு இலக்கியவாதிகள் காலத்தைக் குறிப்பிடலாம். இதில் பெரும் எண்ணிக்கையில் படைப்பாளிகளையும் விமர்சகர்களையும் காணமுடிந்தது. எனினும் இதன் ஆரம்ப கர்த்தாக்களில்ஒருவரான ஏ.ஜே.கனகரட்னாவின் வெளியேற்றம்,பின் எஸ்.பொ.வின் வெளியேற்றம் போன்றவற்றுடன் இதன் சிதைவு ஆரம்பிக்கிறது என்று கூறப்பட்டாலும் தமிழரசுக் கட்சிமீது கொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக ஈழத்து மார்க்சிஸ்டுகள் தமிழ் தேசியத்தை நிராகரித்தமையே இலக்கிய ஆடுகளத்தில் அவர்களை வேகமாக ஆட்டமிழக்கச் செய்ததென்பதை இப்பொழுது அநேகர் ஒப்புக்கொள்கிறார்கள். "கைலாசபதியின் வருகையோடு ஏற்பட்ட அரசியல் விழிப்பு, உணர்ச்சிவசம் நிறைந்த அரசியல் கதைகளுக்குத் தடை போட்டது. ஆனால் அதே தடையே அரசியல் விழிப்பை பிரதிபலிக்கும் தரமான கதைகளுக்கும் இடமில்லாமல் ஆக்கிவிட்டதென்று'' கூறுவார். மு.தளையசிங்கம் (ஆதாரம் மு.தளைய சிங்கத்தின் 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி') மேற்கண்ட நூலிலிருந்து மேலும் பல தகவல்களைத் திரட்ட முடிகிறது. ''முற்போக்கு அணிக்கு தலைமைதாங்கிய கைலாசபதி, சிவத்தம்பி போன்றோர் சிருஷ்டி இலக்கியம் எழுதத் தெரியாத விமர்சகர்தாம். அப்படிப்பட்டவர்கள் தலைமை தாங்கும் போது ஒரு மலட்டு நிலை ஏற்படுமேயொழிய சிருஷ்டித்தரம் நிறைந்த வேகம் பிறக்காது" என்று கூறும் தளையசிங்கத்தின் கருத்து மௌனகுருவின் சுபமங்களாப் பேட்டியோடு ஒன்றுபடக் காணலாம்.

## பெயர் சுட்டித் தூற்றும் விமர்சனம்

எவ்வளவு வேகமாக பெயர் சுட்டி ஒரு விமர்சகர் தனது அணியைத் தூக்கி நியாயப்படுத்துகிறாரோ அதுபோல தூற்றலும் தோன்றும் என்பதை அன்றுமுதல் இன்றுவரை இலக்கியத்திலும் அவதானிக்க முடிகிறது. இதற்கும் தளையசிங்கத்திடமிருந்தே உதாரணத்தைக் கொடுக்கலாம். ''முற்போக்கிற்கு எதிராக நற்போக்கு என்ற சொல்லை எஸ்.பொ.ஓசை நயம் காரணமாகவே தேர்ந்தெடுத்ததாகத் தெரிகிறது. நற்போக்கு என்ற அடிப்படையில் பார்த்தால் முதலாவதாக ஒதுக்கப்பட வேண்டிய கதைகள் எஸ்.பொ.வின் தீ,பட்சம் போன்ற வையாகத்தானிருக்கும். ''டொமினிக் ஜீவா,டானியல் போன்ற சில முற்போக்கு இலக்கியவாதிகளுக்காக ஆரம்பத்தில் கதைகளை எழுதியவர் பொன்னுத்துரையே என்றும் அகத்தியருடைய உணர்வூற்றுச் சித்திரம் பொன்னுத்துரையினுடையது தானாம்''. (ஆதாரம்: ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி)

மேற்கண்டவாறான தூற்றுதலுக்குள் பிரவேசிகக்குமளவிற்கு விமர்சனம் கடூரம் பெற்றிருந்ததை இன்றைய நிலையில் அவதானிக்கும் எவரும் அதை மகிழ்ச்சிக்குரியதாக காணமுடியாது. மேற்கண்ட உதாரணங்களைக் கூறி அந்த எழுத்தாளர்களின் சேவையை ஓரங்கட்டுவது இங்கு சரியான பணியல்ல. எனினும் "தனிமனித குரோதம் சித்தாந்த உருவாக்கத்திற்குக் காரணமாக அமைகிறதென்ற லெனின் வாதத்திற்கு பதம் பிடித்தது போல ஈழத்தின் மார்க்சிய விமர்சனம் பிழைகளைத் தேடி வேகமாக நகர்ந்திருப்பதை அறிந்துகொள்ள மட்டும் இவ்வுதாரணங்களைப் பயன்படுத்துவது நலம்.

## பெயர்சுட்டி நிறுத்தும் விமர்சனங்கள்

தளையசிங்கத்தின் கடுமையான தனிமனித விமர்சனத்திற்கு அன்று நிலவிய தனிமனிதர்களை தூக்கி உயர்த்தும் நிலையும் ஒரு காரணமென எண்ணமுடிகிறது. இதற்கும் இரு உதாரணங்களை நோக்கலாம். ''மக்சிம் கோர்க்கியைப் போல வாழ்க்கையில் அடிபட்ட ஓர் எழுத்தாளர் என்று விபரிப்பது கீரனைப்பற்றி தவறான எண்ணத்தை உண்டாக்காது என்றே கருதுகிறேன்" (இளம்கீரன் பற்றி கைலாசபதி, மல்லிகை நவம்பர் 1973)

"தமிழ்ப்புனைகதை வரலாற்றின் நிலைநின்று கூறினால் ராஜநாராஜணனின் கதைகள் கோலமானது. புதுமைப்பித்தன், கு.ப.ரா,லா.ச.ரா ஆகியோரின் கதைகள் மரபுகளுடன் இணைந்த பொழுது தமிழுக்கு புதிய கதைகள் முறைமைகள் மேல் கிளம்பின. இம்மாற்றம் முற்றிலும் தமிழ்நாடு நிலைப்பட்டதல்ல. இலங்கையிலும் காணப்படுகிறது என்பதைச் சுட்டி நிற்பவர் எண்பதுகளில் தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகமான இருவர். ஒருவர் உமா.வரதரமணன் மற்றவர் ரஞ்சகுமார். (ஆதாரம்:ரஞ்சகுமார் சிறுகதைகள் பின்னுரையில் கா.சிவத்தம்பி)

அதேவேளை 1983,1987 வடமராட்சித் தாக்குதல், பின் சூரியக்கதிர் ஆகிய நடவடிக் கைக்காலப்பகுகளில் ஈழத் தமிழினம் வரலாற்றில் சந்தித்திராத பெரும் தாக்கங்களை அமைந்தது. இந்த நிஜங்களைக் கருப்பொருளாக்கி தமிழீழ படைப்பாளிகளின் எண்ணற்ற படைப்புக்கள் வெளியாகியுள்ளன. இப்படைப்புக்களுக்குக் காத்திரமான விமர்சனங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டிய பணி மேலும் சிறப்பாக்கப் பட்டிருக்க வேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. இவைகளைச் சீர்தூக்குவதன் மூலம் போற்றுதல், தூற்றுதல், தவிர்த்தல் போன்ற முப்படி நிலை கொண்ட விமர்சன அளவு கோலைத் தெளிவாக அடையாளம் காணலாம். எனினும் எழுதப்பட்டுவிட்ட வரலாற்றைக் குறைகூறும் காரியத்திற்காகவே எப்போதும் பயன்படுத்தல், அறிவுடமை அல்ல, கலை இலக்கியம் தனது அடுத்தகட்ட வளர்ச்சிக்கு அதிலிருந்து கற்றுக் கொள்வதும்: தன்னை மேலும் செம்மைப் படுத்திக் கொள்வதுமே அவசியமானதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நன்றி. யுகம் மாறும்

மீண்டும் ஓர் இடப்பெயர்வு



# நகரங்களை நோக்கி நகரும் மக்கள் வெறிச்சோடிப் போகும் கிராமங்கள்

மக்களின் மனதில் புதிய தெம்பு. ஊரை இழந்து உறவை இழந்து சொத்து இழந்து என்று இழந்தவற்றின் விபரத்தையே நீளமான பட்டியலாக வைத்திருந்து இனி இதுதான் கதி மீட்சிக்கு விமோசன மேயில்லை என்று நொந்துபோன மக்களின் மனதிலும் ஒரு வகையான திருப்தி இருந்தது.

வரலாறு காணாத வெற்றிகள் பலவற்றிற்குப் பின்தளத்தில் நின்று ஆக்கபூர்வமான பங்களிப்பினை மனந்திறந்து ஆற்றியதன் வெளிப்பாடுகள் தான் அது.

நாடு எனக்கு செய்தது என்பதற்கு அப்பால் நாட்டுக்கு நான் ஆற்றியதன் வகையிலான மனப்திருப்தி என்றும் சொல்லலாம். புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்பிருந்த வன்னி மக்களின் எண்ணங்களின் பிரதிபலிப்பு இவ்வாறுதான் அமைந்திருந்தது.

யுத்த நிறுத்தம் உடன்படிக்கை பாதை திறப்பு என அதன்பின்பு ஏற்பட்டுள்ள சமூக மாறுதல்கள் மக்களின்சிந்தனை வீச்சை சற்றுவேகமாக்கியது.

பல்வேறு இடப்பெயர் வின்போது அவ்வப்போது அடைக்கலம் தந்த காணியின் ஒதுக்குபுறமான தற்காலிக காட்டுத்தடிகளால் அமைக்கப்பட்டஅந்த கொட்டில் வீடுகள் சிறிது சிறிதாக நகரங்களை நோக்கி நகரத் தொடங்குகின்றன. இது சமாதான உடன்படிக்கைக்கு பின்னான வெளிப்பாடுகள்.

ஐந்து வருடங்களாக வாழ்வுக்கு புகலிடம் அளித்து அடைக்கலம் தந்த அந்த சூழலுக்கு நன்றி சொல்லி மக்கள் புதுயுகம் ஒன்றினை நோக்கி நகர ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறான நகர்வுகள் ஒரு சமூகத் தேவையின் அழுத்தத்தினால் இடம் பெறுகின்றதே தவிர நகர்விற்கான குடிசார் பொருண்மிய விழுக்காடு என்பது இம்மக்களிடையே பூச்சியமாக வேயுள்ளது.

காலம் ஏற்படுத்தியிருக்கின்ற மாற்றம் மக்களை மீண்டும் சொந்த இடங்களை நோக்கி இடம் பெயரச் செய்துள்ளது. கடுமையான போரியல் சூழல் ஒன்றுக்குள் எவ்வித ஆடம்பர அபிவிருத்தியையோ அல்லது நவீன அறிவியல் துறைசார் நடைமுறையையோ தன்னுள் ஈடுபடுத்திக் கொள்ள முடியாத இதற்கு வாய்ப்பில்லாத மக்கள் புதிய கலாச்சாரத்தோடும் புதுவகையான பொருளாதார பண்புகளோடும் கூடிய தமது பழைய நகர்ப்புறங்களுக்குச் செல்கையில் வேறுபட்ட நகர சூழலொன்றுக்குள் தங்களையும் திணித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நகரச்சூழலுக் கேற்றவாறு தங்களைத்திணிக்க முற்படுகின்றபோது நகர்ச் சூழலின் சமஅந்தஸ்துடன் தாங்களும் முகம்கொடுக்க முடியாது திணறுவதுதான் இன்று நாளாந்தம் காண்பதும் கேட்பது மான விடயங்களாக உள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக் கைக்கு பின்பு ஏற்பட்டுள்ள சொந்த இடங்களுக்கான இடப்பெயர்வில் சுமார் ஒரு லட்சம் மக்கள் திரும்பியுள்ளதாக பன்னாட்டு தொண்டர் நிறுவனம் ஒன்றின் புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

வன்னியின் சத்ஜெய நடவடிக்கைக்கு பின்பு நகரங்களாகவே மாறியிருந்த மல்லாவி, கீந்தபுரம், புதுக்குடியிருப்பு, ஜெயபுரம், நாச்சிக்குடா போன்ற இடங்கள் மக்களின்சொந்த இடங்களுக்கான இடப்பெயர்வின் பின்பு மீண்டும் கிராமங்களாக காட்சியளிக்கத்தொடங்கியுள்ளன.

சத்ஜயவுக்குமுன்பு கிராமகலாச்சாரத்தோடு ஒன்றித்திருந்த மக்கள் சத்ஜய இடப்பெயர்வின் பின்னான ஐந்துவருடங்கள் சாதாரண நகர்ப்புற வாழ்க்கையில் தங்களை இணைத்துக்கொண்ட வாழ்வியலுக் குப் பின் மீண்டும் கிராமங்களாக மாறும் தமது சொந்த இடங்களில் இருப்புக்கொள்ளாது அவர்களில் சிலரும் நகர்ப்புறங்களைநோக்கி நகருவதும் இயல்பாகிவிட்டது.

பல்வேறு இடப்பெயர்வுகளின் பின் ஏற்பட்ட புதிய உறவுக்குள் கலப்பு திருமணங்களுக் கூடாக ஏற்பட்ட உறவுகள் கூட இவ்வாறான நகர்ப்புறங்களை நோக்கிய நகர்விற்கு ஒரு தூண்டுதலாக அமைந்தள்ளது.

**எஸ்.வி.ஆர். கஜன்**

இவ்வாறான நகர்வுகள் ஒன்றும் வியப்புக்குரியவையல்ல. இருப்பினும் இவ்வாறு நகரும் மக்கள் ஏற்கனவே நகர்ப்புற வாழ்க்கையில் இணைந்து ஒன்றித்திருக்கும் இவ்வேளையில் தமது உறவினர்கள் தமது நண்பர்களின் நிலைகளுக்கேற்ப தங்களையும் அதற்கு ஈடாக்கிக் கொள்வதில் உருவாகியிருக் கின்ற உள்ளார்ந்த உளவியல் வெளிப்பாடுகள் என்பது மக்களின் பொருண்மிய பின்னடைவை பறைசாற்றுகின்றது.

நகர்ப்புற உறவுகளின் மனப்பதிவுகளில் ஏற்படுகின்ற மாறுதல்கள் தான் வன்னியிலிருந்த மக்களுக்கு அடுத்தகட்ட நகர்வொன்றை நோக்கிய சிந்தனை வெகுவிரைவாக தூண்டப்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

ஏ-9 சாலையின் முதலாம் கட்டமாக ஓமாந்தையூடான போக்குவரத்து திறந்து விடப்பட்டவுடன் ஏற்கனவே இடம்பெயர்ந்து வவுனியா நகர்ப்புறங்களில் தங்களை நிலைப்படுத்திக் கொண்ட மக்கள் தங்களின் தற்போதைய கலாச்சாரத்துடன் வருகைதர தொடங்கியவுடன் வன்னியிலுள்ள தங்களது உறவுகளுக்கு ஒருவகை வியப்பு வெளிப்படத் தொடங்கியது.

ஆனால் தத்துவார்த்தமான நோக்கில் எம்மக்களிடையே வன்னியின் அலையெழுந்த வெற்றிகளின் பின்னால் எல்லைகாத்த பெருமையின் உத்வேகத்தை வன்னிக்குள் வந்த மக்கள் பிரமிப்புடன் நோக்கியதானது அதைவிட பன்மடங்கு வியப்பை ஏற்படுத்தியிருந்தமைதான் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு வன்னிக்குள் வந்தவர்களில் ஒருவரான 55வயதுடைய சிவஞானம் வன்னியின் தனது உறவுகளை சுகம் கேட்டு உளப்பூர்வமாக விசாரிப்புகள் செய்கையில்தான் அவரின் தங்கையின் மகன் தனது நேசிப்புக்குரியவன் சிவகரன் கிளாலிசண்டையில் வீரச்சாவு என்பதை கேட்டு அதிர்ந்து போனவராய் திருவுருவப் படத்தைக் கட்டிப்பிடித்தவராய்....? ◆

# ஊர்க்கோலம்

'ஏ' 9 பாதை திறந்தாலும் என்னைப்போல் பாதசாரிகளின் பாடுதான் பரிதாபமாக இருக்கிறது. கண்டபடி கண்மூடித்தனமாகச் செலுத்தப்படும் கனரக வாகனங்களில் இருந்து மோட்டார் சைக்கிள்களில் எல்லாம் எருமை மாட்டைவிட்டு இறங்கிய யமன் பயணம் செய்யத் தொடங்கி விட்டார்.

எருமை மாட்டில் யமன் வரும்வரை மெதுவாகவே வந்து கொண்டிருந்த மரணம் இப்போது வேகவேகமாக வருவதாகத் தெரிகிறது.

விபத்தில்லாத நாளே இல்லை... சத்தமின்றியே மரணங்கள் சம்பவித்துவிடுகின்றன. வீதியில் இறங்கினால் முன்னர் வானூர்திப் பயத்தில் வான்பார்த்து - கிபிர் பார்த்து காலம் இறந்தகாலமாகி விட்டது. இப்போ தெருவீதிகளில் கதைமுடிக்க பவனிவருகிறது.

பலவேளைகளில் இந்த கண்டிவீதி அப்படியே குண்டும் குழியுமாக இருந்திருந்தால் கூடப் பரவாயில்லை போல் எண்ணத் தோன்றுகிறது.

வசதிகள் ஆபத்தையும் கூட கட்டி இழுத்துக் கொண்டு தான் வருகின்றன.

முன்னால் சொகுசு வாகனத்தில் புழுதியைவாரி பாதசாரிகள் மீது விசிறிவிட்டுச் செல்லும் வாகனத்திற்குப் பயந்து கரையொதுங்க நினைத்தால் அந்த சொகுசு வாகனத்தின் புழுதி விசிறலிலிருந்து தப்ப அதை முன்னெடுக்க விரையும் மோட்டார் சைத்கிள்காரரிடம் சிக்க வேண்டியிருக்கிறது.

பல வேளைகளில் பிழையான பக்கமாக வரும் வாகனாதிபதிகள் சரியான பாதையில் கரையொதுங்கிச் செல்லும் பாதசாரிகளை அருகில் வந்து முட்டுவதுபோல் நெருங்கி நாலு வார்த்தை அவர்களின் 'வாய்மொழி'யில் உமிழ்ந்துவிட்டு போகிறார்கள்.

அவர்களின் தாய்மொழி 'தூஷணை' வார்த்தைகளால் ஆனதோ என சந்தேகிக்க வேண்டியுள்ளது.

என்ன செய்வது பொறுத்துக் கொள்ள வேண்டியது தான்.

எனக்கு வாகன யோகம் இருக்கெண்டு ஒரு சாத்திரி சொன்னதா ஞாபகம்...

அது என்னவோ... இப்ப இருப்பது வாகனப்பயம் தான். போனவாரம் புதுக்குடியிருப்பு சந்தியில் வீதியோரம் ஷவெள்ளி பார்க்காது' நின்ற என்னருகில் சந்தியில் கிடந்த மணலைப் பார்க்காது மோட்டார் சைக்கிளை விட்டு சறுக்கி சரிய பார்த்த ஒருவர் என்னைப் பார்த்து

'அறிவிருக்கா உமக்கு... சந்தியிலை நிண்டு வெள்ளி பார்த்து சாகவா போறீர்...' என்றார்.

உற்றுப்பார்த்தேன் அவர் வேறுயாருமல்ல எனக்கு வாகனயோகம் இருக்கென்று சொன்ன சாத்திரியே தான்.

கடந்த வாரம் ஒருநாள் மதியத்தின்பின் புதுக்குடியிருப்பில் நல்லமழை - பேய்மழை எண்டுதான் கூற வேண்டும். கைவேலிக்கும் மந்துவிலுக்கும் இடையிலதான்...

திடீரென்று ஒரு புழுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கோடை மழை கொட்டோ கொட்டென்று ஒருமணி நேரத்திற்கும் அதிகமாகப் பொழிந்து தள்ளியது.

எனது நண்பர் ஒருவர் மழைபொழிந்து கொண்டிருந்த நேரம் அலுவலகத்தில் கடுமையான யோசனையில் இருந்தார்.

'என்ன இடி விழுந்தாற் போல் இருக்கிறீர்கள்' என்றேன்.

வீடு வேயேல்லை... இப்பிடித் திடீரென்று மழை கொட்டுமென்று நினைக்கேல்லை என்றார்.

அவர் முகம் சோகத்தைக் கொப்புளித்தது.

இப்படி எத்தனை குடிசைகளோ... ஏழைகள்பாடு எவ்வளவு கஷ்டம் என நினைத்துக் கொண்டேன். பல வீடுகளின் மண் சுவர்கள் கரைந்து விழுந்ததாகக் கேள்வி...

பெருமூச்சு விடுவதை விட வேறொன்றும் செய்யத் தோன்றவில்லை.

அடுத்தநாள் அந்த கடைக்காரரிடம் பொருட்கள் வாங்கும் போது கதையோடு கதையாக எப்பிடி நேற்றைக்கு மழையென்றேன்...

'சொல்லி வேலையில்லை... அப்பிடியொரு மழை... எனக்கதாலை ஒரு ஆயிரம் ரூபாய் இலாபம்' என்றார் அவர்.

'என்ன சொல்கிறீர்கள்... லாபமா?' என்றேன்.

'ஓம் மாஸ்ரர்... எங்கடை காணியிலை ஒரு நாலஞ்சு குடும்பம் கொட்டில் போட்டுக் கொண்டிருந்ததுகள்... பாதை திறந்ததோடை யாழ்ப்பாணம் வறுகீட்டுதுகள்... கொட்டில்கள் எல்லாம் அப்பிடியே கிடந்தது அதை இடித்து அள்ளி கொட்டி லெவல் பண்ண ஆயிரம் ரூபாவாவது செலவாகும் என யோசிச்சுக் கொண்டிருந்தன் இந்த மழை எல்லாத்தையும் கரைச்சு லெவல் பண்ணீட்டுது...' என்றார் அவர்...

என்னால இதுக்கும் பெருமூச்சு விடத்தான் முடிந்தது.

அந்த மனிதர் இரு தசாப்தகால அந்நியநாட்டு வாழ்க்கையின் பின்னர் தன் சொந்தமண்ணுக்கு இப்போதுதான் வந்திருந்தார்.

போரின் கொடுமை அவரை ஊரைவிட்டே ஓடச்செய்தது. திரைகடலோடி திரவியம் தேடும் முனைப்பும் அவரிடம் இருந்தது. கிடைத்த வாய்ப்பை அவர் சரியாகவே பயன்படுத்திக் கொண்டார். அவர் இப்போது வழமான குடும்பத்திற்கு வளமான வாழ்விற்கு சொந்தக்காரர்.

மண் மாறிப் போனதால் மனம்மாறிப்போகாத மனிதராக அவரைப் பார்த்தபோது ஆச்சரியப் பட்டுப் போனேன்.

ஆறாண்டு கால இடப்பெயர்வு வாழ்க்கைக்குப் பின் ஏழாம் ஆண்டில் கண்டிவீதி திறக்க கண்ணை மூடிக்கொண்டு யாழ்ப்பாணம் போனபோது கண்டும் காணாதவர் போல முகம்சுழிக்கும், அல்லது தெரியாதவர் போல் நடிக்கும் மனிதர்கள் மத்தியில், தற்காலிக திடீர் வசதிகளால் பப்பாமரத்தில் ஏறி பல்லக்கு பயணம் செல்வதாக நினைப்போர் மத்தியில், அவர் வேறுபட்டவராக இருந்தார்.

அவர்வெளிநாடு போகும் போது இருந்த தோற்றம் இப்போது இல்லை. வாட்டசாட்டமாக இருந்தார். அதனால் அவரை யார் என என்னால் உடனடியாக இனம் கண்டு கொள்ளமுடியவில்லை.

ஆனால் யாழ்நகர சனநெரிசல் மத்தியில் என்னை அவர் இனம்கண்டுகொண்டார்.

'தம்பி நீர்... எல்லே.! என்று என்பெயரைச் சொல்லிக் கேட்ட போது நான் திகைத்துப் போய் விட்டேன்.

'என்னைத் தெரியவில்லையா' என்றார். தெரியவில்லையென்று சொன்னால் அவமானம். தெரிந்தது போல் பாவனைகாட்டி. 'ஏன் தெரியாது...'என்று கேட்டேன்...

"இல்லை கண்டு கனகால மெல்லே.. இருபது வருஷ மெல்லே... இந்த கனகண்ணை முந்தினமாதிரியே இருக்கிறன்... எருமை மாடு மாதிரி... முந்தின கருவாட்டு கனகன்போலயே இருக்கிறன்...'என்றார்.

பளிச்சிட்ட நினைவில் கருவாட்டுக் கனகண்ணை நினைவில் நெளிந்தார்...

'கனகண்ணை எப்ப வந்தனீங்கள்...'

'போனகிழமைதான் தம்பி... நீங்களெல்லாம் புதுக்குடியிருப்பில என்று கேள்விப்பட்டன்... நான் அங்கை வர இருந்தன் என்றார்'

பல விடயங்களை வீதியில நின்றபடியே பேசினோம். பிரியும்போது எப்ப அண்ணை 'சுவிஸ் திரும்பிறியள்' என்றேன்.

சுவிஸ் போகப்போறதில்லை... இனி இங்கைதான்' என்றார். நான் வியப்புடன் அவரை நோக்கினேன்...

"நான் இங்கையிருந்து சண்டை தொடங்கின காலத்திலை சுவிஸ் போனனான்... இப்பதான் வந்திருக்கிறன். அந்நிய குளிர்காற்றின் நடுக்கம் மறந்து இப்பதான் சொந்த மண்ணின் புழுதியின் வாசத்தைக் குடிக்கிறன்... பலர் மரணங்கள் மலிந்த பூமி என்று எங்கடை மண்ணை சொல்லிச்சினம்... ஏன் இங்கை கூட சிலர் அப்படிக் கதைகூட எழுதிச்சினம் இங்கை. வந்தபிறகு ஒவ்வொரு கதையாய் கேட்கக்கேட்க இது வீரம் மலிந்த மண் என்று விளங்குது... நான் ரெண்டு தங்கச்சிக்கு சீதனம் சேர்க்க என்ரை வாழ்க்கையை அந்நிய மண்ணில கழிச்சன்... ஆனால் என்ரை தங்கச்சிகள் இரண்டு பேருமே சொந்த மண்ணுக்காக தங்கடை வாழ்க்கையை அர்ப்பணிச்சிட்டினம். இனிமேலும் நான் வெளிநாடென்று போனால் அதுகளின்ர தியாகத்தையும் வீரத்தையும் அவமதிச்சதாப் போய்விடுமெல்லே..

அவர் சொல்லிக்கொண்டே போனார்....நான் அவரைப் பிரமிப்புடன் பார்த்துக்கொண்டு நின்றேன். உணர்வுகள் உயிர்த்துக் கொண்டிருந்தன.

-பாதசாரி- ◆

# 90ம் நாள் நினைவாக

இகம் பரம்

28 – 12 – 1980 18 – 05 – 2002



செல்வன். சிவசுப்பிரமணியம் பிரதீபன
(பிரபா)

நீர்வேலி வடக்கு
நிழலாய் நின்று
எமை அரவணைத்தாய்
மெழுகாய் உருகி - எமக்கு
ஒளி தந்தாய்
இளம் கலைஞனாய் - நீ
சிறப்பத்தில் சிறந்தாய்...
எப்படி மறப்போம் - உனை
உன் நினைவுடன் என்றும்...

கணுக்கேணி கிழக்கு, முள்ளியவளை. அம்மா, உடன்பிறப்புக்கள், உறவினர்கள் (2108)

## வரிவிளம்பரம்

### தொடர்பு கொள்ளவும்

ஒட்டுசுட்டான் சென் பீற்றர்ஸ் உணவக உரிமையாளர் அ.ஞானேந்திரம் அவர்கள் கிருஸ்ணா என்பவரைத் தேடுகிறார். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: அ.ஞானேந்திரம் "இனியவன்" விநோத் அழகு மாடம், புதுக்குடியிருப்பு. (2327)

### தவறிவிட்டது

படித்த வாலிபர் திட்டம் இடது கரை முத்தையன்கட்டு ஒட்டுசுட்டான் என்னும் முகவரி கொண்ட கந்தையா - தவராசா ஆகிய எனது அடையாள அட்டை பரந்தன் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (2111)

### பல்கட்டுதல்

பல்கட்டுதல், பல்கிளிப் போடுதல் நல்ல முறையில் நியாயமான விலையில் செய்து கொள்ளலாம். ஒளிச்சுடர் பல்கட்டுமிடம், மொறாயஸ், புதுக்குடியிருப்பு.(2102)

### மூக்குக்கண்ணாடி

தரமான மூக்கு கண்ணாடிகளை காலதாமதமின்றி கொழும்பு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஒளிச்சுடர் மூக்குக்கண்ணாடி அகம் (மொறாயஸ்), புதுக்குடியிருப்பு. (2101)

# பதவி வெற்றிடம்

பதவி :- சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலகர்கள் (5பதவிகள்)
வேதனம்:- ஆகக் குறைந்தது ரூ15,000/=
உலக உணவுதிட்டம் & வடக்கு புனர்வாழ்வு புனர்நிர்மாண அதிகாரசபை (WFP & RRAN)
கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நீர்ப்பாசன திட்டங்கள், வடிகால்கள், கிராமிய தெருக்கள், விவசாய பாதைகள் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தகுதியானவர்களிடமிருந்து கீழ்காணும் பிரதேசங்களுக்கு விண்ணப்பங்களை கோருகின்றோம்.

01. பூநகரி, கிளிநொச்சி
02. புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு
03. மடு, மாந்தை மேற்கு மன்னார்.
04. வவுனியா வடக்கு, வவுனியா.
05. ஈச்சிலம்பற்று, குச்சவெளி, திருகோணமலை.

## தகைமைகள்

1. தேசிய தொழில் நுட்ப சான்றிதழ் (NDT) / உயர்தேசிய டிப்ளோமா சான்றிதழ் (HND), உடன் நீர்ப்பாசன வேலைத் திட்டங்கள், வீதிகள் செப்பனிடுதல் போன்றவற்றில் ஐந்து(05)வருடங்களிற்கு குறையாத அனுபவம்.
2. விண்ணப்பதாரிகள் அவர்கள் விண்ணப்பிக்கும் பிரதேசங்களில் தங்கி கடமையை மேற்கொள்ளுதல் வேண்டும்.
3. மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
4. ஆங்கிலம், தமிழ் நன்கு தெரிந்தவராக இருத்தலுடன் சிங்களம் தெரிந்திருப்பின் மேலதிக தகைமையாக கருதப்படும்.

தங்களுடைய பூரணப்படுத்தப்பட்ட விபரங்களுடன் 23.08.2002 அன்று அல்லது அதற்கு முன்னதாக

WORLD FOOD PROGRAMME
202-204, BAUDDALOKA MAWATHA, COLOMBO -07.
இற்கு அனுப்பி வைக்கவும்.

பிற்குறிப்பு: தயவுசெய்து விண்ணப்பிக்கும் பதவியை தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

(2326)

# இலவச சத்திர சிகிச்சை முகாம்

யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் சத்திரசிகிச்சை நிபுணரான DR.S. ரவிராஜ் அவர்களின் தலைமையில் மருத்துவக்குழு இலவச சத்திரசிகிச்சை முகாமொன்றினை எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் மட்டும் புதுக்குடியிருப்பு DR. பொன்னம்பலம் ஞாபகார்த்த (த) மருத்துவமனையில் நடாத்த உள்ளது. இதில் சிகிச்சை ஆலோசனைகள் பெற விரும்புபவர்கள் மேற்குறிப்பிட்ட திகதிகளில் எமது மருத்துவமனைக்கு நேரில் சமுகம்தரவும். 'நன்றி'

நிர்வாகம்
DR. பொன்னம்பலம் ஞாபகார்த்த (த)மருத்துவமனை,
புதுக்குடியிருப்பு. (சி-7307)

# சமையல் பணிப்பெண்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் வீட்டில் தங்கியிருந்து சமையல் செய்யக்கூடிய 20-45 வரை வயதுள்ளவர்கள் தேவைப்படுகின்றனர். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
வி.இல:- 15
ஈழநாதம் பணிமனை,
கிளிநொச்சி.
(சி-7301)

# மருத்துவ சிகிச்சை முகாம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், புனர்வாழ்வு அமைச்சும் இணைந்து நடைமுறைப்படுத்தும் மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில், குறிப்பிடப்படும் இடங்களில் நடைபெறவுள்ளது. இம் மருத்துவ முகாமில் பற் சிகிச்சை, கண் பரிசோதனை, பொது மருத்துவம் என்பன மேற்கொள்ளப்படும். சகல மக்களும் தங்களுடைய மருத்துவ தேவையினை நிறைவு செய்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

17.08.2002 9.00 - 4.00 மணி கிளி/கிளிநொச்சி. மகாவித்தியாலயம், கிளிநொச்சி.
17.08.2002 9.00 - 4.00 மணி கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம், அக்கராயன்.
18.08.2002 9.00 - 1.00 மணி கிளி/கிளிநொச்சி. மகாவித்தியாலயம், கிளிநொச்சி.

'நன்றி' தமிழர் புனர்வாழ்வுக் கழகம். (சி-7306)

## லாலாசோப்

# எமது தயாரிப்பான லாலா சோப் சன்சயின் சோப்

பழைய காலங்களில் நல்ல மதிப்பையும் நல்ல வியாபாரமும் நடந்தது போல் தற்பொழுது யாழ் மாவட்டத்திலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும்
**எமது லாலாசோப் சன்சயின் சோப்**
உற்பத்திக்கு தங்களால் ஆன உதவிகளை செய்து ஊக்கப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள் தற்பொழுது எமது
**லாலாசோப் சன்சயின் சோப்**
வன்னி மாவட்டத்தில் இருந்து வவுனியா மாவட்டத்துக்கு எமது வியாபாரம் நகர்ந்து கொண்டு இருக்கின்றது என்பதை எமது பாவனையாளருக்கும் எமது வர்த்தக உரிமையாளர்களுக்கும் பெருமகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். உரிமையாளர்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.
(சி.7000)

நேற்று எங்கள் கூடுவிட்டுப்பிரிந்த

# நிலவனின் ஓராண்டு நினைவு

மண்ணில் முளையாக 18 – 09 – 1972



மண்ணில் விதையாக 16 – 08 – 2001

கூடு விட்டுப்பிரிந்த குருவிகள்
மகத்துவமான தேடலொன்றில்
ஒன்றாக ஒரு கூடுகட்டி வாழும்
இந்த வாழ்வின் தவிர்க்கவியலா
நியதியாய்
ஆழிவெளியின் நிர்மலத்தை நோக்கி
ஒவ்வொன்றாய்ப் பறக்கும் குருவிகள்
துயருற்று துயருற்று இருக்கும்
குருவிகளின் வாழ்வு நீளும்
அதே கூட்டில், அதே வாழ்வில்...

மேஜர் நிலவன்
(இரங்கசாமி மதுசங்கர், திருமலை)

நீங்கா நினைவுடன்,
கல்விக்குழு நண்பர்கள்.
(சி.7302)

# இளையநாதம்



சிறுவர் கதை

## தோழியின் மருந்து

அக்காவும் தம்பியும் எப்ப பார்த்தாலும வீட்டில் சண்டை பிடித்தபடியே இருப்பார்கள். இருவருக்கும் கோபம் முந்திக் கொண்டு வரும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

ஒரு நாள் தம்பி பாடசாலைக்கு ஆயத்தமாகி மேசையில் பேனாவைப் பார்த்தான். பேனாவைக் காணவில்லை. எல்லா இடமும் தேடினான் அவனுக்குச் சந்தேகமான ஆள் அக்காதான். அவளிடம் ஓடினான். அக்கா அவனைப்பார்த்து முழுசியபடி நின்றாள்.



"இனி என் பேனாவை எடுத்தால் அடிப்பேன்!" என்றான் தம்பி.

"நீ அடித்தால் உதைப்பேன்!" என்றாள் அக்கா.

"எனக்கு மேல் தொட்டால் உன் வெள்ளைச்சட்டையில் மை தெளிப்பேன்" என்று பொரிந்தபடி தம்பி பாடசாலைக்குச் சென்றான். அக்காவும் சென்றாள்.

அன்று முழுவதும் அக்கா பாடசாலையில் சோகமாகவே இருந்தாள். இதைக் கவனித்த தோழி.

"உனக்கென்ன நடந்தது? ஏன் சோகமாய் இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"வீட்டில் எனக்கும் தம்பிக்கும் ஒரே சண்டை வருகுது. இதனால் அம்மாவுக்கும் நிம்மதி இல்லைத் தோழி" என்றாள் அக்கா.

"நீ பொறுமையாய் இருந்தால் சண்டை வராது'' என்று புத்துமதிகள் சொன்னாள் தோழி.

"பொறுமையாய் இருக்க என்னால் முடியாது." என்றாள் அக்கா.

"சண்டை வராமல் இருக்க என்னிடம் மருந்திருக்கிறது. என்னுடன் வீட்டுக்கு வா மருந்து தருகிறேன்" என்று வீட்டுக்குக் கூட்டிச் சென்று போத்தலில் இருந்த மருந்தை தோழி எடுத்துக் கொடுத்தாள். மருந்தை வாங்கிய அக்கா மருந்தை என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்க "சண்டை வரும்பொழுது கொஞ்சத்தை வாய்க்குள் விட்டு விழுங்காமல் இருக்கவும்.சண்டை நின்றவுடன் துப்பிவிடு!" என்றாள் தோழி. அக்கா மருந்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தாள்.

அடுத்த நாள் வீட்டில் அக்கா படித்துக் கொண்டிருந்தாள். அப்போது தம்பி வந்தான்.

"ஏன் என்னுடைய கதிரையில் இருக்கிறாய்? உனக்குச் சரியான திமிர் பிடித்துவிட்டது" என்றான்.

அக்கா உடனே போத்தலில் இருந்த மருந்தை எடுத்து வாய்க்குள் விட்டாள்.

"எனி என்னுடைய கதிரையைத் தொட்டுப்பார், கால் முறியும்" என்றான் தம்பி கோபமாக. அக்கா வாய்க்குள் மருந்தை வைத்துக் கொண்டு பேசாமல் இருந்தாள். அக்கா பேசாமல் இருப்பதைப் பார்த்த தம்பிக்குவியப்பாய் இருந்தது. "அக்கா ஏன் சண்டைக்கு வருகிறாள் இல்லையென யோசித்துக்கொண்டு தம்பி வெளியே சென்றான்.

சில நாட்களுக்குப் பின் அக்கா தோழி வீட்டுக்குச்சென்றாள்.

"தோழி... தோழி... இப்ப எனக்கும் தம்பிக்கும் சண்டை வருவதில்லை. மருந்தும் முடிந்துவிட்டது!" என்றாள் அக்கா.

"அடிபைத்தியம்! உனக்கும் தம்பிக்கும் சண்டைவராமல் இருக்க காரணம் உன் பொறுமை தான்! உன் மௌனம்தான்! நான் தந்தது மருந்தில்லை. வெறும் தண்ணிதான்! என்றாள் தோழி.

பிரஷகி-

## விளக்குகள் வந்த விதம்....



மின் விளக்கு நடைமுறைக்கு வராதமுன் காலத்தில் உலகம் முழுவதும் எண்ணை விளக்குகளைத் தான் உபயோகித்து வந்தன.

அதன்பிறகு நிலக்கரி ஆவியின் துணைகொண்டு எரியக்கூடிய பிரகாசமான விளக்கு வழக்கத்தில் வந்தது.

அந்த நிலக்கரி ஆவி விளக்கை முதன்முதலாகக் கண்டு பிடித்தவரும் ஒரு ஆங்கிலேயப் பாதிரியார்தான். அவர் பெயர் ஜே.கிளைடன் என்பதாகும்.

நிலக்கரி சுரங்க வெடிப்புகளிலிருந்து ஆவி புறப்படுவதை பாதிரியார் கிளைடன் பலதடவை கண்டிருக்கிறார்.

அந்த ஆவி எவ்வாறு ஏற்படுகிறது என்று கண்டறிய பாதிரியார் விரும்பினார்?. நிலக்கரித் துண்டைக் கொளுத்திப் பார்த்தால் ஒரு வேளை ஆவி புறப்படுமோ என நினைத்து ஒரு நிலக்கரித்துண்டை ஒரு குழாயிலிட்டு தீயிட்டுக் கொளுத்திப் பார்த்தார்.

குழாய் வழியாக ஆவி வெளியேறியது. வெளியேறும் ஆவி பக்கமாக; தற்செயலாக எரியும் நெருப்பைக் கொண்டு சென்றபோது ஆவி தீப்பிடித்து எரியத் தொடங்கியது.

அப்போது எரியும் ஆவியிலிருந்து மிகவும் பிரகாசமான ஒளி வீசுவதைக் கண்டுபாதிரியார் வியப்படைந்தார்.

பின்னர் கிளைடன் நிலக்கரி வாயுவினால் எரியக்கூடிய விளக்கு ஒன்றைஅமைத்தார்.

அது எண்ணை விளக்கைவிடப் பலமடங்கு அதிக ஒளியைத் தந்தது. புகை போன்ற தொல்லைகளும் இல்லை.

பின்னர் நிலக்கரி வாயு விளக்கு பல வியாபாரிகளால்; விளம்பர நோக்கத்துடன் பெருமளவுக்கு தயாரிக்கப்பட்டது.

நாளடைவில் உலகம் முழுவதும் அந்த விளக்கு வந்துவிட்டது.

மின்விளக்கு மக்களின் உபயோகத்திற்கு வரும்வரை நிலக்கரி ஆவி விளக்குத்தான் உலகம் முழுவதும் பெருஞ் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. இன்றும் கூட பல நாடுகளில் நிலக்கரி ஆவி விளக்கு பெருமளவில் பயன்படுத்தப்பட்டே வருகின்றது.

## வாரம் ஒரு குறள்



உங்கள் தந்தை உங்களை வளர்த்து ஆளாக்கி, கல்விஅளித்து, வேண்டிய அனைத்தும் தன்னால் முடிந்தவரை செய்கிறார் அல்லவா... உங்களின் உயர்வும் - மகிழ்ச்சியும்தான் அவர்களின் இலட்சியாக உள்ளது. அதற்கு நன்றியாக நீங்கள் என்ன செய்யவேண்டும். தெரியுமா?

நீங்கள் வளர்ந்து பெரியவனானதும் நாட்டுக்கும் வீட்டுக்கும் பெருமைதரும் திறன் கொண்டோராய் விளங்குவதேயாகும்.

அப்போது இந்த உலகம் இந்தப் பிள்ளையைப்பெற இவனது தந்தை என்ன தவம் செய்திருப்பான் என வியந்து பாராட்டும்.

அந்தப் பாராட்டைப் பெற்றுக்கொடுப்பதே உங்கள் தந்தைக்கு ஆற்றும் சிறந்த நன்றியாக இருக்கும்.

இதனையே வள்ளுவர்
"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்"
என்று கூறுகிறார்.

## மெழுகுவர்த்தி தாங்கி செய்வது எப்படி?




செய்முறை:-
1. 12 ச.மீ x 75ச.மீ ஆகிய இரண்டு அளவு பேப்பர்களை சுருட்டுங்கள்.
2. சுருளின் இடையாக 5.செ.மீ தூரத்திற்கு வெட்டுங்கள்.
3. வெட்டிய சுருளை இலைகளாக விரித்து கீழ்நோக்கி மடியுங்கள்.
4. சுருளின் மத்திய பகுதியை மெதுவாக இழுக்கவும்.
5.மெழுகுவர்த்தி தாங்கியின் முடிவான அமைப்பு இதுவாகும்.

## விடுகதைகள்

1. காட்டிலும் மேட்டிலும் முளைக்காத பனை அது எது?
2. சிவப்புக்கார சிங்காரிக்கு கறுப்புக்கல் மூக்குத்தி அது என்ன?
3. ஓடையில் ஓடாத நீர் ஒருவரும் குடிக்காத நீர்?.
4. பாடல் இல்லாத ஆட்டம் அது என்ன ஆட்டம்?
5. காட்டில் பச்சை கடையில் கறுப்பு வீட்டில் சிவப்பு அது என்ன?

1.கற்பனை 4.கூத்தாட்டம்
2.குண்டுமணி 5.தேயிலை
3.கண்ணீர்

ந. இந்துஜா.
தரம்-12. கலைப்பிரிவு,
கிளி-பிரமந்தனாறு ம.வி

## கல்விப்பயன்

மனிதனானால் நல்லபண்பு வேண்டும் - நற்
பண்பு வர எமக்கு கல்வி வேண்டும்
கல்வி பெற நல்ல ஞானம் வேண்டும் - ஞானம்
வர நல்ல சிந்தை வேண்டும்

வையம் தனில் நாம் வாழவேண்டும் - நன்றே
வாழ நல்ல வழிகள் வேண்டும்
வழிகள் சொல்ல வழிகாட்டியுண்டு - அது
கல்வியென்பதை மறக்கலாமோ

கற்கையிலே அது கசக்குமடா - கற்ற
பின்பே அது இனிக்குமடா
மற்றவரின் பார்வைக்கு - எமை
நல்வராய் அதுவாக்குமடா

இளமையிலே அது சிறிதாய்த் தெரியும் - பின்
முதுமையானதும் அதன் விளைவு தெரியும்
இளமையிலே அதைப்புரிந்து கொண்டால் - என்றும்
அது துணை புரியும்

உத்தமராய் எமையாக்குமடா - உலகம்
போற்ற அது வைக்குமடா
கசடறவே அதைக் கற்று விட்டால் - உயர்
கல்விமானாய் நாம் ஆகலாமே

அரசகேசரி கோகுலராகன்
அரியாலை மேற்கு
யாழ்ப்பாணம்

## ரதனும் சுதனும்



ரதன்:: கரப்பான் பூச்சியின் இரத்தம் வெண்மையாக இருப்பதேன்?

சுதன்: கரப்பான் பூச்சியின் இரத்தத்திற்கு ஹீமோலிம் என்ற பெயர். இந்த இரத்தத்தில் ஹீமோகுளோபின் என்ற நிறம் இல்லை. ஆதலால் கரப்பான் பூச்சியின் இரத்தம் நிறமற்றதாக இருக்கிறது.

நமக்கு ஹீமோகுளோபின் இரத்த சிவப்பணுக்களில் உள்ளது. இதனால் நமது இரத்தம் சிவப்பாக இருக்கிறது. கரப்பானின் இரத்தத்தில் சுவாச நிறமியான ஹீமோகுளோபின் இல்லாததால் அதன் இரத்தம் சுவாசத்தில் பங்குகொள்வதில்லை.

# ஓயாத அலைகள் -01

வரவு -ஆறு

ராகவன்




# குதூகலம்

## பாவமன்னிப்பு



எக்கச்சக்கமா குடித்து விட்டு ஞாயிற்றுக்கிழமை அன்று சேச்சுக்கு வந்த மனிதனைப் பாதிரியார் கோபித்துக் கொண்டார்.

''சேச்சுக்கு வரும்போது குடித்துவிட்டு வருவது பாவம் என்று தெரியாதா உனக்கு?'' என்று கேட்டார்.அவன் சொன்னான் "எனக்குத்தெரியும் பாதர், நான் பாவமன்னிப்பு பெறுவதற்காக அல்லவா வந்திருக்கிறன்"

## ஆடிய ஆட்டம் என்ன?



ஒரு குடிகாறன் நன்றாக குடித்து விட்டு வீடு வந்தான். பூட்டைத்திறக்க முடியாமல் அவதிப் பட்டான். எத்தனை முயன்றாலும் பூட்டின் தூவாரத்தில் சாவியைத் துளைக்க முடியாமல் ஆடினான். பக்கத்து வீட்டுக்காறனை உதவிக்கு அழைத்தான். அவன் இவனிடம் ''சாவியைக்கொடு நான் திறந்துவிடுகிறேன்'' என்றான். குடிகாறன் சொன்னான் '' நீ திறக்கவேண்டாம். நானே திறக்க முடியும். இந்த வீடு என்ன ஆட்டம்போடுகிறது. கடிகாரத்தின் பெண்டுலம் மாதிரி இப்படியும் அப்படியும் ஆடித்தொலைக்கிறது. நீ வீட்டை ஆடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொள். நான் பூட்டைத் திறந்துவிடுகின்றேன்''

## பொய்யர் பரம்பரை



ஒரு குடும்பத்தில் பாட்டனுக்குப் பாட்டன், அப்பன், பிள்ளை எல்லோருமே புளுகர்கள். ஏன் தெரியுமா?

பாட்டனுக்குப் பாட்டன் அரசியல்வாதி. இயல்பாகவே அரசியல்வாதிகள் பொய்யர்கள்.

பாட்டன் ஒரு வக்கீல். வக்கீல்தொழில் நிமித்தம் பொய் சொல்லியாக வேண்டும்.

அப்பன் ஒரு டாக்டர். டாக்டரும் நோயாளர்களிடம் பொய்தான் சொல்வார்.

பிறகு என்ன! பிள்ளை பொய்சொல்லச் சொல்லிய தரவேண்டும்.

## என்னாலும் முடியும்...



அமெரிக்கனும் ரஷ்யனும் விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஜனநாயகமா? கம்யூனிசமா? எது உயர்ந்தது என்று அமெரிக்கன் சொன்னான்.

"ஜனநாயகத்தில் நீ உன் கருத்துக்களைத் துணிந்து சொல்லலாம். உனக்கு சுதந்திரமும் உண்டு. நான் நினைத்தால் ஜனாதிபதி புஷ் ஒரு மடையன் என்று சொல்லமுடியும்"

ரஷ்யன் தாமதிக்காமல் பதிலுக்குச் சொன்னான் ''அது என்ன பிரமாதம்?நானும் கூட ஜனாதிபதி புஷ் ஒருமடையன் என்று சொல்லமுடியுமே!''



## 'ஓம் நமோ நாராயணா'

## ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் வட்டக்கச்சி

# வருடாந்த பெருவிழா 2002

பரந்தாமன் அடியார்களே!

மேற்படி ஆலய வருடாந்தப் பெருவிழா (23.08.2002) ஆவணி மாதம் 7ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

## உபயகாரர்கள்

| | | |
|---|---|---|
| | 1ம் திருவிழா கொடியேற்றம் | - ஸ்ரீ ரங்கநாதர் வீதி மக்கள். |
| | 2ம் திருவிழா ஸ்ரீராம வடிவம் | - மாயவனூர் மக்கள். |
| | 3ம் திருவிழா இலட்சுமி நாராயணர் | - ஆறுமுகம் வீதி மக்கள். |
| | 4ம் திருவிழா அரங்கநாதர் திருக்கோலம் | - கட்சன் வீதி மக்கள். |
| | 5ம் திருவிழா ஆண்டாள் உற்சவம் | - சிவிச்சென்ரர் மக்கள். |
| | 6ம் திருவிழா பகல் - மோகினி வடிவம் | - சில்வா, சிவசுந்தரம் வீதி மக்கள். |
| | மாலை - கரிகரமுகூர்த்தம் | - விநாயகர் வீதி மக்கள். |
| | 7ம் திருவிழா வெண்ணைத் திருவிழா கண்ணன் அவதாரம் | - புதுப்பாலம் பகுதி மக்கள். |
| | 8ம் திருவிழா வேட்டைத் திருவிழா மாலை - சப்பறம், இரவு - கிருஷ்ண ஜெயந்தி | - ஸ்ரீ ரங்கநாதர் 2ம் பகுதி மக்கள். |
| 31.08.2002 | 9ம் திருவிழா தேர்த்திருவிழா மாலை - உறியடி உற்சவம் | - வட்டக்கச்சி இராமநாதபுரம், கிளிநொச்சி,பரந்தன், தர்மபுரம் வர்த்தகப் பெருமக்கள். |
| 01.09.2002 | 10ம் திருவிழா தீர்த்தத்திருவிழா | - த.பெ.சந்தி சாரதாம்பாள், மாவடி அம்மன், சந்தையடி, வாழ்மக்கள். |
| | 11ம் திருவிழா திருவிழா பூங்காவனம் - பகல் - சங்காபிஷேகம் - மாலை - திருக்கல்யாணம் | - இராமநாதபுரம் 5ம், 6ம், 7ம் பகுதி கல்மடுநகர் மக்கள் |
| | 12ம் திருவிழா ஆஞ்சனேயர் உற்சவம் | |

*குறிப்பு:– தேர், தீர்த்தம் உற்சவங்கள் அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும். தினமும் பகல் திருவிழாக்கள் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி பகல் 11.00 மணிக்கு நிறைவுறும். மாலைத் திருவிழாக்கள் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி தினமும் 8.00 மணிக்கு நிறைவுறும். கிருஷ்ணபெருமானின் திருவிழா நிகழ்ச்சிகளைக் காலையும், மாலையும் வருகைதந்து அவனருள் பெறுவீர்களாக.*

***ஓம் ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்***

**விளம்பர அன்பளிப்பு:**

**சுமங்கலி நகைப்பூங்கா**
**முதன்மைச்சாலை கிளிநொச்சி.**



ஸ்ரீராம ஜெயம்
**ஆ.மு.சு.மணி**
**அடைவு பிடிப்பகம்,**
**முதன்மைச்சாலை கிளிநொச்சி.**

(சி-7309)

# மாபெரும் இலக்கியப் போட்டி

**2ம் லெப். மாலதி நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு 'கப்டன் வானதி வெளியீட்டகம்' நடாத்தும் கவிதை, சிறுகதை, குறுநாவல், ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகள்.**

## நிபந்தனைகள்:-

தமிழர் தேச விடுதலை, சமூக விடுதலை என்பவற்றை கருப்பொருளாக கொண்டே படைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ புதுக்கவிதைகளாகவோ அமையலாம்.
கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும். சிறுகதைகள் 6 பக்கங்களுக்கு (புஸ்காவ்தாளில்) மேற்படாமல் அமைதல் வேண்டும்.
குறுநாவல் 100 பக்கங்களுக்கு (புஸ்காவ்தாளில்) மேற்படாமல் அமைதல் வேண்டும்.
கட்டுரை 10 பக்கங்களுக்கு (புஸ்காவ்தாளில்) மேற்படாமல் அமைதல் வேண்டும்.
ஓவியங்கள் தட்டச்சுத் தாளில் (28 cmx20cm) மட்டும் வரையப்படுதல் வேண்டும்.
பெண்கள் மட்டுமே போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.
ஒருவர் எத்தனை படைப்புகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
படைப்புக்கள் அனைத்தும் புஸ்காவ்தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட வேண்டும்.
நாட்டின் எப்பகுதியை சேர்ந்தவர்களும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
படைப்புகள் அனைத்தும் தபால் மூலமாகவே அனுப்பி வைக்கப்படவேண்டும்.
படைப்புக்கள் வேறு வெளியீடுகளில் வெளிவந்தவையாகவோ, வேறு போட்டிகளுக்கு அனுப்பப்பட்டவையாகவோ இருக்கக் கூடாது.
எழுதியவரின் பெயர் முகவரி என்பவை தனித்தாளில் தெளிவாக எழுதப்பட்டு இணைக்கப்பட வேண்டும்.
நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**"ரூபா 25000/- ற்கு மேற்பட்ட தொகையினை பரிசுகளாக வெல்ல இன்றே தயாராகுங்கள்"**

முடிவுத்திகதி:- 25.09.2002
படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

"இலக்கியப்போட்டி, 2002
அறிவு அமுது பொத்தகசாலை
பிரதான வீதி
கிளிநொச்சி.

(சி.7304

# முதலாம் ஆண்டு நினைவில்



தாயின் மடியில
18 – 09 – 1972

தாயக மண்ணில்
16 – 08 – 2001

## மேஜர் நிலவன்

*இரங்கசாமி மதுசங்கர் -(திருமலை)*

நிலவா......
நிறைவுறும் ஓராண்டிலும்
நீங்காது நின் நினைவுகள்.

*அம்மா, அப்பா*
*சகோதரர்கள், மைத்துனர்கள்*

(சி.7309)

## இயல்பு நிலை....

அணுகுமுறையைக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது.

அதன்படி முதலில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதைப் படிப்படியாக அமுல்படுத்துவதன் மூலம் இயல்புநிலையை படிப்படியாக மீளக்கட்டியெழுப்புவது சாத்தியம் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் இதிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இயல்பு நிலையை மீளக்கொணர்வது என்பது எல்லாவிதத்திலும் இராணுவமய நீக்கம்தான். யுத்தநிறுத்தமும் பாதைகளைத் திறப்பதும் பொருட்களை வரவிடுவதும் மின்சாரம் கொடுப்பதும் நற்சகுணங்களே. ஆனால் யுத்த நிறுத்தமே ராணுவமய நீக்கம் என்றாகி விடாது. அது ஒரு நல்ல தொடக்கம் மட்டுமே.

பொருட்களை வரவிட்டாலும் பாதைகளைத் திறந்தாலும் கூட வாழ்க்கை முட்கம்பிச் சுருட்களாலும் மண் அரண்களாலும் சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் வரை இயல்புநிலை தோன்றாது.

படையாட்கள் அவர்களுடைய பழைய பழக்கப்பட்ட நாட்டாண்மைத் தனத்தைக் காட்ட முடியாத அளவுக்கு அவர்களை அன்றாட வாழ்வின் எல்லா அம்சங்களிலும் இருந்து அகற்ற வேண்டும்.

சனங்களின் இயல்பு வாழ்வில் எந்த ஓரிடத்திலும் படையாட்கள் தலையிடாத ஒரு நிலையே ராணுவமய நீக்கம். இதுதான் மெய்யான இயல்பு வாழ்க்கை.

மாறாக உயர் பாதுகாப்பு வலயங்களை உருவாக்குவதும் வீதிகளில் புதிதாக காவலரண்களைக் கட்டுவதும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ந்துவரும் ராணுவமய நீக்கத்திலுண்டாகும் சறுக்கல்களே.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் விதிக்கப்பட்ட காலக்கெடு முடிந்து இரண்டு கிழமைகள் ஆகிறது. ஆனால் இன்னும் பல வீதிகள் திறக்கப்பட வேண்டியுள்ளன. இன்னும் பல இடங்களிலிருந்து படை விலக வேண்டியுள்ளது.

அண்மையில் அமெரிக்காவில் வூட்ரோ வில்சன் நிலையத்தில் பேசியபோது ரணில் விக்கிரமசிங்க ஒன்றைச் சொன்னார். ராணுவத்தில் அதிகமானோர் யாழ்ப்பாணத்தில் நிற்க விரும்பவில்லையாம். அவர்கள் வீடு திரும்பவே விரும்புகிறார்களாம். அவர்களைப் படிப்படியாகத் திரும்பியழைக்கலாம் என்று தான் கருதுகிறாராம். ஆனால் அதற்கு முதலில் சமாதானம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமாம்.

இதில் ரணில் கூற வரும் ராணுவமய நீக்கம் சமாதானத்தின் முன் நிகழ்வதில்லை. அது சமாதானத்தின் பேறாய் நிகழ்வது.

தமது பேரம் பேசும் சக்தியை இழந்துவிடாதிருக்கும் அதேசமயம் ராணுவமய நீக்கத்தையும் செய்வதே அவரது நோக்கம் போலத் தோன்றுகிறது.

ஆனாலிது ஒரு ஆபத்தான விளையாட்டு. பேரம் பேசும் சக்தியைப் பேணும் பொருட்டு ராணுவத்தை அப்படியே வைத்துக்கொள்வது இயல்புநிலையை உருவாக்குவதற்காக குறிப்பிடத்தக்க அளவு ராணுவமய நீக்கத்தைச் செய்வது ஆகிய இரு நேரெதிர் முரண்களுக் கிடையில் அவர் சமநிலையைப் பேணவிழைவது போலத் தோன்றுகிறது.

இதிலவர் பெறும் வெற்றியே அவருடையதும் சமாதானத்தி னுடையதும் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறது.

## நேர்நோக்கு

# அவல நிலை மாறுமா?

1995ல் யாழ் குடாநாடு மீது மேற்கொள்ளப்பட்ட சூரியகதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் சிறிலங்காப் படையினரால் கைதாகி காணாமல் போனோரின் பெற்றோர் பாதுகாவலர்கள் மீண்டும் ஒரு மறியல் போராட்டத்தை நடத்தியுள்ளனர். சுமார் 6 வருட்ங்களாக இவர்கள் தமது உறவுகள் எங்கே! எனத் தேடி நடத்திவரும் போராட்டங்கள் பயன் எதுவும் அழிக்காத நிலையில் புதியதொருஅரசியல் நிலையில் அவர்கள் இப்போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

1996ம் ஆண்டு முதல் சிறிலங்காப் படையினரால் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டும் காரணமெதுவும் கூறப்படாமலும் தம்மை யார் என்று அடையாளம் காட்டாத நிலையிலும் அப்பாவிகள் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களில் பலநூற்றுக்கணக்கானோரின்கதி என்னவாயிற்று என்பது இன்றுவரை தெரியாத நிலையே காணப்படுகிறது. இவர்களில் ஒரு தொகுதியினர் படையினரால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டு இனம்தெரியாத இடங்களில் புதைக்கப்பட்டமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிரிசாந்தி குமாரசாமி என்ற மாணவியினதும் அவரது தாய் சகோதரன் அயலவர் ஆகியோரதும் கொலையில் சம்பந்தப்பட்ட படையினரின் வாக்குமூலம் செம்மணியில் புதைக்கப்பட்ட சிலரது சடலங்களை மீட்க உதவிய அதே வேளை இவ்வாறு காணாமல் போன ஏனைய 800க்கு மேற்பட்ட அப்பாவிகளின் நிலை என்னவாயிற்று என்ற அச்சத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

இப்புதைகுழிகள் எழுப்பிய உலகளாவிய உணர்வலைகள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அழுத்தம் கொடுத்த போது அவர் காணாமல் போனோரின் பெற்றோர் உறவினர்களைச் சந்திக்க ஒப்புக்கொண்டார். காணாமல் போனோர் குறித்து தேடுதல் நடத்தி விபரம் தெரிவிக்க ஆறுமாதங்கள் கால அவகாசம் கோரினார். அதன் பின்னர் பல ஆறுமாதங்கள் கடந்து விட்ட போதிலும் கூட அவரால் எதுவித தகவலும் வழங்கப்படவில்லை.

இதற்குப் பின்னர் காணாமல் போனோரின் பெற்றோர் உறவினர்கள் நடத்திய போராட்டங்கள் காரணமாக இவ்வாறு காணாமல் போனோர் தொடர்பாக மரணச் சான்றிதழ் வழங்க சந்திரிகா அரசாங்கம் முன்வந்த போது இவர்கள் படையினரால் கைதாகி காணாமல் போனோர் அல்லது படுகொலை செய்யப்பட்டோர் என்பதை ஒப்புக்கொண்டு மரணச் சான்றிதழ் வழங்க சந்திரிகா அரசாங்கம் முன்வரவில்லை.

கடந்த காலங்களைப் போலவே இவ்வாறான படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது விசாரணை நடத்தவோ அவர்களைத் தண்டிக்கவோ முன்வராத அதேவேளை அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஜானக பெரேரா போன்ற உயரதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

இச் சம்பவங்களில் தொடர்புடைய பல இராணுவ இடைநிலை அதிகாரிகள் அவர்கள் வேறொரு இடத்தில் யுத்தத்தில் கடமையாற்றுவதாக கூறி விசாரணைக்கு அழைக்கப்பட முடியாது அரசாங்கம் அவர்களைப் பாதுகாத்தது.

யாழ். குடாநாட்டில் மட்டுமல்ல 1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலையும் மனிதஉரிமை மீறல்களுடன் தொடர்புடைய படை அதிகாரிகளை மக்கள் இனம் காட்டியும் முன்னைய அரசாங்கங்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதாவது கடந்த காலத்தில் தமிழர் மீது புரியப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒருவர் கூடத் தண்டிக்கப்படவில்லை என்பதே யதார்த்தமாக இருக்கிறது.

இவ்வாறான நிலையில் தான் இப்பொழுது தமது பிள்ளைகளின் நிலை அறிய காணாமல்போன படையினரின் பெற்றோர் உறவினர்கள் போராட்டம் நடத்தி தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குறுதிக்கு இணங்க போராட்டத்தை இடைநிறுத்தி வைத்திருக்கின்றனர்.

அதாவது சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் தாம் சந்திக்க ஏற்பாடு செய்து தர வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கை இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தப்பாடுபட்டு வருவதாக கூறும் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தமது பிள்ளைகளின் நிலையை தமக்கு அறியத் தருமாறு இவர்கள் கோரிக்கை விடுக்க உள்ளனர்.

இராணுவ நெருக்கடிக்குள் வாழ்ந்த இம்மக்கள் கடந்த ஆறு வருடங்களுக்கும் மேலாக தமது உறவுகளின் நிலை தெரியாது கலங்கி வாழ்ந்து வருகின்றனர். தோன்றிவரும் சமாதான சூழ்நிலையிலாவது தங்கள் பிள்ளைகளின் நிலைமை அறிந்து கொள்ள முடியுமா? என்ற ஆதங்கத்துடனேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க விரும்புகின்றனர்.

இவர்களின் நிலையை அறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உண்மையிலேயே உதவுவாரா? என்ற கேள்வி தற்போழுது எழுகிறது. அவ்வாறு காணாமல் போனோர் குறித்த உண்மை நிலையை அறிய அவர் உதவுவாரேயானால் அது சமாதானப் பாதையில் பயணிக்க மேலும் ஓர் உந்து சக்தியாக அமையும்.

• வேலவன்

# வாத்தியார் வார்த்தை



பண்டாரநாயக்காவின் பாரம்பரியக் கட்சியின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி, ரோகண விஜேவீராவின் தொண்டர்களின் தலைமையிலான ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்யப்போகினமாம்...

சிறிமா பண்டாரநாயகாவின் ஆட்சியிலை தான் முந்தி ஜே.வி.பியினரை இந்தியப்படையை கொண்டு வந்து சிறிலங்காப்படைக்கு துணையாக்கி கண்டபடி சுட்டு களனி கங்கையிலும் மாவலிகங்கையிலுமாக மிதக்க விட்ட சம்பவம் நடந்தது.

1971இலை நடந்த அந்த சம்பவத்தில் 25000 சிங்கள இளைஞர்களை சிறிமா அம்மாவின் இரும்புக்கர ஆட்சி அழித்தொழித்தது.

1980களின் இறுதியில் மீண்டும் கிளர்ச்சியில் இறங்கிய ஜே.வி.பியினர் சிறிமாவோவின் சந்திரிகாவின் கணவர் விஜேகுமாரணதுங்கவை சுட்டுக் கொன்று பழிதீர்த்தனர். சந்திரிகா ஜே.வி.பியினரை தனது கணவரைக் கொன்ற கொலைகாரர் என பகிரங்கமாகவே குற்றம் சாட்டிய சம்பவம் புதிய மிலேனியத்தில் நடந்தது.

இப்போ சந்திரிகா - ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப் போகிறாவாம்...

ரோகண விஜேவீராவின் ஆவி ஜே.வி.பியை மன்னிக்குமா?
சந்திரிகா விஜேகுமாரணதுங்கவின் ஆவி மன்னிக்குமா?

# வைர வரிகள்

• இன்னொருவர் சாதிக்க இயலாத ஏதாவதொன்றைச் சாதிக்கும் திறமையை ஒவ்வொருவரும் பெற்றிருப்பார்.

-புப்லிலியஸ் ஸைரஸ்

• வாய்மை, அழகு, கண்ணோடு பொருத்தப்படும் கான்டாக்ட் லென்ஸ், ஆகியவற்றைப் போலவே, திறமையும், காண்பவர் கண்ணில் தான் உள்ளது.

-லாரன்ஸ் பீட்டர்: ரேமாண்ட் ஹஸ்

• சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான ஆள், சரியானதை, சரியான வழியில், செய்வதே - திறமை.

-கலீல் கிப்ரான்

• வெற்றி அடைவதில் மிகக் கடினமானது என்னவென்றால், ஒருமுறை வெற்றி அடைந்த பின் தொடர்ந்து வெற்றி அடைந்து கொண்டேயிருக்க வேண்டும். திறமை, இப்பந்தயத்தில் தொடக்க நிலைதான். அந்தத் திறமையை வளர்க்க ஓயாது பாடுபட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். என்றாவது ஒரு நாள் அதை நீ எட்டிப்பிடிக்க முயலும் போது, அது இல்லாமல் போய் விடும்.

இர்விங் பெர்லின்

• திறமை, ஒரு நீர்த் தொட்டி: மேதை, ஒரு நீருற்று.

-எட்வின் பெர்ஸி விப்டன்

• திறமை, பணம் போன்றது. சிறிதாவது இருந்தால்தான், அதைப் பற்றிப் பேசவேண்டு மென்பதில்லை.

-ஜுல்ஸ் ரெனார்ட்

# படமும் தகவலும்



முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா சிறுவர்கள் சூழ்ந்து நிற்க மகிழ்ச்சி பொங்க பிறந்தநாள் ‘கேக்’ முன்னே காணப்படுகிறார். அவர் ஜொகன்னெஸ் பேர்க்கில் தனது 84வது பிறந்தநாளை 20-07-2002 அன்று பாரம்பரிய சிறுவர்களுக்கான விருந்தொன்றை வழங்கிக் கொண்டாடினார்.



உலக புகழ் பெற்றவரும் நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளருமான ஏர்னஸ்ட் ஹேமிங்வே போன்ற தோற்றம் கொண்ட முதியவர்கள் அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம்



ஈரானிய ஜனாதிபதி முகமட் ஹட்டானி அண்மையில் மலேசியாவிற்கு விஜயம் செய்த போது மலேசியப்பிரதமர் மகதீர் முகமதுவுக்கு தன்னுடன் வந்த தூதுக்குழுவினரை அறிமுகப்படுத்தி வைக்கின்றார்.



8மாத வயது கொண்ட ஆசிய யானைக்குட்டியான ‘கண்டுல’ வெய்யிலின் கொடுமையில் இருந்து தன்னைப்பாதுகாக்க தாயின் நிழலில்-வயிற்றின் கீழ் படுத்து துயில் கொள்ளுகின்றது. வாசிங்டன் தேசிய மிருகக்காட்சிசாலையில் 29-07-2002 அன்று எடுக்கப்பட்டபடம்.



மனிதருக்குள் தான் ஒற்றுமையும் அமைதியுமில்லை. ஆனால் கொடிய காட்டு விலங்குகளிடையே அது மெல்ல மெல்ல உருவாகி வருகின்றது போலும். யானைகளும் மந்தைகளும் ஒன்றாக நின்று கழிவுப்பொருட்களிடையே உணவு தேடுகின்றன. இக்காட்சி பொலநறுவையில் படம்பிடிக்கப்பட்டது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.